Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஜூன் 13 - 19, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1018

## காணி, பொலிஸ் அதிகாரங்கள் வேண்டும்





## இந்தியாவிடம் மந்திரக்கோல் இல்லை!

## நடுக்கடலில் துரத்தியடிக்கப்பட்ட கொள்ளையர்கள்!

## பர்மாவில் ஜனநாயகம் பிறக்குமா?

## விபூதி (திருநீறு)

பசுவின் மலமாகிய சாணத்தை அக்கினியால் சுடுவதன் மூலம் உண்டாகும் நீறாகிய விபூதியானது சைவமயிகள் என்று சொல்லப்படுகின்ற ஒவ்வொருவரும் தம் உடம்பிலே தரிக்கவேண்டிய அடையாளத்தின் சின்னமாக விளங்குகிறது.

ஒரு மனிதனுடைய நுதலில் (நெற்றியில்) விபூதி காணப்படுமானால் அவன் ஒரு இந்து மதத்தவன் என்பதை விளங்கிக் கொள்ளமுடிகிறது.

விபூதியானது வெண்ணிறமாக இருத்தலே உகந்ததாகக் கொள்ளப்படுகிறது. இவ்விபூதியை நடந்துகொண்டோ அன்றி படுத்திருந்து கொண்டோ நெற்றியில் தரிக்காது, வடக்கு முகமாகவேனும் அல்லது கிழக்கு முகமாகவேனும் பார்த்தவண்ணம் நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணார்ந்து "சிவசிவ" என்று உச்சரித்தபடி நடுவிரல் மூன்றினாலும் தரித்தல்வேண்டும். உறங்கச்செல்லும் முன்பும், நித்திரை விட்டெழுந்த பின்பும், சூரியன் உதிக்கும்போதும், அஸ்தமிக்கும் போதும், ஸ்னானம் செய்தவுடனும் உணவு உண்பதற்கு முன்பும்பின்பும் விபூதியை அவசியமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டுமென சைவ ஆகமங்கள் கூறுகின்றன.

அனந்த நாராயணன், கைவேலி.

## ஆன்மீகம்

## பாவங்கள் போக்கும் அன்பு

நாம் ஒரு உயிரின் மீது அன்பு செலுத்தத் தொடங்கிவிட்டால் அந்த உயிரானது நமக்கு ஒரு சிறு தீங்கினைச் செய்யும்போது அத்தீங்கானது நமது பார்வையில் பாரதூரமாகத் தென்படுவதில்லை.

வீட்டிலே நாம் நாய்க்குட்டி வளர்க்கும்போது, அக்குட்டியானது தன்னை வளர்க்கும் எசமான் என்ற அன்புரிமையில் சிலசமயம் கடித்துவிடுகிறது. அந்த நாய் கடித்துவிட்டதே என்பதற்காக குட்டி என்றும் பாராது அதை எப்படி அடித்துவிரட்டி முடியாதோ, அதேபோன்றுதான் நம்மில் அன்பு செலுத்துபவர்கள் ஒரு சிறு தீங்கினை அறிந்தோ, அறியாமலோ செய்துவிடும் பொழுது அது நமக்கு குற்றமாகத் தெரிவதில்லை.

ஏனெனில், நமக்கு இழைக்கப்படும் அந்தச் சிறு குற்றத்தை, தீங்கை மீறி அன்பு மிகுதியாகக் காணப்படுவதுதான் காரணமாகிறது. ஒருவருக்கொருவர் மீது ஆழ்ந்த அன்பைச் செலுத்தி, வெளிப்படுத்தி நிற்கும் பொதுபாவமான காரியங்கள் கண்களுக்குப் புலப்படாது அடிபட்டுப் போய்விடுகிறது.

"எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள். ஏனெனில், அன்பு திரளான பாவங்களைப் போக்கும் (பேதுரு - 4:8) என்று புதிய ஏற்பாடு உரைப்பதும் பொய்யல்லவே!

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## அல்லாஹ்வின் அல்குர் ஆன் வசனம்

வாழ்க்கை ஒரு நீண்ட பயணம். இது எமது மரணத்துடன் முடிந்துவிடுவதில்லை. இதற்கப்பாலும் இவை மறுமை மைதானம் வரை நீண்டு செல்கிறது. இப்பயணத்தில் ஈடுபட்டுள்ள மனிதன் இதற்கான நெறிமுறைகளை இறைமறையால் தேர்ந்தெடுத்து இம்மை, மறுமை இரண்டிலும் இன்புற வேண்டும்.

உங்கள் அன்றாட வாழ்க்கையில் அல்குர் ஆன் போதனையும், அண்ணல் நபி வழிமுறையும் வரவேண்டும். இறைதூதர் அவர்கள் இவ்வுலக மக்களுக்கு கற்றுக்கொடுத்த பின்வரும் து ஆவை பிரார்த்தனையில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

அல்லாஹ்வே! துன்பம், வேதனை என்பவற்றில் இருந்தும் இயலாமை சோம்பல் என்பவற்றில் இருந்தும் கடன்பளுவில் இருந்தும், மக்களின் கொடுமைகளில் இருந்தும் உன்னிடம் அடைக்கலம் கோருகிறேன்.

ஆம். அல்லாஹ்வையே நாடுங்கள் அவனை வணங்கி அவனிடம் தாழ்மையுடன் தலைசாய்த்து நில்லுங்கள். விசுவாசிகளே! பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். இது அல்லாஹ்வின் அல்குர்ஆன் வசனம்.

எம்.சி.கலீல்,
கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1015



## பாராட்டுக்குரியது

### வாலிப உள்ளம்

முதுமை சூழ்ந்தாலும்
மூப்பு கவ்வினாலும்
கருத்தொருமித்த தம்பதியினர்
கவலை யடைவதில்லை
கடந்த கால
இன்ப வாழ்க்கை எண்ணி
பெருமிதமடைவர்
வாலிபம் என்பது
உடலில் அல்ல
உள்ளத்திலேயே உள்ளது.

க.கமால்தீன்.
ஏறாவூர்.

## கவிதைப் போட்டி இல 1018



### புது அனுபவம்

வயதான காலத்திலும்
என் மீது கொண்ட
அன்பு மாறாது இப்படி
என் மனைவி
முத்தமிடுவது
எனக்கு
ஒரு புது அனுபவமாய்
உள்ளது.

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### முதுமையின் முத்தம்

கள் வெறி கொள்ளாத
கன்னத்து முத்தம்
உள்ளத்து உணர்வின்
உண்மை அன்பின்
வெள்ளை முத்தம் - நீடு
வாழ்ந்த இன்பத்தின்
கள்ளமில்லா முத்தம்
முதுமையொரு
சாபமோ? ரோகமோ?

கிண்ணியா முத்தாலிப்.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20. 06. 2013

**கவிதைப் போட்டி இல. 1018 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### என்ன முத்தம்...

இது காமத்தின்
முத்தமல்ல...
சாவிலும் கரையாத
காதலின் முத்தம்.

அ.சந்தியாகோ, கண்டி.

### அன்பின் சிகரம்

முத்தம் இட்டுக் கொஞ்சி
பேச வயது தேவை இல்லை
அன்பு மட்டும்
போதும் என்று உணர்த்தும்
இன்றைய வாலிபர்களும்
அன்றைய உண்மை
காதலர்களும் அன்பின்
சிகரம் இது என்று.

M.L.M.லசாட், அக்குரானை.



### உண்மைக் காதல்...

காதல் என்ற பெயரில்
காமம் செய்யும் இளைஞர்கள்
மத்தியில் உண்மையான காதலை
முத்தம் மூலம் பகருகிறதோ....
இம்முதிய ஜோடி...!

எம்.யூ.அல்சாத், ஒட்டமாவடி.

## உங்கள் பக்கம்

### எக்ஸ்ரே இயந்திரம் தேவை

யாழ்ப்பாண காசநோய் மருத்துவமனையில் இருக்கும் எக்ஸ்ரே இயந்திரம் கடந்த பத்து மாதங்களாக பாவிக்க முடியாத நிலையில் பழுதடைந்து காணப்படுகின்றது. இதனால் காசநோயால் பாதிப்படைந்த நோயாளர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அவசர சிகிச்சை வழங்க வேண்டிய நோயாளர்களுக்கான சிகிச்சையும் தாமதமாகவே சிகிச்சை அளிக்கக் கூடிய நிலை காணப்படுகின்றது. இதனால் நோயின் தாக்கம் அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளதாக வைத்திய நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் எக்ஸ்ரே இயந்திரத்தின் தேவையும், அவசியத்தையும் புரிந்துகொண்டு அதனைச் சீர்ப்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு பலமுறை வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அவை நிவர்த்திசெய்யப்படாத நிலையிலேயே காணப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தை தினமுரசின் உங்கள் பக்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலமாவது தீர்வைப் பெறமுடியும் என்ற எதிர்பார்ப்பில் இதனை எழுதுகின்றேன்.

எஸ்.பரமு, யாழ்ப்பாணம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com




## ஜொலிக்க வேண்டும்!

நீண்டநாள் வாசகியாக நான் இருப்பதில் பெருமிதம் கொள்கின்றேன். உன்னில் இடம்பெறும் பாப்பா முரசு தகவல்களுக்காக வியாழன்தோறும் காத்திருப்பதில் ஒரு சுகம் எனக்கு.

விளையாட்டு, லேடீஸ் ஸ்பெஷல், மருத்துவம், வெளிநாட்டு அரசியல் கட்டுரை என்பவை சிறப்பாக உள்ளது. முரசு இன்னுமின்னும் அம்சங்களுடன் மின்னவேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கு.சாலினி, பூநகரி.

## வாசகர் சாலை

## எனது ஆதங்கம்

வணக்கம்.

முரசில் புதிதாக ஆரம்பித்திருக்கும் 'க்ரைம்' எனும் பகுதி அருமையாக உள்ளது. குற்றங்களைப் பற்றி தெளிவாகவும், எப்படி சமூகம் திருந்தி வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டாகவும் வழங்கிவருகின்றது. இவ்வாறானவற்றை நிச்சயமாக சமூகத்திற்கு கொடுக்கவேண்டியது பத்திரிகையின் தலையாய கடமைகளில் ஒன்று. இதை ஒரு தூண்டுதலாக நாம் எடுத்துக்கொள்ளாமல் நல்லதை மட்டுமே எடுத்துக்கொண்டு வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

தீய வழியிலிருந்து நல்வழிக்கு சமூகத்தை நெறிப்படுத்துவதில் ஊடகங்களுக்கும் முக்கியமான பங்குண்டு என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இப்பகுதி முரசில் காலங்காலமாக தொடர வேண்டுமென்பதே எனது ஆதங்கமாகும்.

எஸ்.தவபாலன், கேகாலை.

## மீண்டும் தருவாயா?

வாசகர் நெஞ்சங்களில் என்றுமே அழியாது நிலைத்து நிற்கும் தினமுரசே! காலங்கள் பல கடந்தும் உன் காத்திரம் என்றுமே குறையவில்லை. பலவிதமான மசாலாக்களையும் சுவைபடத் தந்து கொண்டிருக்கின்றாய். அறிவுரீதியானவை அனைத்தையும் படைப்புகளையும் அள்ளிவழங்குகின்றாய். முரசில் சென்ற வருடம் அந்தரங்கப் பகுதியை தந்தாய். மீண்டும் அதை தருவாயா முரசே!

கே. அனிஸ்ரன், மன்னார்.

## 13 ஆவது திருத்தச் சட்டம்

# சும்மா இருந்து பெற்ற வரம் அல்ல

# போராடிப் பெற்ற உரிமை



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

13ஆவது திருத்தச் சட்டம் என்பது சும்மா இருந்துபெற்ற வரம் இல்ல. நாம் அனைவரும் போராடிப்பெற்ற உரிமை. எமது ஆரம்பகால உரிமைப் போராட்டத்தில் நாம் பெற்றுக்கொண்டது இதுமட்டுமே எனறு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு நாம் மட்டுமே கடநத 20 வருடங்களுக்கு மேலாக் வாதாடியும் போராடியும் வருகின்றோம். குறித்த திருத்தச் சட்டத்தில் இருந்து தொடங்கி அதற்கு மேலதிக அதிகாரங்களைப் பெற்று எமது அரசியல் இலக்கை அடைவதே, கொள்கை எனத் தெரிவித்த அமைச்சர் பலத்த சவால்களுக்கு மத்தியில் பத்தியம் காத்து வளர்த்து வந்த கருவை கலைக்க முடியாது எனவும், ஏதோ ஒரு வகையில் சுகப்பிரசவம் நடக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

தொடர்ந்து வலி.வடக்கு காணி சுவீகரிப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

தமிழ்பேசும் மக்களின் சார்பாகவே அமைச்சராக இருக்கின்றேன். யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் உயர் பாதுகாப்பு வலயம் என்று எதுவுமே இருக்காது என்று ஜனாதிபதி அறிவித்திருந்தார். இந்த அறிவீடும் எனது விருப்பமும் ஒன்றாகும்.

எனவே எமது மக்களின் நியாயமான விருப்பங்களை பேசவேண்டிய இடத்தில், பேசவேண்டிய விதத்தில் பேசியே வருகின்றேன். அதன்மூலம் பல உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீள்குடியேற்றி இருக்கின்றோம். எஞ்சிய பிரதேசத்திலும் மககளை மீள்குடியேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு என்று தெரிவித்தார்.

### ஹெரோயின் புகைத்த இராணுவ வீரருக்கு தண்டம்

கொம்பனி வீதியில் ஹெரோயின் புகைத்துக் கொண்டிருந்த நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட இராணுவ வீரருக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

இவருக்கு எதிரான குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்த பொலிஸார் இவரை கைது செய்யும்போது அவர் தன்வசம் 20 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்ததாகவும் குற்றஞ் சாட்டினர். இராணுவ வீரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது தரப்பைச்சேர்ந்த பிரதிவாதி குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## காத்தான்குடியில் மலிக் அப்துல்லாஹ்

# பல்கலைக்கழக கல்லூரி

## எதிர்க்கிறது பொதுபலசேனா

இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ள உலமாக்களுக்கான மலிக் அப்துல்லாஹ் பலக்லைக்கழக கல்லூரிக்கான ஒப்பந்தம் காத்தான்குடியில் கைச்சாத்திடப்பட்டது.

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் இலங்கை ஹிறா பவுண்டேசன் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த வைபவத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி மோகன்லால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் 25 பல்கலைக்கழக கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதில் 20 பல்கலைக்கழக கல்லூரிகள் அரசாங்கமும், 5 பல்கலைக்கழக கல்லூரிகள் தனியாரும் ஆரம்பிக்கவுள்ளனர்.

அந்த வகையில் ஸ்ரீலங்கா பவுண்டேசன் நிறுவனமும் இளைஞர் திறன் அபிவிருத்தி அமைச்சும் இணைந்து மலக் அப்துல்லா எனும் இந்த பல்கலைக கழக கல்லூரியை ஆரம்பிக்கவுள்ளது.

அதேவேளை குறித்த கல்லூரி அமைப்பதற்கு பொதுபலசேனா அமைப்பு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### புலம்பெயர்ந்து சென்றவர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை!

வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்று அங்கு வாழும் இலங்கைப் பிரஜைகளுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு முன்னர் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்கள பணிப்பாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

வெளிநாடுகளில் பிரஜா உரிமை பெற்ற இலங்கையர் 3 முதல் 5 இலட்சம் பேர்வரை ஐரோப்பா உட்பட பல்வேறு நாடுகளிலும் வசிக்கின்றனர். அவர்கள் இலங்கைப் பிரஜைகளாக இலங்கை வர விருப்பமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வெளிநாடுகளில் உள்ளோர் அங்கு பிரஜாவுரிமை பெற்றபின்னர் இலங்கை பிரஜா உரிமை இரத்தாகிறது.

வெளிநாடுகளில் வசிக்கும் இலட்சக்கணக்கான இலங்கையரின் கோரிக்கையின் பேரில் புதிய நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும், ஆரம்பத்தில் ஒரு இலட்சம் பேருக்கு இரட்டைப் பிரஜா உரிமை வழங்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிரித்தானிய வானில் பறக்கும் தட்டு!

லண்டனின் கேட்விக் விமான நிலையத்தில் அடுத்தடுத்து தரையிறங்கிய மூன்று விமானங்களை செலுத்திய விமானிகள், பறக்கும் தட்டு போன்ற தோற்றமுடைய இரு பறக்கும் வஸ்துகள் லண்டனுக்கு மேல் பார்த்ததாக ரிப்போர்ட் செய்த தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த டிசம்பர் 30ஆம் திகதி இந்த விமானிகள் செய்திருந்த ரிப்போர்ட், இதுவரை வெளியே தெரியாமல் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது (ஏன்?). எப்படியோ அந்த ரிப்போர்ட் வெளியாகிவிட, பிரித்தானிய ஊடகங்களில் இந்த விவகாரம் பரபரப்பாக அடிபடுகிறது.

சரி. அன்று என்னதான் நடந் தது?

லண்டனில் இரு பெரிய விமான நிலையங்கள் உள்ளன. மிகப் பெரியது, ஹீத்ரோ. அதைவிட சிறியது கேட்விக் விமான நிலையம். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானங்கள் இரு விமான நிலையங்களுக்கும் வருகின்றன.

கடந்த டிசம்பர் 30ஆம் திகதி, காலை 9 மணிக்கு சற்றுமுன், மூன்று விமானங்களுக்கு அடுத்தடுத்து தரையிறங்க அனுமதி கொடுத்திருந்தது கேட்விக் விமான நிலையக் கட்டுப்பாட்டு அறை. இந்த 3 விமானங்களும் அடுத்தடுத்து சில நிமிட வித்தியாசத்தில் தரையிறங்க இருந்தன.

முதலில் போயிங் 777 விமானம் ஒன்று தரையிறங்கலுக்கான பைனல் அப்ரோச்சுக்காக உயரத்தை குறைத்தது. ரன்வேயை நோக்கி பொசிஷன் செய்யப்பட்ட விமானம், ரன்வேயை தொடுவதற்கு சில நிமிடங்களுக்கு முன், லண்டன் East Grinstead பகுதிக்கு மேலாக தாழப் பறந்தபோது, அதன் விமானிகள் தமது விமானத்துக்கு 100 அடி கீழே வேறு ஏதோ பறப்பதை கண்டிருக்கிறார்கள்.

வெள்ளை அல்லது வெள்ளி நிற பறக்கும் தட்டுக்கள் இரண்டு, அந்த போயிங் 777 விமானம் இறங்கிக் கொண்டிருந்த உயரத்துக்கு கீழே மெதுவாக பறந்து சென்றதை கண்டதாக, அந்த விமானத்திலிருந்த 3 விமானிகளுமே, விமானம் இறங்கியபின் ரிப்போர்ட் செய்துள்ளனர்.

போயிங் 777 விமானம் இறங்கிய சில நிமிடங்களில், போயிங் 767 விமானம் ஒன்று லேன்டிங் செய்வதற்காக அதே பொசிஷனுக்கு வந்திருக்கிறது. அதை செலுத்திய இரு விமானிகளும், இரு தட்டுக்கள் தரையில் இருந்து சுமார் 1000 அடி உயரத்தில் பறப்பதாக ரேடியோ மூலம் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

விமான நிலைய ராடரிலும், UFO எனப்படும் அடையாளம் தெரி யாத பறக்கும் வஸ்துகள் (UFO – Unidentified Flying Object) 6 தெரிந்திருக்கின்றன.

இரண்டாவது விமானம் தரையிறங்கிய பின் மூன்றாவதாக தரையிறங்க வந்தது, ஏர்பஸ் A319 விமானம். அதன் விமானிகளும் இந்த பறக்கும் தட்டுகளை பார்த்து, தகவல் கொடுத்தனர்.

அப்போதும் ராடரில் 6 வஸ்துகள் தெரிந்திருக்கின்றன. ஆனால், அதன்பின் சில விநாடிகளில் அவை ராடர் திரையில் இருந்து மறைந்து விட்டன.

3 விமானங்களிலும் இருந்த 7 விமானிகள், மற்றும் ராடரை அவதானித்துக் கொண்டு இருந்தவர்கள் இது பற்றி கொடுத்த ரிப்போர்ட் தற்போது எப்படியோ லீக்காகி வெளியே வந்துள்ளது.



இதிலுள்ள மற்றொரு விஷயம், கேட்விக் விமான நிலையத்தில் தரையிறங்க வந்த 3 விமானங்களின் விமானிகளுமே, கடந்த டிசம்பர் 30ஆம் திகதி, காலை 08.55 க்கும் 09.05 க்கும இடைப்பட்ட நேரத்தில், லண்டன் East Grinstead பகுதிக்கு மேலாக தாழப் பறந்தபோது, இந்த பறக்கும் தட்டுகளை கண்டிருக்கிறார்கள்.

லண்டனில், East Grinstead பகுதியில்தான் பிரிட்டனின் Scientology headquarters இருக்கிறது. இவர்கள் Church of Scientology யுடன் தொடர்புடையவர்கள். சயின்ஸ் தொடர்பான இவர்களது நம்பிக்கைகள் கருத்துக்கள் எல்லாமே கொஞ்சம் வில்லங்கமானவை. மற்றைய கிரகங்களில் உள்ளவர்களுடன் தமக்கு உள்ள தொடர்புகள் பற்றி இவர்கள பிரஸ்தாபிப்பது அதிகம். இவர்கள் தொடர்பான வழக்கு கள் சிலவற்றில் பிரிட்டிஷ் கோர்ட் கள் இந்த அமைப்பை, "pernicious nonsense, "dangerous material" என்றெல்லாம் வர்ணித்துள் ளன. Church of Scientologyia ஒரு மதமாக பிரிட்டன் அங்கீகரிக்கவில்லை. தமது மதத்தில் பிரிட்டனில் மட்டும் 118,000 உறுப்பினர்கள் உள்ளார்கள் என்று இவர்கள் கூறிக்கொண்டாலும், 2001 census of England and Wales கணக்கெடுப்பின்படி, இந்த அமைப்பின் உறுப்பினர்களாக வெறும் 1,781 பேர் மட்டுமே உள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

இவர்களது லண்டன் பிராஞ்ச் பில்டிங் ஒன்று ஒக்டோபர் 2006ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. அதற்கான செலவு 24 மில்லியன் பவுண்ட்ஸ்! எங்கிருந்துதான் பணம் வருகிறதோ! (ஒருவேளை வேறு கிரகத்தில் இருந்து?)

இந்த அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள பகுதியின் மேல் பறக்கும் தட்டுகள் பறந்தது. மேலும் சில சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக பிரிட்டனின் போலிஸ் முதல் உளவுத்துறை வரை வெவ்வேறு இலாகாக்கள் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை யாரும் எதையும் கண்டு பிடித்ததாக தகவல் இல்லை.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

**முரசம்**

வாசகர்களுக்கு வணக்கம்!

## அர்த்தமற்ற விவாதங்கள்

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்போவதாக அரசு கூறிவருகின்றது. ஆனால் தேர்தல் திணைக்களத்துக்கு அதற்கான அறிவுறுத்தலை அரசு வழங்கவில்லை. தேர்தல் திணைக்களமோ வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் தொடர்பில் எவ்வித ஆயத்தங்களையும் செய்யவில்லை.

தேர்தல் திணைக்களம் தேர்தலை உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டால் அதன்பின்னர் மாகாண சபையின் சரத்துகளில் எவ்விதமான மாற்றங்களையோ, திருத்தங்களையோ செய்ய முடியாது. ஆகவே தேவையான மாற்றத்தை அல்லது திருத்தத்தைச் செய்துவிட்டு தேர்தல் திணைக்களத்துக்கு தேர்தல் பற்றிய தெளிவுபடுத்தலைச் செய்வதற்கு அரசு முயற்சிக்கின்றது.

ஆகவே தான் 13ஆவது திருத்தச் சட்டத்தில் தேவையான திருத்தத்தை கொண்டுவருவதற்கு பல்முனை விவாதத்தை ஆரம்பித்துள்ளது. இவற்றைப் பார்க்கின்றபோது அரசின் உள்ளார்ந்த விருப்பம் என்ன என்பதை தெளிவாக புரிந்து கொள்ளமுடிகின்றது என்கின்றனர் அவதானிகள்.

இந்த நிலையில் 13ஆவது திருத்தச் சட்டம் தப்புமா?, தப்பாதா? என்பது விவாதப் பொருளாகவே இருக்கப் போகின்றது.

இவ்விடயத்தில் இந்தியாவோ, அமெரிக்காவோ எதுவும் செய்யமுடியாது. அவை குறிப்பிடும் 13ஆவது திருத்தமும், மாகாண சபையும் அப்படியே இருக்கவே செய்யும். "தோல் இருக்க சுளை விழுங்கும் விளையாட்டு" என்பதுபோல் உருவத்தை அப்படியே வைத்துக் கொண்டு உள் உறுப்பை அறுக்கவே திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

வேண்டுமாக இருந்தால் அமெரிக்கா அடுத்த மனித உரிமைகள் கூட்டத் தொடரில் ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம், அதை இந்திய ஆதரிக்கலாம், இவை நடைபெறும்போது தமிழகத்தில் யாரும் தீக்குளிக்கலாம், வீதி மறியல் நடத்தலாம், கூட்டமைப்பினர் ஜெனிவாவுக்குச் சென்று சொந்தச் செலவில் அதாவது "சொந்தச் செலவில் சூனியம் வைத்துக் கொள்வதுபோல்" இருந்துகொண்டு நாலு வெள்ளைக் காரர்களை சந்தித்ததாக இணையத் தளங்களுக்கு செய்தி கொடுக்கலாம்.

13 ஆவது திருத்தத்தைப் பாதுகாக்க பாராளுமன்ற முன்றலில் கூட்டமைப்பினர் போராட்டம் நடத்தவோ, ஆயர் தலைமையேற்று மன்னாரில் கூட்டம் போட்டு உணர்வை பதிவுசெய்யும் இறுதி வரை உண்ணாவிரதம் இருக்கவோ மாட்டார்கள்.

அடையாள உண்ணாவிரதம், மன்னாரில் கூட்டம் அப்படி ஏதாவது இவர்களின் அறிவுக்கு எட்டிய எதையாவது செய்யலாம், இவர்களுக்கு தோதாக முன்னாள் நீதியரசர் கிடைக்கின்ற மேடைகளில் 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதில் கொண்டு வர எத்தனிக்கப்படும் திருத்தம் தொடர்பில் தனது சட்ட விண்ணானத்தை காட்டும் வியாக்கியானத்தை பேசி பத்திரிகைளில் பக்கங்களை நிரப்பலாம்.

இதைத்தவிர வேறு என்ன இவர்களால் இதுவரை செய்யமுடிந்துள்ளது. எதிர்காலத்திலும் இவர்களால் எதைச் செய்துவிட முடியும் என்று அரசிலுள்ள சிலர் பரிகாசமாகப் பேசுவதை கேட்க முடிகின்றது.

தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையையும் பெற்றுத்தராத இவை எல்லாமும் தமிழ் தேசியத்தின் பெயரால் வெற்றிகரமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. வாழ்க தமிழ்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# இந்தியாவிடம் மந்திரக்கோல் இல்லை!



**இலங்கையில்** இனப் பிரச்சினை, அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா தமிழர் தரப்புக்களின் எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்யும்வகையில் செயற்படும் இல்லையேல் குறைந்த பட்சம் அழுத்தங்களையாவது வழங்கும் என்ற கருத்து ஒரு சாராரின் மத்தியில் இன்றும் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவது இந்தியாவுக்கும் குறிப்பாக தமிழகத்துக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள்.

மற்றையது, கடந்த கால அரசியல் நகர்வுகள் அதாவது இலங்கையில் இனமுறுகல் விஸ்வரூபம் பெற்ற காலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த வெளியுறவுக் கொள்கை இந்தியாவின் நலன்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.

எனவே சந்தர்ப்பத்தை கையாண்டு இலங்கையை வழிக்குக் கொண்டுவர நினைத்த முன்னாள் பிரதமர் தலைமையிலான இந்திய அரசு தமிழர் தரப்புக்கு உதவுவது போன்று தோற்றப்பாட்டை ஏற்படுத்தி இலங்கை விடயத்தில் மூக்கை நுழைத்தது.

இங்கே தமிழர் தரப்புக்கு ஆதரவாக இந்தியா செயற்பட்டதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றது. ஒன்று: எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையான கையாள்கை. மற்றையது, இலங்கையிலே தமிழர்களுக்கு எதிராக ஏற்பட்ட இனக்கலவரங்களின் போது தமிழகத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பை தமக்கான தேர்தல் வாக்குகளாக மாற்றும் எண்ணம்.

இப்படி இந்தியாவின் தேச நலன் சார்ந்த வெளியுறவுக் கொள்கையின் நிலைப்பாட்டால் ஏற்பட்ட சூழலை பார்த்துப் பூரித்துப்போன தமிழர் தரப்பு தமிழர்களுக்கான தனித்தாயகத்தை இந்தியா பெற்றுத் தந்துவிடும், அதற்கான ஆரம்பப் புள்ளியாகவே ஆயுதப் பயிற்சி வழங்குகின்றது என்றெல்லாம் புளகாங்கிதம் அடைந்துகொண்டது.

இந்த எதிர்பார்ப்புக்கு வலுச்சேர்க்கும் வகையில் பங்களாதேஷ் என்ற நாடு உருவானதற்கு இந்திராகாந்தி அரசாங்கம் மேற்கொண்ட நிலைப்பாடுகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அன்றைய சூழலில் இலங்கை அரசாங்கம் விவேகமற்ற முறையில் செயற்பட்டிருக்குமானால், தனித்தமிழீழம் என்ற ஒன்று உருவாகுவதற்கு இந்தியா முழு ஒத்துழைப்பு வழங்கியிருக்கும் என்று இப்போதும் சில அரசியல் நிபுணர்கள் நம்புகின்றனர்.

ஆனால், இந்தியாவின் அணுகுமுறையைப் புரிந்து கொண்டு அதனைக் கையாண்ட இலங்கையின் அப்போதைய அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தந்திரமும், தமிழர் தரப்பாக இருந்த புலிகளின் அதிமேதாவித்தனமும் இந்தியாவையே தமிழர் தரப்புக்கு எதிராக மோதும் சூழலை ஏற்படுத்தியிருந்தது.

இப்போது ஆண்டுகள் பல உருண்டோடிவிட்டன. சூழல் மாறிவிட்டது. காட்சிகள் மாறிவிட்டன. ஆனால் இன்றும் தமிழர்களுக்காக இந்தியா அனைத்தையும் பெற்றுத்தரும் என்று நம்புகின்ற எம்மில் ஒரு சாராரின் சிந்தனைப்போக்கில் மாற்றம் ஏற்பட்டதாக இல்லை.

இப்போதும் இந்தியா பற்றிய எதிர்பார்ப்புக்களையும், நம்பிக்கைகளையும் அப்பாவி மக்களின் தலைக்குள் ஏற்றி காலத்தைக் கழிப்பதிலேயே சில அரசியல் சக்திகள் என்று தம்மைக்கூறிக் கொள்பவர்களும் ஈடுபட்டுவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்த நடைமுறைச் சாத்தியமற்ற கருத்துக்கள் பற்றி இந்தியத் தரப்பு வெளிப்படையாக தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவது கிடையாது. இவ்வாறான மனோபாவத்தின் ஊடாக தமிழக மக்களின் மத்தியில் தங்களது செல்வாக்கை உயர்த்திக்கொள்ள முடியுமானால், உயர்த்திக் கொள்வது. அடுத்ததாக தற்போதைய இராஜதந்திரப் போக்கில் இலங்கை அரசுக்கு ஒரு எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான கருத்துக்கள் அமையக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் இவ்வாறான கருத்துக்களை இந்திய அரசு மறைமுகமாக ஆதரித்துவருகின்றது என்றே எண்ணத்தோன்றுகின்றது.

அவ்வப்போது இங்கு வருகின்ற இந்தியத் தரப்புக்களை சந்திக்கின்ற நம்மவர்கள் இவ்வாறான கருத்துக்களை முன்வைக்கின்ற போதெல்லாம், அவற்றை ஆமோதிப்பது போன்று சிரித்து தலையாட்டிவிட்டுப் போவதே இந்தியத் தரப்பின் வழக்கமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான சூழலிலேயே அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியப் பாராளுமன்ற பிரதி எதிர்க்கட்சித் தலைவர் ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான பா.ஜ.க. உறுப்பினர்களைச் சந்தித்த கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்தியா பற்றிய தமது எதிர்பார்ப்பை வெளிப்படுத்தி இருந்தனர்.

அதற்குப் பதிலளித்த பிரதி எதிர்க்கட்சித் தலைவர் ரவிசங்கர் பிரசாத் ஒழிவு மறைவின்றி இந்தியாவினுடைய தற்போதைய நிலைப்பாட்டை போட்டுடைத்திருக்கின்றார்.

"இந்தியா உங்கள் நண்பன். நீங்கள் எல்லோரும் சமாதானமாகவும் சுபீட்சமாகவும் வாழ வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம். அதற்காக நாம் எம்மாலான உதவிகளைச் செய்வோம். எந்த ஒரு நாட்டின் மீதும் இந்தியா தனது ஆளுகையைச் செலுத்த முற்படாது. கடந்த காலத்தில் சில கசப்பான சம்பவங்கள்கூட நடைபெற்றிருக்கின்றது. இலங்கைப் பிரச்சினையால் இந்தியா தனது முக்கிய தலைவர் ஒருவரை இழக்க நேரிட்டிருக்கின்றது. எனினும், கடந்த கால கசப்புக்களை மறந்து எதிர்காலத்தை வளமாக்கிப்போட்டது குறித்து அனைவரும் சிந்திக்க வேண்டும். இதற்கு இந்தியா தன்னாலான பங்களிப்புக்ளை தொடர்ந்து வழங்கும்" என்று தெரிவித்திருந்தார்.

அதாவது, இந்தியாவினுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் தொடர்ந்தும் இருப்பினும் பிரச்சினைகளுக்கான தீர்வை சம்பந்தப்பட்ட தரப்பினர்தான் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே தற்போதைய இந்தியாவின் நிலைப்பாடாக இருக்கின்றது. இது இந்தியாவின் கருத்தல்ல, பா.ஜ.க.வின் கருத்து என்று கூட சில வாதங்கள் முன்வைக்கப்படலாம்.


ஆம். ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். இந்தியாவை பொறுத்தவரையில் அதன் வெளியுறவுக் கொள்கை என்பது கட்சிகளுக்கு கட்சி மாறுபடுவதில்லை. அவை இந்தியா என்ற தேச நலன் சார்ந்ததாகவே இருக்கும்.

நம்மைப் போன்று வெளிநாடுகளுக்குச் சென்று அரசாங்கம் பற்றி சரமாரியான குற்றச்சாட்டுக்களை கொட்டளித்துவிட்டு வருகின்ற கேவலமான அரசியல் கலாசாரம் இந்தியாவில் இல்லை. அங்கு என்னதான் மோசமாக எதிர்க்கட்சிகள் மோதிக்கொண்டாலும் நாட்டுக்கு வெளியேவந்துவிட்டால் இந்திய தேசிய நலனை மட்டும் முன்நிறுத்தியே கருத்துக்களை முன்வைப்பார்கள். இது இலங்கையில் அண்மைக்காலத்தில் இரண்டாவது தடவையாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த வருடம் வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ் தலைமையில் வருகை தந்த பா.ஜ.க.குழுவினரும் இவ்வாறான கருத்துக்களையே முன்வைத்திருந்தனர்.

ஆக, தற்போதைய அரசியல் நாகரிகங்களையும் கால மாற்றங்களையும் உணர்ந்துகொண்டு இனிவரும் காலங்களிலாவது எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான, ஆரோக்கியமான சிந்தனைகளை வளர்த்துக்கொண்டு நிதர்சனமான கருத்துக்களை முன்வைக்க நாம் பழகிக் கொள்ள வேண்டும். அதுவே நாம் சார்ந்த சமூகத்துக்கு ஆரோக்கியத்தைப் பெற்றுத்தரும்.

*சிவன்*



**ரிஷி**




# புலிகளின் வீழ்ச்சி!

## இறுதி நாட்கள்...

பிரபாகரனுக்கு டெல்லியில் அசோகா ஹோட்டலில் ரூம் முன்பதிவு செய்யப்பட்டிருக்க, மற்றைய இயக்கங்களின் தலைவர்களுக்கு சாம்ராட் ஹோட்டலில் அறைகள் பதிவாகியிருந்தன.

சென்னையில் தங்கியிருந்த மற்றைய இயக்கங்களின் தலைவர்களிடம் டெல்லி வரும்படி றோ உளவுத்துறையின் உயரதிகாரிகள் இருவர் நேரில் சென்று சொல்லியிருந்தார்கள். ஆனால் இந்த அழைப்பு விடுக்கப்பட்ட தினத்தில் புளாட் இயக்கத்தின் தலைவர் சென்னையில் இல்லை என்று கூறப்பட்டது.

"அவர் முக்கிய வேலை நிமித்தமாக, பெயர் குறிப்பிடப்பட முடியாத இடம் ஒன்றுக்குச் சென்றிருக்கிறார்" என்று கூறினார்கள் அந்த இயக்கத்தினர்.

இந்தப் பதிலுக்கு மற்றுமோர் விளக்கமும் உண்டு.

றோ அதிகாரிகள் இயக்கங்களின் தலைவர்களை டெல்லிக்கு வரும்படி அழைத்தபோது உண்மையில் புளொட் இயக்கத்தின் தலைவர் உமா மகேஸ்வரன் சென்னையில்தான் இருந்தார். டில்லி ஏதோ ஒரு சிக்கலான காரியத்தைச் செய்யும்படி இயக்கத் தலைவர்களைக் கட்டாயப்படுத்தப் போகின்றது என்பதைப் புரிந்துகொண்டு, றோ அதிகாரிகள் வந்து சென்ற சிறிது நேரத்திலேயே, குறித்த நாட்டில் இருந்த அவர்களது பிரதான முகாமுக்கு அவர் சென்றுவிட்டார்.

கடைசிவரை றோ அதிகாரிகளால் உமா மகேஸ்வரனைத் தொடர்புகொள்ளவே முடியவில்லை.

"இதற்கு என்ன செய்யலாம்?" என்று சென்னையிலுள்ள றோ அதிகாரிகள், டில்லியை ஆலோசனை கேட்க, கால அவகாசம் அதிகம் இல்லாத காரணத்தால், புளொட் இயக்கத்தில் இருந்து வேறு யாரை யாவது டில்லிக்கு அனுப்பி வைக்கும்படி கூறப்பட்டிருக்கின்றது.


இந்தவகையில் பிரபாகரன் டெல்லி சென்று இறங்கியபோது, மற்றைய இயக்கங்களின் தலைவர்கள் எல்லோரும் டில்லியில் இருந்தார்கள் – உமா மகேஸ்வரனை தவிர.

இங்குள்ள மற்றுமோர் விஷயம் என்னவென்றால், இவர்கள் எல்லோரும் டில்லியில் இருந்தார்கள். ஆனால் யாருக்கும் இலங்கை – இந்திய ஒப்பந்தம் பற்றிய விரிவான தகவல்கள் எதுவும் சொல்லப்பட்டிருக்க வில்லை.

ஜூலை 28ஆம் திகதி, இயக்கங்களின் தலைவர்களை (பிரபாகரன் தவிர்ந்த) தன்னை வந்து சந்திக்கும்படி பிரதமர் ராஜிவ்காந்தி அழைத்திருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், புளாட், ரெலோ ஆகிய இயக்கத்தினருக்கும் ஒரே நேரத்தில்தான் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஈரோஸ் இயக்கத்துடன் சென்று பிரதமரைச் சந்திக்க முடியாது என்று மற்றய இயக்கங்கள் மறுத்துவிட்டன. இதனால் மூன்று இயக்கங்களுக்கு ஒரு நேரமும், ஈரோஸ் இயக்கத்துக்கு வேறு நேரமும் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது.

ஈரோஸ் இயக்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை



வைத்திருப்பதால், அவர்களது முன்னிலையில் தாங்கள் பிரதமரைச் சந்திக்க விரும்பவில்லை என்று மற்றைய இயக்கங்கள்

### இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் தமிழ் இயக்கங்களின் பங்கு

காரணம் கூறியிருந்தன.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரதிகள் நான்கு இயக்கங்களின் தலைவர்களிடமும் கொடுக்கப்பட்டது. ஒப்பந்தத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, ஒப்பந்தம் பற்றிய ஆட்சேபனைகள் எதுவும் இருந்தால் எழுத்து மூலமாகக் கொடுக்கும்படி அவர்கள் கேட்கப்பட்டார்கள்.

இந்த ஒப்பந்தத்தின் பிரதிகள் இயக்கங்களின் தலைவர்களிடம் (விடுதலைப்புலிகள் தவிர்ந்த) கொடுக்கப்பட்டது ஜூலை மாதம் 27 ஆம் திகதி. (அவர்கள் பிரதமரை சந்திப்பதற்கு முதல் தினம்).

இந்திய வெளியுறவு அமைச்சின் தலைமையகத்திலுள்ள அறையொன்றில் வைத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரதி கொடுக்கப்பட்டது. அந்தப் பிரதிகளை அவர்கள் தங்களுடன் எடுத்துச் சென்று படிப்பதற்கு அனுமதிக்கப்பட வில்லை.

சந்திப்பு முடிவடைந்தபோது அனைத்துப் பிரதிகளும் திரும்பவும் வாங்கப்பட்ட பின்னர்தான் அவர்கள் வெளியேசெல்ல அனுமதிக்கப்பட்டார்கள். வெளியே சென்ற பின்னரும் ஒப்பந்தத்தில் இருக்கும் விஷயங்கள் பற்றி ஒப்பந்தம் கையெழுத்தாகும் வரை வெளியே யாருக்கும் தெரிவிக்கவேண்டாம் என்று கூறப்பட்டிருந்தது.

ஒப்பந்தத்தை முதல் முதலில் விடுதலை இயக்கங்களின் தலைவர்களுக்குக் காட்டியவர், வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளர் குல்தீப் யாதவ்.

அப்படிக் கொடுக்கப்பட்டபோது அதிலுள்ள ஆட்சேபனைகளை எழுத்து மூலம் கொடுக்கலாம் என்று இயக்கங்களுக்குக் கூறப்பட்டிருந்தாலும், அதே ஒப்பந்தத்தை இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் கையொப்பமிடுவதற்கு ஏற்கனவே நாளும் குறிக்கப்பட்டு விட்டிருந்தது. அதன் வேறு விதமான அர்த்தம் – "இதுதான் ஒப்பந்தம். இதில் உடன்பாடு இல்லாவிட்டால் தெரிவியுங்கள். ஆனால் நாங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்போகிறோம்"

மிகக் குறுகிய கால அவகாசத்தில் ஒப்பந்தத்தைப் பார்த்த நான்கு இயக்கங்களும் கொள்கை ரீதியாக ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டன. ஆனால் ஒப்பந்தத்தில் இருந்த முரண்பாடுகளை எழுத்துமூலமாகக் கொடுத்திருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் கட்சிக்கும், ஈரோஸ் இயக்கத்துக்கும்கூட அதே நிலைமைதான். (தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

**மணியம்**

வதை - 65

**மிகவும்** கடுமையான கட்டுக்காவல் இருந்த போதிலும், தம்மையும் மீறி திறமைமிக்க சில கைதிகள் தப்பியோடிவிடுவார்கள் என்ற பயம் புலிகளுக்கு எப்பொழுதும் உண்டு.

தப்பியோடும் சங்கதியைப் பொறுத்த வரை புலிகளுக்கு தமது வரணி சித்திரவதை முகாமிலிருந்து தப்பியோடிய 'புளொட் சிறீ' தான் ஞாபகத்துக்கு வரும் போலும். ஒருமுறை என்னுடன் அம்புறோஸ் என்ற சிரேஷ்ட புலனாய்வாளன் கதைத்துக்கொண்டு இருக்கும் போது, புளொட் சிறீயின் கெட்டித் தனத்தை தன்னையும் மறந்து சிலாகித்துக் கதைத்தான்.

புளொட் சிறீ முதலும் ஒரு தடவை புலிகளின் சித்திரவதை முகாம் ஒன்றிலிருந்து தப்பி ஓடியவன். அதன் காரணமாக அவனை மிகுந்த கட்டுக்காவலுடன் உள்ள வரணி எருவனில் உள்ள 'இறைச்சிக்கடை' அல்லது 'மேல்வீடு' என்று அழைக்கப்படும் மிகவும் கொடூரமான சித்திரவதை முகாமில் தடுத்து வைத்திருந்தும், அவன் மீண்டும் தப்பியோடிவிட்டான். இது புலிகளைப் பொறுத்தவரையில் மிகவும் அவமானமான விடயம்.

அதுவும் வரணி முகாமில் தனக்குக் காவலுக்கு நின்ற புலி உறுப்பினன் ஒருவன்மூலம் 'வாள் பிளேட்' ஒன்றைப் பெற்று, அதன் மூலம் தன்னை அடைத்து வைத்திருந்த தனியறைச் சிறையின் கம்பிகளை சாதுரியமாக அறுத்து அவற்றை வளைத்து இடைவெளி ஏற்படுத்திக்கொண்டு சிறீ தப்பியோடியுள்ளான். சிறீயின் அடுத்த அறையில் தான் பி.எல். எப்.ரி. (PLFT) இயக்கத்தைச் சேர்ந்த அன்ரனும் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்.

தப்பியோடிய சிறீ, தென்மராட்சியில் தனக்கு இருந்த தொடர்புகளைப் பயன்படுத்தி ஒருவரை துணைக்கு அழைத்துக்கொண்டு, கண்டி வீதியிலிருந்த புத்தூர் சந்தியைத் தாண்டி, மட்டுவில் ஊடாக பருத்தித்துறை வீதியிலிருந்த புத்தூர் சந்தியை அடைந்து உடுவிலுக்குச் சென்று, அங்கு சில தினங்கள் சில வீடுகளில் மறைந்திருக்கின்றார். சிறீ தப்பியோடியதை சில மணி நேரங்களில் அறிந்து கொண்ட புலிகள், யாழ்.குடாநாடு மற்றும் வன்னிப் பகுதியெங்கும் தமது உறுப்பினர்களை விழிப்பாக இருக்கும்படி உஷார்படுத்தியதுடன், பல நூற்றுக்கணக்கான புலிகள் சிறீயைத் தேடும் நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

சிறீ, கண்டி வீதியிலுள்ள புத்தூர் சந்தியைக் கடந்து செல்லும்போது அவர் பயணம் செய்த துவிச்சக்கர வண்டியை சில புலிகள் சோதனைக்காக நிறுத்தியிருக்கின்றனர். அது ஒரு முன்னிரவு நேரம். நண்பர் ஒருவர் துவிச்சக்கர வண்டியை ஓட்ட, சிறீ முன்பாரில் இருந்து பயணித்திருக்கிறார். சிறீ தனது தலையை ஒரு துணியினால் மூடி, கையில் ஒரு வேப்பமிலைக் கட்டுடன் இருந்திருக்கிறார். சைக்கிளை புலிகள் நிறுத்தியவுடன், அதை ஓட்டி வந்தவர் மிகச் சாதுரியமாக "அண்ணைக்கு அம்மாள் வருத்தம். அதுதான் மட்டுவிலுள்ள பண்டித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு நேத்தி வைக்கப் போறம்" என்று சொல்லியிருக்கிறார்.

அவ்வளவுதான், துவிச்சக்கர வண்டியில் உள்ளவருக்கு 'கொப்புளிப்பான்' வருத்தம் என்றதும், அவர்களை நிறுத்திய புலிகள் பின்வாங்கி "போங்கோ போங்கோ" என அவசர அவசரமாக அவர்களை வழியனுப்பி வைத்திருக்கிறார்கள். அதன்பின்னர் உடுவில் சென்று தங்கிய சிறீ, அங்கிருந்து வலிகாமம் மேற்கிலிருந்த தனது நண்பர்கள் சிலரிடம் சென்று தங்கி விட்டு, ஒருநாள் அதிகாலை பொன்னாலை கடற்பரப்புக்குச் சென்றிருக்கிறார். அங்கு கடலில் ஆழம் குறைந்த பகுதியில் நடந்து சென்ற சிறீ, அங்கிருந்து தான் வைத்திருந்த 'வாக்கி ரோக்கி' மூலம் காரைநகரிலிருந்த கடற்படை முகாமுக்கு தொடர்பு எடுக்க முயன்றிருக்கிறார். கடற்படையினரின் தொடர்பு உடனடியாகக் கிடைக்காததால், நேரம் போய்க்கொண்டிருந்திருக்கிறது. அதேவேளையில் அங்கு கடற்தொழிலுக்குவந்த மீனவர்கள் சிலர், சிறீயின் நடவடிக்கையைக் கண்டு சந்தேகப்பட்டு, புலிகளுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

உடனும் விரைந்து வந்த புலிகள் சிறீயைப் பிடித்து விட்டனர். அவரைப் பிடித்த புலிகள் அவரை என்ன செய்திருப்பார்கள் என்பதை, நான் இங்கு விவரிக்கத் தேவையில்லை. அவரது மரண சாசனத்தை எழுதிய புலிகளில் யாராவது இப்பொழுது உயிரோடு இருந்தால், சிறீயின் கதையை முடிப்பதற்கு முன்னர் என்னென்ன உடற்கூற்றியல் நடவடிக்கைகளை புலிகள் அந்த வீர புருசனின் உடலில் நிகழ்த்தினார்கள் என்பதைச் சொல்ல முடியும்.

எப்படியும் புலிகளின் கால் நூற்றாண்டு மனிதச் சித்திரவதைகள், படுகொலைகள் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒரு சிலராவது இன்னமும் உயிர் வாழக்கூடும். அவர்களில் சிலர் வெளிநாடுகளுக்குத் தப்பியோடி மறைந்து இருக்கக்கூடும். வேறு சிலர் இராணுவத்தின் தடுப்புக் காவலில் இருக்கக்கூடும்.

ஜேர்மானிய சர்வாதிகாரி ஹிட்லருடன் இணைந்து, மனித குலத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் இன்றும் கூட பல நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டனைக்குள்ளாவது போல, புலிகளில் இவ்வாறான நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்படுவது அவசியம். அப்பொழுதுதான், இலங்கையில் இவ்வாறான சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்களின் கனவுகளைத் தகர்க்க முடியும். ஏனெனில் இன்னமும் கூட வெளிநாடுகளில் வாழும் புலிகளின் மிச்சசொச்சங்கள் சிலர், தமிழீழ விடுதலை என்ற போர்வையில் இலங்கையில் மீண்டும் புலிகளின் இருண்ட யுகத்தை உருவாக்கும் கற்பனைகளில் மூழ்கியிருக்கிறார்கள்.

புளொட் சிறீயின் சிறையுடைப்பின் பின்னரான செயற்பாடுகளில், குறிப்பாக அவருக்குப் புகலிடம் கொடுத்த குற்றச்சாட்டில் உடுவில், சங்கானை, காரைநகர் என பல பகுதிகளைச் சேர்ந்தவர்களை புலிகள் கைதுசெய்து சித்திரவதை செய்தனர். அவர்களில் சிலர் நான் இருந்த சிறையிலும் இருந்தனர். அவர்களில் சிலரை புலிகள் சித்திரவதை செய்த பின்னர் கொன்றுவிட்டதாக நான் விடுதலையாகிவந்த பின்னர் அறிந்தேன். அவர்களில் ஒருவர் முல்லைத்தீவுப் பகுதியில் எமது கட்சியுடன் இணைந்து வேலை செய்த காரைநகரைச் சேர்ந்த இராசேந்திரம் என்ற தோழரின் தம்பியார். அவரையும் அவரது மனைவியையும் கைதுசெய்த புலிகள், சித்திரவதையின் பின்னர் அவர்களைக் கொன்றுவிட்டார்கள்.

இன்னும் சிலர் நான் விடுதலையாகும் வரை விசாரணைக் கைதிகளாக இருந்தார்கள். அவர்கள் விடுவிக்கப்பட்டார்களா அல்லது கொல்லப்பட்டார்களா என்பது இன்றுவரை தெரியவில்லை. சிறீயுடன் வரணி முகாமில் இருந்த வின்சன்ற், பிரகாஷ் என்ற இரு கைதிகள், பின்னர் எமது சிறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுவந்த போது தெரிவித்த தகவல்களின் அடிப்படையிலேயே, சிறீயின் வரணி முகாம் செயற்பாடுகள் குறித்த தகவல்களை இங்கு தந்துள்ளேன்.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம் 55

பா.ராகவன்

**ஆனால்** அவர்களுக்கு ஒன்று புரியவில்லை. சரித்திரத்தின் அத்தனை பக்கங்களிலும் விடாப்பிடியாக அவர்களுடன் மல்லுக்கட்டிக்கொண்டிருந்த யூதர்கள் அப்போது எங்கே போய்விட்டார்கள்? ரொம்ப சரி. ஜெருசலேத்தைக் கிருத்தவர்கள் கைப்பற்றிய நாளாகவே மாற்று மதத்தவர்களுக்கு அங்கே ஆபத்து தான். மாற்று மதத்தவர் என்றால் யூதர்கள் மட்டுமல்ல. முஸ்லிம்களும் கூடத்தானே? கூட்டம்கூட்டமாக வெட்டிச் சாய்த்தார்கள். குப்பை அள்ளிப்போடுவது போலப் பிணங் களைக் குவித்து மொத்தமாக



எரித்தார்கள். கொடுமைதான். நரகம்தான். தாங்கமுடியாத அவலம்தான். ஆனால் ஒருத்தர் என்றால் ஒருத்தர் கூடவா மிச்ச மில்லை. எங்கேதான் போய்விட்டார் கள் இந்த யூதர்கள்?

மிகமிக முக்கியமான கேள்வி இது. நம்புவது மிகவும் சிரமம் என்றாலும் சரித்திரம் சுட்டிக்காட்டும் மிகப்பெரிய உண்மை இது. சிலுவைப் போர் வீரர்களின் தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக பாலஸ்தீனிலிருந்து அத்தனை யூதர்களும் இடம்பெயர்ந்து போய்விட்டார்கள்.

அப்படித் தப்பிப்போன யூதர் களில் சுமார் ஐயாயிரம் பேரை, கிருத்தவர்கள் பல்வேறு நாடுகளில் வெட்டிக்கொன்றது உண்மையே என்றாலும், மிச்சமுள்ள யூதர்கள் ஒழித்து வாழ்ந்து உயிர்பிழைத்து விட்டதும் உண்மை. கட்டக்கடைசி யாக ஜெருசலேத்தில் இருந்து தோல்வியுடன் திரும்பிய சிலுவைப் படையினர், வழியில் பெய்ருட்டில் பதுங்கியிருந்த முப்பத்தைந்து யூதக் குடும்பங்களை மொத்த மாகக் கொன்று வீழ்த்தியதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. வேறு சிறு நூறு யூதர்களை அடிமை களாக அவர்கள் ஐரோப்பாவுக்கு அழைத்துச் சென்றுவிட்டதாகவும் சில சித்திர ஆசிரியர்கள் எழுது கிறார்கள்.

யூதர்களின் இந்த அழிவு – தலைமறைவு– நாடோடி வாழ்க்கை பற்றியெல்லாம் எழுதுபவர்கள் ஒரு விஷயத்தை மட்டும் தொடுவது இல்லை. நெருக்கடிமிக்க அந்த நூற்றைம்பது ஆண்டு காலத்தில் ஏன் அவர்கள் பாலஸ்தீனின் விடுதலைக்காக அராபியர்களுடன் இணைந்து போரிடவில்லை என்பதுதான் அது. விரல்விட்டு எண்ணி விடக் கூடிய சிறு கைகலப்புச் சம்பவங்களின்போது தற்காப்புக்காக யூதர்கள், முஸ்லிம்களுடன் இணைந்து கிருத்தவர்களைத் தாக்கியிருக்கிறார் கள். ஹெய்பா என்ற இடத்தில் நடந்த ஒரு சண்டையில் சில நூறு யூதர்கள், முஸ்லிம்களுடன் சேர்ந்துகொண்டு கிருத்தவர்களை எதிர்த்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் மாபெரும் யுத்தங்கள் நடந்த காலங் களிலெல்லாம் அவர்கள் காணாமல் போய்விட்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

யூதர்களின் மீது பாலஸ்தீன் முஸ்லிம்களுக்கு முதல் முதலாக வெறுப்பு தோன்றியதன் ஆரம்ப காரணம் இதுதான். உமர் தொடங்கி, சலாவுதீன் வரையிலான இஸ்லாமிய ஆட்சியாளர் களில் பெரும்பாலானோர், மதத் துவேஷம் இல்லாதவர்களாகவே அப்போது இருந்திருக்கிறார்கள். யூதர் கள் முஸ்லிம்கள் இருதரப்பினருமே ஆபிரகாமின் வழித்தோன்றல்கள் என்கிற புராண நம்பிக்கையின் அடிப்படையிலும், இருதரப்பினருமே உருவமற்ற ஒரே இறைவனை வணங்குபவர்கள் என்கிற ஆன்மீகக் காரணத்தின் அடிப்படையிலும் ஒற்றுமையாக வாழவேண்டியதன் அவசியத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

ஆனால் ஒரு பெரும் நெருக்கடி என்று வரும்போது எதிர்த்து நின்று சமாளிக்கத் தோள்கொடுக்காமல், சொந்த சமூகத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுக் காணாமல் போய்விட்ட யூதர்களை, அங்கேதான் அராபியர்களுக்குப் பிடிக்காமல் போனது.

இது மிக முக்கியமானதொரு தருணம். சிலுவைப்போர் காலத்தில் முஸ்லிம்களுடன் யூதர்கள் இணைந்து ஒரு பக்கத்தில் நின்றிருப்பார்களே யானால் பின்னால் மூண்ட பெரும் பகையின் வீரியம் கணிசமாகக் குறைந் திருக்கக்கூடும். ஒருவேளை அந்த நெருக்கடி நேர ஒற்றுமை நிரந்தர ஒற்றுமையாகக்கூட மலர்ந்திருக்க முடியும். நூறு சதவீத ஒத்துழைப்பு முடியாவிட்டாலும் ஓரளவாவது யுத்தங்களில் அவர்களும் பங்கெடுத்தால், பின்னாளில் அதே கிருத்தவ ஐரோப் பியர்களால் யூதர்கள் சொல்லொணாக் கொடுமைகளை அனுபவிக்க நேர்ந்த போது முஸ்லிம்கள் உதவிக்கு முன் வந்திருப்பார்கள்.

ஆனால் இது எதற்கும் வாய்ப் பில்லாமல் போய்விட்டது. சுருக்கமாகச் சொல்வதென்றால் நெருக்கடி நேரத்தில் யூதர்கள் காணாமல் போய் விட்டார்கள். கொஞ்சம் விரித்துச் சொல்வதென்றால், குறைவான மக்கள் தொகை கொண்ட சமூகம் மேலும் சிறுத்துவிடாதிருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு தற்காப்பு நடவடிக்கை அது.

கி.பி.1210 இல் யுத்தம் ஒருவாறு முடிவுக்கு வந்துவிடும் என்கிற சூழ்நிலை உருவானபோதுதான் முதன்முதலில் பாலஸ்தீனுக்கு சுமார் முந்நூறு யூதர்கள் திரும்பி வருகிறார்கள். அவர்களும்கூட, குடும்பத்துடன் திரும்பி வந்தவர்கள் அல்லர். மாறாக மதகுருக்கள், சட்ட நிபுணர்கள், முன்னாள் ஆட்சியாளர்கள் அடங்கிய ஒரு ஆய்வுக்குழுவாகவே அவர்கள் பாலஸ்தீனுக்கு வந்தார்கள். யூதர்கள் அங்கேவிட்டுச் சென்ற நிலங்களைத் திரும்பப் பெற்று, மீண்டும் யூதர்களை அங்கே குடியமர்த்த முடியுமா, அதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதை ஆராய்வதற்காக அவர்கள் வந்தார்கள்.

ஏனெனில், அன்றைய சூழ்நிலை யில் ஐரோப்பாவில் கிருத்தவ ஆட்சி யாளர்களின் கீழே யூதர்கள் வாழ்வது சாதாரணமான காரியமாக இல்லை. காரணமே இல்லாமல் யூதர்களை அவர்கள் தொடர்ந்து துன்புறுத்தி வந்தார்கள். ஒரு நாடு, இரண்டு நாடுகள் என்றில்லை, எங்கெல்லாம் கிருத்தவம் தழைத்ததோ, அங்கெல்லாம் யூதர்கள் அவதிப்படத் தொடங்கினார்கள். அடிப்படையில் அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் எங்குமே கிடைக்கவில்லை. சுய தொழில் செய்யவும் ஏகப்பட்ட கெடுபிடிகள் இருந்தன. ஒரு பெட்டிக்கடை வைப்பது கூட மாபெரும் பிரச்சினையாக இருந்தது. கிருத்தவர்கள் வாழும் வீதிகளில் யூதர்கள் வாடகை கொடுத்துக்கூடத் தங்கமுடியாது. கிருத்தவ உணவகங்களில் அவர்கள் உணவருந்த முடியாது. (தனியாக ஓட்டல் நடத்தலாமா என்றால் அதுவும் கூடாது) ஐரோப்பாவெங்கும் முஸ்லிம் கள் இரண்டாம்தரக் குடிமக்களாகவும், யூதர்கள் மூன்றாம்தரக் குடிமக்களாக வும் நடத்தப்பட்டதாகப் பொதுவாகச் சொல்வார்கள். உண்மையில் யூதர் களை அங்கே கிருத்தவர்கள், 'மக்களாகவே' நடத்தவில்லை என்பதுதான் சரி. எத்தனை


நூற்றாண்டுகள் கழிந்திருந்தாலும் ஆதிகாலத்து வன்மமும் விரோதமும் அன்றைக்கு அடிக்கடி நினைவுகூரப் பட்டன. ஒரு இயேசுநாதரை யூதர்கள் கொன்றதற்காக ஒட்டுமொத்த யூத இனமுமே அழிவதுதான் சரி என்பது போன்ற கருத்தாக்கம் மிக ஆழமாக வேரூன்றியிருந்தது.

ஆனால், இதுமட்டுமே காரணம் அல்ல. தமக்குக் கிடைக்கும் மிகச் சிறிய வாய்ப்புகளைக்கூட யூதர்கள் அன்று மிகத் திறமையாகப் பயன் படுத்திக் கொள்ளக்கூடியவர்களாக இருந்தார்கள். ஒரு யூதருக்கு, ஒரு சிறு கடை வைத்துப் பிழைக்க வாய்ப்புக் கிடைத்துவிட்டதென்றால் நிச்சயம் அவருக்கு தெரிந்த இன்னொரு பத்து– இருபது பேருக்காவது வேலைவாய்ப்பு உறுதியாகிவிடும். கவனத்துக்கு எட்டாமலேயே அடுத்த சில காலத்துக் குள் அந்தப் பிராந்தியத்தில் இருபது யூதக்கடைகள் எப்படியோ தோன்றிவிடும். (தொடரும்...)

# நம்பமுடியாத அதிசயம்..! ஆனால் உண்மை..!

**தற்செயலாக நடப்பதுபோல் இருக்கும் சில சம்பவங்களைப் பின் யோசித்துப் பார்த்தால் அது தற்செயல்தானா? என்கிற சந்தேகம் நமக்கு வந்துவிடும். அறிவியல் அல்லது பகுத்தறிவு விதிகளுக்குப் பொருந்தாதவையாக அவை தோன்றினாலும்கூட நம் அறிவுக்கு எட்டாத ஏதோ ஒருவிதி அந்த நிகழ்வுகளை சீரான முறையில் இயக்கி இருப்பது போல தோன்றும். அப்படிப்பட்ட சில ஆதாரபூர்வமான நிகழ்வுகளை இங்கு பார்ப்போமா?**

**முதலில் இரண்டு அமெரிக்க ஜனாதிபதிகள் விஷயத்தில் இருந்த மாபெரும் ஒற்றுமைகளைப் பார்ப்போம் –**





- ஆபிரகாம் லிங்கன் 1860 ஆம் ஆண்டும் ஜோன் கெனடி 1960 ஆம் ஆண்டும் அமெரிக்க ஜனாதிபதியானார்கள். சரியாக நூறு வருட இடைவெளி.
- இருவரும் வெள்ளிக் கிழமை அன்று, தத்தம் மனைவிகளின் அருகில் இருக்கும்போது சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.
- இருவர் மனைவிகளும் வெள்ளை மாளிகையில் வாழும்போது பிள்ளை பெற்றனர். பிறந்தவுடன் குழந்தை இறந்தும் போனது.
- இருவரும் தலையின் பின்பகுதியில் குண்டு துளைத்துச் செத்தார்கள்.
- இருவரும் இறந்த பின் ஜோன்சன் என்ற பெயருள்ளவர்கள் உடனே ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்கள். (ஆண்ட்ரூ ஜோன்சன், லிண்டன் ஜோன்சன்)
- ஆண்ட்ரூ ஜோன்சன் பிறந்தது 1808. லிண்டன் ஜோன்சன் பிறந்தது 1908. சரியாக அதே நூறு வருட இடைவெளி.
- இருவரையும் கொன்றவர்கள் பிறந்த வருடங்கள் கூட நூறு வருட இடைவெளிகள். ஜோன் வில்க்ஸ் பூத் பிறந்தது 1839 லீ ஹார்வி அஸ்வோல்டு 1939.
- இரு கொலைகாரர்களும் பிடிபட்டு வழக்குத் தொடுப்பதற்கு முன் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.
- பூத் லிங்கனை ஒரு தியேட்டரில் கொன்றுவிட்டு ஒரு கிடங்குக்கு ஓடினான். அஸ்வோல்டு ஒரு கிடங்கிலிருந்து கொன்றுவிட்டு தியேட்டர் நோக்கி ஓடினான்.
- லிங்கனின் செயலாளரின் முன் பெயர் ஜோன். ஜோன் கெனடியின் செயலாளரின் பின் பெயர் லிங்கன்.

**இன்னொரு சம்பவம் 'Life' பத்திரிகையில் வெளியான உண்மை சம்பவம். இதனை வாரன் வீவர் என்ற கணித அறிஞர் தன் புத்தகம் ஒன்றிலும் குறிப்பிடுகிறார்.**

அமெரிக்காவில் நெப்ராஸ்கா என்ற மாநிலத்தில் உள்ள Beatrice என்ற சிறிய நகரில் உள்ள ஒரு சேர்ச்சில் 1950 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒன்றாம் திகதி 15 பாடகர்கள் சேர்ந்து கூட்டாக சரியாக காலை 07.20 மணிக்குப் பாடுவதாக இருந்தது. ஆனால் அத்தனை பேரும் வேறு வேறு காரணங்களுக்கு சேர்ச்சிற்கு வர அதிக தாமதமாகிவிட்டது. ஒருத்தி ஒரு றேடியோ நிகழ்ச்சியில் ஆழ்ந்து போய் கிளம்பத் தாமதமானது. இன்னொருத்தி கணிதப்பாடம் எழுதி முடித்துக் கிளம்பத் தாமதமானது. ஒருவருக்குக் காரை ஸ்டார்ட் செய்வதில் பிரச்சினை. இப்படி ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரணம். இவர்கள் சரியான நேரத்திற்குள் வந்துசேராததே இவர் களைக் காப்பாற்றியது என்பதுதான் அதிசயச் செய்தி. காலை சரியாக 07.25 க்கு வெடிகுண்டு வெடித்ததில் சேர்ச் தரைமட்டமாகியது.

1900 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இத்தாலிய அரசர் உம்பர்டோ (King Umberto I) மோன்ஸா என்ற நகரில் ஒரு பெரிய ஓட்டலில் உணருந்தச் சென்றபோது அதிர்ச்சி அடைந்தார். காரணம் அந்த ஓட்டல் உரிமையாளர் அசப்பில் அவரைப் போலவே இருந்ததுதான். அவரிடம் பேசியபோது மேலும் பல ஆச்சரியங்கள் அவருக்குக் காத்திருந்தன. அந்த ஓட்டல் உரிமை யாளர் பெயரும் உம்பர்ட்டோ. இருவர் மனைவியர் பெயரும் மார்கரிட்டா. அந்த மன்னர் முடிசூட்டிய அதே நாளில்தான் அந்த ஓட்டல் உரிமையாளர் அந்த ஓட்டலைத் துவக்கினார். இருவர் பிறந்ததும் ஒரே நாள் 14-03-1844. ஆச்சரியத்தோடு அந்த ஓட்டல் அதிபருடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு சென்ற மன்னர் ஒரு மாதம் கழித்து 29-07-1900 அன்று அந்த ஓட்டல் உரிமை யாளர் ஒரு துப்பாக்கி சூட்டில் சற்றுமுன்தான் காலமானார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டார். சில மணி நேரங்களில் மன்னரும் ஒரு வன்முறைக் கும்பலால் கொல்லப்பட்டார்.

Ohio வில் பிறந்த இரட்டையர் வாழ்க்கையின் ஆச்சரியமான குறிப்புகள் 1980 ஜனவரி மாத ரீடர்ஸ் டைஜஸ்டில் வெளி வந்துள்ளன. இருவரும் பிறந்தவுடனேயே பிரிக்கப்பட்டு இருவேறு தொலைதூரக் குடும்பங்களுக்குத் தத்துக் கொடுக்கப்பட்டனர். இரு குடும்பங்களும் ஒன்றிற்கு ஒன்று தெரியாமலேயே குழந்தை களுக்கு ஜேம்ஸ் என்று பெயரிட்டனர். இருவரும் சட்ட அமலாக் கப் பிரிவில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இருவருக்குமே பல திறமைகள் ஒன்றாகவே இருந்தன. இருவரும் லிண்டா என்ற பெயருடைய பெண்களையே முதல் திருமணம் செய்து கொண்டனர். இருவருமே தங்கள் மகன்களுக்கு ஜேம்ஸ் அலன் என்ற பெயரையே இட்டனர். இருவரும் முதல் மனைவியை விவாகரத்து செய்து இரண்டாம் திருமணம் செய்து கொண்டது பெட்டி (Betty) என்ற பெயருடைய பெண்களை. இருவரும் தங்கள் நாய்க்கு Toy என்ற பெயரையே வைத்திருந்தனர். நாற்பது ஆண்டு காலம் கழிந்து இணைந்த அந்த இரட்டையர் தங்களை அறியாமல் தங்கள் வாழ்க்கைகளில் இருந்த ஒற்றுமையை எண்ணி அதிசயித்தனர்.

***இந்த நிகழ்ச்சிகள் நம்மை ஆச்சரியப்பட வைக்கின்றன அல்லவா? இவற்றை எல்லாம் தற்செயல் என்று கண்டிப்பாக நாம் நினைத்துவிட முடியாது. இந்த சம்பவங்களைப் படிக்கையில் அவற்றில் முன்பே தீர்மானிக் கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஒரு அம்சம் இருக்கிறது என்றல்லவா தோன்றுகிறது. ஏன், எதற்கு என்பது விளங்காவிட்டாலும் கூட அந்த ஏதோ ஒரு விதியை நம்மால் மறுக்க முடிவதில்லை அல்லவா?***

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் வேண்டும்

அலசுவது – மதியூகி

**ஐக்கியத்தோடு சிறுபான்மை இனங்களின் அரசியல் அபிலாஷைகளை மதித்தும், அவர்களும் கௌரவமாக வாழவேண்டுமென உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் பன்பு நிறைந்த காருண்யம் தெரிந்த பௌத்த மக்கள் பெரும்பான்மை சிங்கள மக்கள் இருக்கின்றார்கள். அரசியலிலும் அத்தகைய நல்ல தலைவர்கள் இன்னும் இருக்கின்றார்கள். அவர்கள்தான் இலங்கை மூவின மக்கள் வாழும் நாடு. தமிழ், முஸ்லிம் மக்களும் சம அரசியல் உரிமைகளுடன் இலங்கை மண்ணில் வாழ்வதற்கு உரிமையுடையவர்கள் என்று துணிச்சலோடு கூறுகின்றார்கள்.**

**தமிழ்** மக்களின் கோரிக்கையாக இருந்தால் "ஐயோ தமிழ் மக்கள் நாட்டை துண்டாட முயற்சிக்கின்றார்கள். அதற்கு ஒருபோதும் நாம் இணங்க மாட்டோம். இந்தியா அண்ணா! நீங்களும் எங்களுக்கு உதவ வேண்டும், மற்றும் சர்வதேச சமூகமே! உங்களுக்கும்தான், இலங்கையை துண்டாட நீங்களும் துணைபோகப் போகின்றீர்களா?" என்றெல்லாம் அழுதார்கள்.

மாகாண சபையை பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இலங்கையை இரண்டாகப் பிரிப்பதை விடவும், ஒன்பது மாகாணங்களாக அதிகாரத்தை பகிர்ந்து கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் இலங்கையர் என்று வாழ்வது சாத்தியம் தமிழ் மக்களும் ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதற்கு மாகாண சபையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஆலோசனைக் கூறினார்கள்.

மாகாண சபைதான் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டம், அதுவே நடைமுறைச் சாத்தியமாகும், இருக்கின்ற மாகாண சபை முறைச் சட்டத்தை அமுல் படுத்த முடியுமே தவிர, இனப் பிரச்சனைக்கான தீர்வுக்காக ஏற்றுக் கொள்ளமுடியாத புதிய சட்டம் ஒன்றை ஏற்படுத்துவது சாத்தியமில்லை என்றும் தன்னிலை விளக்கம் கொடுத்தார்கள்.

இப்போது புலிகளின் ஆயுத வழியில் அழிக்கப்பட்டபிறகு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப்பிரச்சனைக்கு தீர்வே தேவையில்லை என்றவிதமாக கூறுகின்றனர் மாகாண சபையே தேவையில்லை என்றும், மாகாண சபைகள் இருந்தாலும் அதற்குரிய அதிகாரங்கள் அத்தனையையும் பறித்துவிட வேண்டும்.

மாகாண சபையை வைத்துக் கொண்டு தமிழர்கள் ஒன்றையும் செய்யமுடியாத நிலையை தோற்றுவிக்கவேண்டும். தீர்வு, உரிமை, அரசியல் அபிலாஷை" என்றெல்லாம் தமிழர்கள் வெறும் வார்த்தைகளில் உளறிக்கொண்டிருந்தால் போதும் என்பதை வெளிப்படையற்ற கொள்கையாகவே நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இப்படியெல்லாம் பொதுவாக குறிப்பிடுவதற்கு காரணம் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான சதியை திட்டமிடுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும், தனி நபர்களாக இல்லாமல் மதச் சார்புள்ளவர்களும், இனவாதிகளும், அரசியல்வாதிகளும், அதிகாரத்திலிருப்பவர்களும் இணைந்து கூட்டாக செயற்படுகின்றார்கள்.

பிரச்சனையை ஒருவர் ஆரம்பிப்பதும், மற்றவர் அந்தப்பிரச்சனையைப் பற்றிப் பேசுவதும் இன்னொருவர் அதைப்பற்றி கருத்துச் சொல்வதும் பின்னர் அது தொடர்பான விவாதங்களை பல மட்டத்திலிருந்தும் வளரச் செய்து பலரும் குறித்த பிரச்சனை தொடர்பில் வாய்கிழியக் கத்தி ஓய்ந்ததும் இறுதியில் எந்த நோக்கத்திற்காக பிரச்சனையை ஆரம்பித்தார்களோ அந்தப் பிரச்சனைக்கு ஏற்கெனவே திட்டமிட்டபடி தீர்வை அறிவிப்பது இப்படி மிக கச்சிதமாக தமது இனவாதத்தையும், துஷ் பிரயோகத்தையும் பிரயோகிக்கின்றார்கள்.

மத வழிபாட்டுத்தளங்கள் மீதான தாக்குதல்கள், சிறுபான்மையினரின் பொருளா-தார நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள். அத்துமீறி இரவோடு இரவாக முளைக்கும் சிலைகள், இப்போது மாகாண அதிகாரத்தில் வைக்கப்படும் வெடி குண்டுகள் எல்லாமுமே யாருக்கும் ஒரே இரவில் உதித்த திட்டங்கள் இல்லை. கூட்டுச்சதி என்ற சந்தேகங்கள் சிறுபான்மை மக்களிடம் உறுதியாகவே இருக்கின்றது.

இந்த சதிகாரர்களின் நடுவே சிறுபான்மை மக்கள் தமது கௌரவத்துக்காகவும், அரசியல் அபிலாஷைகளுக்காகவும் போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. போராட்டம் என்றதும் ஆயுதங்களை கையில் ஏந்திக் கொள்வதோ, இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் செயற்பாட்டுக்கு துணைபோவதோ, தாய் நாடான இலங்கை மண்ணை குட்டையைக் குழப்பி விடும் வெளிச்சக்திகளுக்கு காட்டிக் கொடுப்பதோ அல்ல.

இருக்கக்கூடிய அரசியல் பலத்தினையும், கடந்தகால அனுபவங்களையும் பயன்படுத்தி ஒற்றுமையின் வடிவமாக பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் சிறுபான்மையினரின் நியாயங்களை தெளிவுபடுத்தவேண்டும். கூடவே சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சதிகளையும் அம்பலப்படுத்த வேண்டும். ஏன் என்றால் சிறுபான்மை மக்களின் நியாயங்களை புரிந்து கொள்வதோடு, அதிகார துஷ்பிரயோகங்களை வெறுக்கும் சிங்களப் பெரும்பான்மையினர் இன்னும் இருக்கின்றார்கள். ஒட்டுமொத்த சிங்கள மக்களுமே சிறுபான்மை மக்களுக்கு ஆதரவானவர்களாக இல்லை என்பது மட்டுமே சிறுபான்மை மக்களுக்கு தற்போதைக்கு எஞ்சியிருக்கும் நம்பிக்கையாகும்.

ஐக்கியத்தோடு சிறுபான்மை இனங்களின் அரசியல் அபிலாஷைகளை மதித்தும், அவர்களும் கௌரவமாக வாழவேண்டுமென உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் பண்பு நிறைந்த காருண்யம் தெரிந்த பௌத்த மக்கள் பெரும்பான்மை சிங்கள மக்கள் இருக்கின்றார்கள். அரசியலிலும் அத்தகைய நல்ல தலைவரகள் இன்னும் இருக்கின்றார்கள். அவர்கள்தான் இலங்கை மூவின மக்கள் வாழும் நாடு, தமிழ், முஸ்லிம் மக்களும் சம அரசியல் உரிமைகளுடன் இலங்கை மண்ணில் வாழ்வதற்கு உரிமையுடையவர்கள் என்று துணிச்சலோடு கூறுகின்றார்கள்.

மாகாண சபைகளின் அதிகாரங்களை மத்திய அரசு பறித்துவிடக்கூடாது என்றும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் சரத்துக்களை வலுவிழக்கச் செய்யும் சட்ட திருத்தங்களைச் செய்யக் கூடாது என்றும் கூறுகின்றனர். இவர்கள் தமது அரசியல் சுகபோகங்கள் பறிபோய்விடுமென அஞ்சவில்லை. இலங்கை தாய் நாட்டில் சிங்கள மக்களின் பலமே சிறுபான்மை மக்களையும் அரவணைத்துக் கொண்டு வாழ்வதுதான் என்ற யதார்த்தத்தை உணர்ந்தவர்கள். அநியாயத்தோடு வாழ்வதை விடவும், நியாயத்தோடு சாவது பௌத்த தர்தமமாகும் என்று வாழ்கின்றவர்கள். பொலிஸ் அதிகாரங்களை சிறுபான்மை இனங்கள் துஷ்பிரயோகம் செய்துவிடுமா? என்ற கேள்விகள் இவர்களிடமும் உண்டு. அதுகுறித்து பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். ஆனால் காணி அதி-காரம் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த வேளையில் சிறுபான்மையாக இருந்தாலும் நாம் ஒரு தேசிய பிரச்சனையை எதிர் கொண்டுள்ளோம் என்பதை இரு இனங்களும் முதலில் வேறுபாடுகளுக்கு அப்பால் ஏற்றுக் கொண்டு பொது இணக்கப்பாடொன்றைக் காணவேண்டும்.

பலம் பொருந்திய இனவாதத்துக்கு முன்னால், நமக்குள் யாரும் பெரியவர்களுமில்லை, சின்னவர்களுமில்லை என்று சமரசம் செய்து கொள்ள வேண்டும். சிறுபான்மை தலைமைகளும் புத்திஜீவிகளும் பொது வேலைத்திட்டத்தில் ஒன்றுபட்டால் அதை முற்றாக புறக்கணித்து நடக்க எவருக்கும் துணிச்சல் இருக்காது. அத்தகைய சூழலானது சிறுபான்மை இனங்களை அடக்க நினைக்கும் சக்திகளுக்கு பெரும் பின்னடைவை நிச்சயம் ஏற்படுத்தும், அவர்களின் முட்டாள் தனத்தை வெளிச்சத்துக்கு கொண்டுவரும்.

அந்த வெற்றியைப் பெற தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகள் முதலில் தமது ஒற்றுமையைக் காட்டவேண்டும், சிறுபான்மை மக்களுக்காக குரல் கொடுக்கும் பெரும்பான்மைத் தலைமைகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும். இனவாதத்தை வெறுக்கும் பெரும்பான்மை மக்களும் நிச்சயம் தமது ஆதரவை தருவார்கள்.

நாட்டுக்கும், அரசுக்கும் எதிராக செயற்படும் வெளிநாட்டுச் சக்திகளும், அவர்களுக்கு துணைபோகும் உள்நாட்டுச் சக்திகளும் செயற்படுவதாக அரசாங்கம் கூறுவருகின்றது. ஆனால் அரசுக்குள் இருந்து கொண்டு இனவாதத்தைக் கக்கும் சிலரால் அரசுக்குள் கருத்து முரண்பாட்டையும், அணிச்சேர்க்கைகளையும் தோற்றுவித்துள்ளதைப் பார்கும்போது அரசுக்கு எதிரான சதி வெளியிலிருந்து இல்லை என்பதை புரிந்து கொள்ளமுடிகின்றது.

13ஆவது திருத்தச்சட்டம் ஐக்கிய இலங்கைக்கு எதிரான இனவாதிகளை மிகத் துள்ளியமாக வெளிக்காட்டியதோடு, அவர்களை தனியான அணியாகவும் காட்டியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை செய்ய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளை கூட்டி முடிவெடுக்கவுள்ளதாக கூறப்பட்டபோதும், அந்தக் குழுவில் தமிழ் கூட்டமைப்பு கலந்து கொள்ளாவிட்டாலும் பங்கு கொள்ளக்கூடிய கட்சிகளுடன் கலந்துரையாடி முடிவொன்றை எடுக்கவுள்ளதாகவும் அரச தரப்புச் செய்தியொன்று கூறியது.

அவ்வாரென்றால் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை வழங்குவதற்கு மட்டும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ் கூட்டமைப்பு வராததை ஒரு காரண-மாக கூறியதையும், கால இழுத்தடிப்பைச் செய்ததையும் அரசு திட்டமிட்டே செய்கின்றதா? என்ற சந்தேகங்கள் தமிழ் மக்களிடம் எழுகின்றது.

13ஆவது திருத்தச் சட்டம் தற்போதுள்ள சரத்துக்களுடன் முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். அதன் உயிரைப் பிடுங்கிவிட்டு பிணத்தைச் சுமக்கும் நிலையை தோற்றுவிக்கக்கூடாது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவே 13ஆவது திருத்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதை ஏற்க மறுத்து செயற்படுவதானது, புற்றுநோய்க்கு வைத்தியம் பார்ப்பதை விட்டுவிட்டு அதனை உணர்த்தும் காய்ச்சலுக்கு பெனடோல் போட்டுக் கொள்தற்கு ஒப்பாகவே இருக்கும்.

---




**கடல்** கொள்ளையரால் கைப்பற்றப்பட்ட கப்பல் ஒன்றை ஐரோப்பிய யூனியன் மற்றும் நேட்டோ கப்பல்கள் துரத்திச் சென்று, கடல் கொள்ளையரை விரட்டியடித்தன என்று கடல் கொள்ளையரால் கைப்பற்றப்பட்ட கப்பலையும் அதிலிருந்த 14 இந்திய மாலுமிகளையும் மீட்ட செய்தி கடந்த வாரம் பிரித்தானிய ஊடகங்களில் முக்கிய இடம் பிடித்திருந்தது.

சோமாலிய கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த சரக்கு கப்பலையே கடல் கொள்ளையர்கள் குறி வைத்தனர். தம்மிடம் இருந்த வேகப்படகு மூலம் கப்பலை அணுகிய அவர்கள், கப்பலுக்குள் ஏறினர். கப்பலில் பணிபுரிந்த இந்திய மாலுமிகள் உடனடியாக கப்பலின் ரேடி-யோ சாதனம் மூலம் அபாய அறிவிப்பை அனுப்பினர்.டிதமது கப்பலுக்குள் 12 கடல் கொள்ளையர்கள் துப்பாக்கிகளுடன் ஏறியிருப்பதாகவும், அவரச உதவி தேவை எனவும் இருந்த இந்த அபாய அறிவிப்பு, அந்தக் கடல் பகுதியில் இருந்த இரு கப்பல்களை சென்றடைந்தது. அவற்றில் ஒன்று சுவிடன் கடற்படையின் போர்க் கப்பல். மற்றையது டச்சு (நெதர்லாந்து) கடற்படையின் ரோந்துக் கப்பல்.இந்த இரு கப்பல்களும், உடனடியாக சரக்கு கப்பல் இருந்த கடல் பகுதியை நோக்கி வரத் தொடங்கின. சரக்குக் கப்பலில் இருந்து 5 கடல் மைல்கள் தொலைவில் வரும்போதே எச்சரிக்கை வேட்டுக்களை வெடிக்கத் தொடங்கின.

இதற்கிடையே இந்திய மாலுமிக-ளிடம் இருந்து கப்பலின் கட்டுப்பாட்டை கைப்பற்றியிருந்த கடல் கொள்ளையர்கள், இரு கடற்படைக் கப்பல்கள் சரக்கு கப்பலை நோக்கி வேகமாக வருவதை கண்டுவிட்டு, கப்பலை இயக்கி, கரையை நோக்கி செலுத்தத் தொடங்கினர்.

இரு கடற்படை கப்பல்களும் விடாமல் துரத்தவே சோமாலியா நாட்டு கரையை நெருங்கிவிட்ட கடல் கொள்ளையர்கள், கப்பலை கரைக்கு மிக அருகே கொண்டுபோய், ஆழமற்ற கடல் பகுதியில் கப்பலை தரைதட்ட செய்துவிட்டு, கப்பலில் இருந்து குதித்து, கரையை நோக்கி நீந்திச் சென்று தப்பித்து ஓடிவிட்டனர்.

துரத்தி வந்த கடல்படை கப்பல்களால், ஆழம் குறைந்த கடல் என்பதால் கரைக்கு அருகே வர முடியவில்லை. வந்தால், அவர்களது கப்பல்களும் தரைதட்டும் அபாயம் இருந்தது. இதனால், டச்சு கடற்படை வீரர்கள் தமது கப்பலை ஆழ்கடலில் நிறுத்திவிட்டு, கப்பலில் இருந்த வேகப்படகு மூலம், தரைதட்டி நின்ற சரக்கு கப்பலை அணுகி, உள்ளே ஏறினர். உள்ளேயிருந்த இந்திய மாலுமிகள் பாதுகாப்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டது. ஆனால், சரக்குக் கப்பல் இயங்க முடியாத நிலையில் சோமாலிய கரையில் தரைதட்டி நின்றுகொண்டது.




# பர்மாவில் ஜனநாயகம் பிறக்குமா?

தொகுப்பு வேணுகிருஷ்ணா

**“ஏகாதிபத்திய எடுபிடி எழுத்தாளர்கள் அமெரிக்காவை ஜனநாயக காவலராக சித்தரிப்பதோடு. சீனாவை ஜனநாயக எதிரியாகவும் காட்டி வருகின்றனர். சீன மற்றும் பர்மாவின் வரலாற்றை படிப்பவர்களுக்கு ஒரு விஷயம் நன்றாக புரியும். இந்த இரு நாடுகளுக்கும் 17 ஆம் நூற்றாண்டிலிருந்தே நல்லுறவு இருந்து வருவதைக் காண முடியும். மேலும். பிரிட்டிஷ் மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து 1948 ஜனவரியில் விடுதலை பெற்ற பர்மாதான் உலகிலேயே முதன் முதலில் சோசலிச சீனாவை ஆதரித்த கம்யூனிஸ்ட் அல்லாத முதல் நாடு என்பது குறிப்பிடத்தக்கது. வரலாற்று ரீதியாக நல்லுறவை வைத்துக் கொண்டுள்ள சீனாவிற்கு எதிராக விஷம் கக்கும் பிரச்சாரத்தை முதலாளித்துவ எடுபிடிகள் தொடர்ந்து செய்து வருவது அமெரிக்க வழியிலான ஜனநாயகத்தை காப்பதற்கே தவிர பர்மாவின் நலனுக்காக அல்ல!”**

**மியான்மர்** அல்லது மியான்மார் அல்லது பர்மா ஆசியாவில் தென்கிழக்கு பகுதியில் அமைந்த நாடாகும். இன்று மிக மெதுவாக இரும்புத் திரை விலகும் நாடு. 1989ம் ஆண்டு பர்மா என்ற நாட்டின் பெயரை மியான்மர் (Union of Myanmar) என்று மாற்றினர். அப்போதைய தலைநகர் ரங்கூன் பின்னர் யங்கோன் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2006 ஆம் ஆண்டின் பின்னர் மியான்மரின் தலைநகராக நைப்பியித்தெள மாற்றியமைக்கப்பட்டது. சுமார் 130 இனங்கள் வாழ்கின்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளும் வட்டார வழக்குகளும் உள்ளன. அரசு மொழி: பர்மியம். பௌத்தம் ஒரு பிரதான மதம்.பல்லாயிரக்கணக்கான புத்த விகாரைகள் நாடு முழுவதும் பரவியிருக்கின்றன. இப்பொழுது பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே முரண்பாடு தீவிரமடைந்து வருகிறது.பெருந்தொழில்கள் எல்லாம் அரசின் கையில் உள்ளது. விவசாயம், சிறுதொழில்கள், போக்குவரத்து போன்றவை தனியார் வசம் உள்ளது. தொழிலாளிகளில் 67.4% பேர் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். ஐராவதி ஆற்றுப் படுகையில் உலகின் வளமான நெல் விளைநிலங்கள் உள்ளன.பர்மாவில் ஒருகாலத்தில் தமிழர்க்ள் அதிக அளவில் வாழ்ந்தனர்.

## ஜனநாயகப் போரில் பர்மா

தெற்காசிய பகுதியின் முக்கிய நாடுகள், குறிப்பாக இந்தியாவின் அண்டை நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், மியான்மர் (பர்மா), மற்றும் தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் இராணுவ சர்வாதிகார ஆட்சிகள் கொடிகட்டிப் பறந்தன. நேபாளத்தில் நிலப்பிரபுத்துவ மன்னராட்சியிடமிருந்து ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டுவதற்கான போராட்டம் நடைபெற்றது. மொத்தத்தில், நவீன உலகில் இத்தகைய முதலாளித்துவ இராணுவ சர்வாதிகார ஆட்சிகள் மக்கள் ஜனநாயகத்திற்கு பெரும் சவாலாக விளங்குகின்றன. ஏகாதிபத்திய காலனி ஆட்சியாளர்களை விரட்டியடித்த நாடுகள் தற்போது சர்வாதிகரிகளிடம் சிறைப்பட்டுக் கிடக்கின்றன.

இல்லற வாழ்வை துறந்த லட்சக்கணக்கான புத்த துறவிகள் உழைக்கும் மக்களுடன் இணைந்து ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## ஏன் அந்த திடீர் போராட்டம்?

அரிசி உற்பத்தியில் ஆசியாவின் அட்சயப் பாத்திரமாக விளங்கியது பர்மா. அரிசி மட்டுமா? ‘பர்மா தேக்கு’ என்றால் உலகப் புகழ் பெற்றது. வளம் பொருந்திய தேக்கு மரங்களை ஏற்றுமதி செய்யும் நாடு பர்மா. அத்தோடு இயற்கை எரிவாயுவில் உலகில் முன்னணியில் இருக்கும் நாடு. 30 டிரில்லியன் கன அடி இயற்கை எரிவாயுவையும், 3 பில்லியன் பீப்பாய் பெட்ரோலிய எண்ணை வளத்தையும் தன்மடியில் சுமந்து கொண்டிருக்கும் நாடு பர்மா! இராணுவ ஆட்சியாளர்களின் சுகபோக வாழ்க்கை மற்றும் இராணுவத்திற்கான செலவு அதிகரிப்பு, போராடுபவர்களை ஒடுக்குவதற்கான நவீன ஆயுதங்களை வாங்குவது போன்ற நாசகர - சர்வாதிகார கொள்கையின் விளைவாக ஜெனரல் தான் ஷா தலைமையிலான இராணுவ அரசு பெட்ரோலிய பொருட்களின் விலையை 500 சதம் உயர்த்தியது. இதுதான் போராட்டத்திற்கான வித்தாக மாறி ஜனநாயக எழுச்சி கண்டது.

## போராட்ட பாரம்பரியம் மிக்க பர்மிய மக்கள்

குறிப்பாக ‘88 ஜெனரேஷன்’ என்று அழைக்கக்கூடிய போராட்டப் பாரம்பரியம் மிக்கவர்கள், இராணுவ ஆட்சியாளர்களின் விலை உயர்வுக்கு எதிராக வீதியில் இறங்கி கண்டனம் முழங்கினர். சும்மா இருக்குமா அரசு? போராட்டக்காரர்கள் மீது கடுமையான அடக்குமுறைகளை ஏவியதோடு, அவர்களை கைது செய்து சிறையிலும் அடைத்தது. இதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் உள்ள உழைக்கும் மக்கள், மாணவர்கள் மற்றும் புத்த துறவிகள் என பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களது எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவித்து விலை உயர்வுக்கு எதிராகவும், ஜனநாயகத்தை வலியுறுத்தியும் பர்மா முழுவதும் போராட்டத்தில் குதித்தனர்.

அமைதியான முறையில் போராடியவர்களுக்கு எதிராக ஆங்காங்கே துப்பாக்கி சூடு நடத்தி பலரை கொன்று குவித்தது இராணுவ அரசு. பல்வேறு இடங்களில் தடியடி நடத்தி போராடியவர்களை சிறையிலும் தள்ளியது. இந்த சம்பவத்தை தொடர்ந்து பர்மா தலைநகர் ரங்கூன் மற்றும் மாண்டலேவில் லட்சக்கணக்கான புத்த துறவிகளும் - உழைக்கும் மக்களும் - மாணவர்களும் கலந்து கொண்ட பிரம்மாண்டமான கண்டன பேரணிகள் நடைபெற்றன. இது உலகின் கவனத்தை ஈர்த்தது. இந்த பேரணியில் முன்னணியில் நின்றவர்கள் லட்சக்கணக்கான புத்த துறவிகள் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு பத்திரிகைகள் இதனை ‘ஜனநாயகத்திற்கான காவி புரட்சி’ என்றே வர்ணித்தது!

ஜெனரல் தான்ஷா தலைமையிலான அடக்குமுறை இராணுவ அரசு இதுவரை 500க்கும் மேற்பட்டவர்களை கொன்று குவித்துள்ளதோடு, 1000த்துக்கும் மேற்பட்ட புத்த துறவிகளையும், 5000த்துக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்களையும் சிறையில் தள்ளியுள்ளது. பல்வேறு புத்த மடாலயங்களுக்குள் அதிரடியாக நுழைந்து அங்கே ஆயுதங்கள் பதுக்கி வைப்பட்டிருப்பதாக கூறி அமெரிக்க பாணியில் அவர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

மேலும், முக்கிய நகரங்களில் ஊரடங்கு உத்தரவை பிறப்பித்து தனது அடக்குமுறை தர்பாரை நடத்தியது. 1988 ஆம் ஆண்டு ஆங் சான் சூகி தலைமையில் நடைபெற்ற ஜனநாயகத்திற்கான போராட்டத்தின் போது 3000 பேரை கொன்று குவித்து பர்மாவை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்ததுபோல், அதே பாணியை பின்பற்றி ஒடுக்குமுறையை ஏவியது. துப்பாக்கி ஏந்திய இராணுவ ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களை சுட்டுத் தள்ளுமாறு நெஞ்சை நிமிர்த்தி போராடினர்.

## உலகின் கவனத்தை திருப்பிய இன்டர்நெட்

நவீன தகவல் தொழில்நுட்ப புரட்சியின் உயர்ந்த அம்சமான இணையதளம் - இமெயில் - வலைப்பதிவு - செல்போன், கையடக்க மொபைல் கேமிரா போன்றவற்றின் வளர்ச்சியை மிகச் சரியாக பயன்படுத்திக் கொண்டது உழைக்கும் வர்க்கம். பர்மாவில் நடைபெறுவது என்ன? என்பதை உலகம் இதன் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. இதனை உணர்ந்து கொண்ட இராணுவ அரசு, அதற்கே உரிய குணத்தோடு பர்மாவிலிருந்து இயங்கும் அனைத்து இணையதளம் மற்றும் செல்போன் சேவைகளை ரத்து செய்ததோடு, தன்னுடைய ஒடுக்குமுறைகளையும் தீவிரப்படுத்தியது. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் , ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு ஜப்பானிய பத்திரிகை நிருபர் கென்ஜி நாகாய் துப்பாக்கி சூட்டில் பலியானதும் சர்வதேச கண்டனத்திற்கு உள்ளானது. உலகம் முழுவதும் உள்ள மனித உரிமை அமைப்புகள் பர்மாவுக்கு எதிராக தங்களது கண்டனக் கணைகளை தொடுத்தன.

## அமெரிக்காவின் ஜனநாயக வேடம்

இதனை பயன்படுத்திக் கொண்டு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஏகாதிபத்தியவாதிகள் பர்மாவில் நுழைய, தங்களை ஜனநாயகத்தின் காவலர்களாக காட்டிக் கொள்கின்றனர். பனாமா, ஆப்கானிஸ்தான், ஈராக்,லிபியா,சிரியா என பல்வேறு நாடுகளில் அமெரிக்கா வழங்கி வரும் ஜனநாயக சேவை எத்தகையது என்பதை உலகம் நன்கு உணர்ந்துள்ளது.

பர்மாவின் இயற்கை வளங்கள் மீது கண் வைத்து காய்நகர்த்தும் நாடுகள் ஒரு புறமும், பர்மிய மக்களுக்கு ஜனநாயக ஒளி பிறக்க வேண்டும் என்று விரும்புகிற நாடுகள் மறுபுறமும் என இருமுனைகளில் செயலாற்றுகின்றன.

பர்மாவில் ஜனநாயகத்தை மீட்டெடுக்க ஐக்கிய நாடுகள் சபை இப்ராஹிம் கம் பாரியை தூதுவராக அனுப்பி வைத்து அங்குள்ள இராணுவ ஆட்சியாளர்களிடமும், ஜனநாயக போராளி ஆங் சான் சூ கியி-யிடமும் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. மறுபுறத்தில் அமெரிக்கா பர்மா மீது அழுத்தமான பொருளாதார தடைகளை விதிக்கப்போவதாக மிரட்டியது. அதன் அர்த்தம் என்ன தெரியுமா? பர்மிய உழைக்கும் மக்களை மேலும் பட்டினி போட்டு பணிய வைப்பது என்பதுதான். அல்லது சர்வாதிகாரி தான் ஷா இராணுவ அரசு அமெரிக்காவின் சொல்லைக் கேட்கும் கிளிப்பிள்ளையாக மாற வேண்டும் என்பதுவே அதன் உள்நோக்கம். அல்லது பர்மாவில் இராணுவ ஆட்சியாளர்களுக்கு பதிலாக தங்களது கைப் பாவையை கொண்டு வரவேண்டும் என்ற அமெரிக்கக் கொடுங்கனவு.

## எரிவாயுவிற்காக பர்மாதேவைப்படாதா?

மேலும், தென் கிழக்கு ஆசிய நாடான பர்மா புவி அரசியல் ரீதியாக மிகவும் கேந்திரமான பகுதியாக விளங்குகிறது. குறிப்பாக, சீனாவின் 2210 கிலோ மீட்டர் எல்லையை அது பகிர்ந்து கொண்டுள்ளது. மறுபுறம் இந்தியா, தாய்லாந்து உள்ளதால் அமெரிக்காவின் இராணுவப் பார்வை அங்கு விரியாமல் இருக்குமா? இந்திய - அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தை பயன்படுத்தி யுத்த தந்திர ரீதியாக சீனாவிற்கு எதிரான நிலையெடுத்து வருவதை இடதுசாரிகள் கண்டித்து வரும் நிலையில், தற்போது அது பர்மாவை பயன்படுத்தி தன்னுடைய எதிர்கால இராணுவ திட்டத்தை நிறைவேற்றத் துடிக்கிறது. மேலும் பர்மா 30 டிரில்லியன் கன அடி இயற்கை எரிவாயுவை கொண்டுள்ள ஒரு நாடு என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது! பெட்ரோலிய வளத்திற்காக ஒரு ஈராக் என்றால் இயற்கை எரிவாயுவிற்காக பர்மா தேவைப்படாதா? ஈரான் - பாகிஸ்தான் - இந்தியா குழாய் வழி இயற்கை வாயுத் திட்டத்தை புதைகுழிக்கு அனுப்பத் துடிக்கும் அமெரிக்காவின் சூட்சுமம் இங்குதான் உள்ளது. மொத்தத்தில் அமெரிக்காவின் உதட்டளவிலான ஜனநாயக சேவை என்பது நிலைகுலைந்து வரும் தன்னுடைய டாலர் பொருளாதாரத்தோடு தொடர்புடையதே என்று அறுதியிட்டுக் கூறலாம்.

## விடுதலைப் போரிலிருந்து இராணுவ ஆட்சியை நோக்கி...

பர்மாவை தனது காலனியாக வைத்திருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்தும், ஜப்பானிய பாசிஸ்ட்டுகளிடமிருந்தும் அந்நாட்டு கம்யூனிஸ்ட்டுகளும், தேசபக்தர்களும் இணைந்து நின்று வீரஞ்செறிந்த போராட்டம் நடத்தியதன் விளைவாக 1948 இல் பர்மா சுதந்திர நாடாக மாறியது.

அந்நாட்டின் விடுதலைக்காக பாசிஸ்ட்டு எதிர்ப்பு முன்னணி என்ற பெயரில் பல்வேறு தேச பக்த சக்திகளை ஒன்றிணைத்து களம் கண்டு போரிட்ட பர்மா கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளர் ஆங் சான் மற்றும் அவரது சகாக்கள் 1947 இல் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். ஜெனரல் ஆங் சான் 1947 ஜூலை 19 காலை 10.37 மணிக்கு ஒரு கொலையாளியின் தோட்டாவுக்கு இரையானார். ரங்கூனில் தலைமைச் செயலகம் இருந்த செங்கல் கட்டடத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் அவர் கலந்துகொண்டிருந்தபோது இது நடந்தது. அப்போது அவருக்கு வயது 32 மட்டுமே. அவருக்கு மனைவி கின் கி, இரண்டு மகன்கள், ஒரு மகள் என மூன்று சிறு குழந்தைகள் இருந்தார்கள். அந்த ஒரே மகள்தான் ஆங் சான் சூகி. அந்த தினத்தன்று, முஸ்லிம் அரசியல் தலைவரான யு ரஜாக், ஜெனரலை ஆதரித்த கரேனியத் தலைவர்களில் ஒருவரான மான் பா கய்ங், ஷான் இளவரசர் சாவோ சாம் ஹ்துன் ஆகியோர் உள்ளிட்ட 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

அப்போது நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி பொறுப்பை ஏற்பதற்கு முன் இந்த சம்பவம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பாசிஸ்ட் எதிர்ப்பு முன்னணியில் ஆங் சானோடு இணைந்து பணியாற்றிய யூ நூ சுதந்திர பர்மாவின் முதல் பிரதமரானார்.

விடுதலைப் பெற்ற பர்மாவின் முதல் பிரதமராக வரவேண்டிய ஆங் சானை ஒழித்துக் கட்டிய ஆளும் வர்க்கம் அந்நாட்டில் வலுவாக இருந்த கம்யூனிஸ்ட் போராளிகளையும், ஜனநாயக உரிமைகளுக்காக களம் கண்டவர்களையும் கருவறுப்பதற்கான தொடர் சதி வேலைகளில் ஈடுபட்டது. அதன் ஒரு பகுதியாக யூ நூ தலைமையிலான , கட்சியில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பமான அரசியல் நிலைமையை பயன்படுத்திக் கொண்ட பர்மா இராணுவத் தளபதி நீ வின் 1962 இல் ஆட்சியை கைப்பற்றிக் கொண்டார்.

ஜெனரல் நீ வின் தலைமையிலான இராணுவ சர்வாதிகார அரசு ‘பர்மா சோசலிஸ்ட் திட்ட கட்சி’ என்ற பெயரில் புதிய கட்சியை ஏற்படுத்தியதோடு ‘பர்மிய வழியிலான சோசலிசம்’ என அலங்காரமான பெயரில் பல கட்சி செயல்பாடுகளையும், சட்டமன்றம், நீதிமன்றம் போன்றவற்றை முடக்கியதோடு, சர்வதேச சமூகத்திடமிருந்தும் பர்மாவை துண்டித்துக் கொண்டு, அனைத்து தொழில்களையும் தேசவுடைமையாக்கிக் கொண்டு (இராணுவ உடைமையாக்கிக் கொண்டு) முன்னேறப்போவதாக கூறி, பர்மா கம்யூனிஸ்ட் கட்சியை (சி.பி.பி.) சட்ட விரோதம் என தடை செய்து, அவர்களை வேட்டையாடவும் செய்ததோடு, பல கட்சி ஜனநாயக நடைமுறையை சவப்பெட்டிக்குள் தள்ளியது. மொத்தத்தில் ஆட்சிமன்றம், நீதிமன்றம், பத்திரிகை சுதந்திரம் போன்ற ஜனநாயக உரிமைகளை காலில் போட்டு மிதித்தது.

தொடர்ந்து இராணுவ வீரர்களின் படைபலத்தை அதிகரித்ததும், அவர்களுக்கு சலுகைகள் மேல் சலுகைகளை வாரி வழங்கியும் அடக்குமுறை - சர்வாதிகாரத்தின் மூலம் ஆட்சியை தக்க வைத்து வந்தது. இதன் மூலம் அனைத்து வழியிலும் பர்மா சுதந்திர காற்றை சுவாசிப்பதிலிருந்து நிறுத்திக் கொண்டது. இதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் அம்மக்களை படுகுழியில் தள்ளியது. இராணுவ அதிகாரிகளின் கைகளில் கொண்டு வரப்பட்ட நிறுவனங்கள் முறையாகவும், திறமையாகவும் நிர்வகிக்காமல், ஊழலுக்கு இரையாகி முடங்கிப் போனது.

இந்நிலையில், மேலும் ஒரு தாக்குதலை தொடுத்தது நீ வின் அரசு. ➔

# செல்போனினால் கணினியை இயங்க வைப்பது எப்படி?




அநேகமாக இணையப் பாவனையாளர்கள் அனைவருக்கும் Team Viewer பற்றி தெரிந்து இருக்கும். பெரும்பாலனோர் கணினியில் இதை பயன்படுத்தியும் இருப்பீர்கள். இதை இலவசமாக உங்கள் Android போனுக்கும் பயன்படுத்த இயலும். இந்த Application மூலம் உங்கள் கணினியில் Team Viewer இருந்தால் அதன் மூலம் உங்கள் கணினியை உங்கள் Android அல்லது Nghid பயன்படுத்தி Control செய்யலாம். இதன் மூலம் உங்கள் கணினியில் அன்டிரோய்ட் போன் பயன்படுத்தி, உங்களுக்கு தேவையான வேலைகளை செய்துகொள்ள முடியும். கணினியில் வரும் File Transfer வசதி மட்டும் அலைபேசியில் இல்லை.

Online இல் இருக்கும் Team Viewer நண்பர்களை காண இயலும். விண்டோஸ், லினக்ஸ், மேக் என்று அனைத்து இயங்குதளங்களிலும் இயங்கமுடியும். Keyboard பயன்படுத்தும் வசதியை மிக எளிதாக வழங்கி உள்ளது. இதன்மூலம் கணினியில் உள்ள Keyboard தரும் வசதிகளை நீங்கள் இதிலேயே செய்யலாம். இதில் left click, right click, drag & drop, scroll wheel, zoom போன்ற அனைத்தும் உள்ளது. இதனால் உங்கள் வேலை மிகவும் எளிதாகிறது, அதே சமயத்தில் எந்த இடத்தில் இருந்தும் உங்கள் கணினியை இயக்கமுடிகிறது. Team Viewer பற்றி அறிந்தவர்கள் கட்டாயம் பயன்படுத்த வேண்டிய ஒன்று இது. முக்கியமாக உங்கள் கணினியில் Team Viewer இருக்கவேண்டும்.

# கோப்புக்களை துல்லியமாக Backup செய்வதற்கான மென்பொருள்



கணினிகளால் பல நன்மைகள் காணப்படுகின்ற போதிலும் சில சமயங்களில் அவையே ஆப்பாக மாறிவிடுகின்றன. இவற்றுள் கணினியில் ஏற்படும் சில கோளாறுகளினால், அதில் சேமிக்கப்பட்ட கோப்புக்கள், மென்பொருட்கள் போன்றவற்றினை தொலைக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

இதனைத் தவிர்ப்பதற்கு சீரான முறையில் கணினி வன்தட்டிலுள்ள (Hard drive) கோப்புக்களை Backup செய்வது பாதுகாப்பான முறையாக கருதப்படுகின்றது. இவ்வாறு Backup செய்யும் வசதி விண்டோஸ் இயங்குதளத்துடன் தரப்பட்ட போதிலும் அதனைவிட வினைத்திறனான முறையில் Backup செய்யும் மென்பொருட்களும் காணப்படுகின்றன.

இவ்வாறான மென்பொருட்களில் AIS Backup எனப்படும் மென்பொருளும் சிறந்ததாகக் காணப்படுகின்றது. இதன்மூலம் குறிப்பிட்ட கோப்புறைகள், கோப்புக்கள், வன்தட்டுக்கள், CD, DVD போன்ற அனைத்து வகையான சேமிப்பு சாதனங்களிலும் காணப்படும் தரவுகளை Backup செய்யமுடியும்.

இதுதவிர பேக்கப் செயன்முறையை குறித்த கால இடைவெளியில் சுயமாகவே செய்யக்கூடியதாகக் காணப்படுவதுடன் Backup செய்யப்பட்ட தரவுகளை இரகசிய குறியீட்டு சொற்களைக் கொண்டு பாதுகாக்கும் வசதியும் தரப்பட்டுள்ளது.

# தரமான வீடியோ எடிட்டிங்...




வீடியோ எடிட்டிங் செய்வதற்காக பல மென்பொருட்கள் காணப்படுகின்ற போதிலும் அவற்றுள் சொற்பமானவையே இலவசமாகக் கிடைக்கின்றன. அவ்வாறு இல்லாது இலவசமாகவும், மிக இலகுவாக அனைவராலும் கையாளக்கூடிய வீடியோ எடிட்டிங் மென்பொருளாக மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் Windows Movie Maker மென்பொருள் காணப்படுகின்றது. தற்போது இதன் புதிய பதிப்பான Windows Movie Maker 2012 மென்பொருள் இலவசமாகக் கிடைக்கின்றதுடன் இது விண்டோஸ் 7, விண்டோஸ் 8 இய்ங்குதளங்களிலும் செயற்படக்கூடியதாகக் காணப்படுகின்றது.

தொழில்நுட்பம்

# கட்டணம் இல்லாத இணையத்தளம் வேண்டுமா?

தங்களுக்கென்று தனி இணையத்தளத்தை உருவாக்க விரும்பும் நபர்கள், கட்டணத்தை செலுத்தி இணைய முகவரியை பெற்றுக் கொள்ளவேண்டும்.
அவ்வாறு இல்லாமல் இலவசமாக இணையத்தளங்களை உருவாக்கி கொள்ளலாம். இதற்கென சில விதிமுறைகளையும் அந்நிறுவனங்கள் விதித்துள்ளன.
http://www.webs.com, http://www.webnode.com.





தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு

நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "ப்திவிறக்கப் பெட்டகம்"




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# நம்பிக்கையுடன் செயற்படு!



ஒரு முறை ஜப்பானிய ராஜா எதிரிகளை தாக்க ஓர் இராணுவப் படை ஒன்றை தயார்செய்து, போருக்கு தயாரானார். அவர் "எப்படியும் இந்த போரில் வெற்றிபெறுவோம்" என்று நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால் அந்த படையினரோ பெரும் சந்தேகத்துடனேயே இருந்தனர்.

இதனால் அந்த ராஜா தன் படை வீரர்களுக்கு தைரியத்தை வரவழைக்க என்ன செய்யலாம் என்று ஒரு ஜென் துறவியைப் பார்த்து, கேட்கச் சென்றார். அப்போது அந்த துறவி ராஜாவிடம், ஒரு யோசனையை சொன்னார். அதேபோல் ராஜாவும் செய்தார்.

அது என்னவென்றால், அந்த ராஜா போர் செல்லும்வழியில், அவர்கள் குலதெய்வ கோவிலில் நிறுத்தி பிரார்த்தனை செய்து, ஒரு நாணயத்தை எடுத்து வீரர்களின்முன் "நான் இப்போது இந்த நாணயத்தை சுழற்றிவிடுவேன், தலைவிழுந்தால் நாம் வெற்றிபெறுவோம்.

இல்லையேல் போரில் தோற்போம்" என்று துறவி சொன்னதைச் சொல்லி, பின் அவர்களிடம் "நம் தலைவிதியை இந்த நாணயம் சொல்லும்" என்று கூறி நாணயத்தைச் சுழற்றினார்.

அனைவரும் அதை கூர்ந்து கவனித்தனர். அப்போது தலைவிழுந்தது. அதனால் அந்த வீரர்கள் நாம் நிச்சயம் வெற்றிபெறுவோம் என்று நம்பிக்கையுடனும் சந்தோசத்துடனும் எதிரிகளை தாக்கி வெற்றிபெற்றனர்.

யுத்தத்திற்குப் பின்னர், துணை மந்திரி "விதியை யாராலும் மாற்ற முடியாது." என்று ராஜாவிடம் சொல்ல "ஆம், என்று ராஜா சொல்லி அந்த நாணயத்தின் இரு பக்கத்திலும் தலை இருப்பதை" காண்பித்தார்.

நம்பிக்கையுடன் செயற்பட்டால் எத்தகைய காரியத்தையும் எளிதில் வெல்லலாம், விதியையும் மாற்றி அமைக்கலாம்.

## வாரம் ஒரு திருக்குறள்



**குறிப்பறிதல்**

**குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை**
**யாது கொடுத்தும் கொளல்.**

ஒருவன் மனத்தில் கருதியதை அவன் கூறாமலே அறிந்துகொள்ள வல்லவரோடு மற்றவர் உறுப்பால் ஒத்தவராக இருந்தாலும் அறிவால் வேறுபட்டவர் ஆவர்.

குறள்:704

## தெரியுமா?

1. மூளையை விடப் பெரிதான கண்களைக் கொண்ட பறவை - நெருப்புக் கோழி
2. நாக்கால் காதை சுத்தம் செய்யும் விலங்கு - ஒட்டகச்சிவிங்கி
3. நான்கு மூக்குகளை உடைய உயிரினம் - நத்தை
4. நீல நிறத்தை பார்க்கும் சக்தியுடைய ஒரே பறவை - ஆந்தை
5. வயிற்றில் நான்கு பகுதிகளைக் கொண்ட விலங்கு - மாடு
6. நீரை அருந்தாத நீர்வாழ் உயிரினம் - டொல்பின்
7. நுரையீரல் இல்லாத உயிரினம் - எறும்பு
8. பின்பக்கமாகவும் பறக்கக்கூடிய பறவை - ஹம்மிங் பறவை
9. துருவக் கரடிகள் எந்தக் கையை அதிகம் பயன்படுத்தும்? - இடது கை.
10. பற்கள் இல்லாத பாலூட்டி இனம் - எறும்புதின்னி
11. நட்சத்திர மீன்களுக்கு எத்தனை கண்கள்? - எட்டு
12. மூன்று இதயங்களைக் கொண்ட கடல்வாழ் உயிரினம் - ஒக்டோபஸ்
13. உலகில் மிகவும் விஷத்தன்மையுடைய மீன் - ஸ்டோன் பிஷ் (ஆஸ்திரேலியா)
14. தலையில் இதயத்தைக் கொண்டுள்ள கடல்வாழ் உயிரினம் - இறால் மீன்

## நாடுகளும் பாராளுமன்றங்களும்

1. பூட்டான் - தேசிய அசெம்பிளி
2. சீனா - தேசிய மக்கள் காங்கிரஸ்
3. இங்கிலாந்து - பாராளுமன்றம்
4. இந்தியா - பாராளுமன்றம்
5. ஈராக் - தேசிய அசெம்பிளி
6. நேபாளம் - தேசிய பஞ்சாயத்து
7. போர்ச்சுக்கல் - கோர்ட்டஸ்
8. லிபியா - பொதுமக்கள் காங்கிரஸ்
9. கொலம்பியா - காங்கிரஸ்
10 தென் ஆபிரிக்கா - அசெம்பிளி சபை

## அஞ்சல்காரர் வருகிறார்...



அஞ்சல் காரர் வருகிறார் - நமக்கு
அஞ்சல் கொண்டு வருகிறார்!
விவரமான தகவலை - என்றும்
விரைந்து வந்து தருகிறார்!

வீடு தோட்டம் தேடியே - ஊரில்
வீதி தோறும் வருகிறார்!
ஊர் தேசம் எங்கிலும் - மக்கள்
தொடர்பு கொள்ளச் செய்கிறார்!

வெயில் மழையைப் பார்த்திடார் - சைக்கிளில்
வேகமாக வருகிறார்!
பையின் உள்ளே அஞ்சல்கள் - பணிவிடை
பணமும் சேர்த்துத் தருகிறார்!

கடமை செய்தால் உயரலாம் - என்ற
கருத்தைச் சுமந்து வருகிறார்!
கடமை யாற்றி வருகிறார் - நாளும்
கடிதம் சுமந்து வருகிறார்!

## எறும்புப் புதிர்

ஒரு சதுரத்தின் நான்கு முனைகளில் நான்கு எறும்புகள் உள்ளன. மேல்-வலது மூலையிலிருந்து எறும்பு 'A' கீழ்-வலது மூலையில் இருந்த எறும்புமான 'B'யை நோக்கி நகர்ந்தது. ஆனால், 'B', அதனது இடது பக்கமிருந்த 'C' எறும்பை நோக்கி நகர ஆரம்பித்தது. 'C' எறும்போ, அதற்கு மேலே இருந்த 'D' எறும்பை நோக்கி நகர ஆரம்பித்தது. அதேபோல 'D' எறும்பு 'A' வை நோக்கி நகர ஆரம்பித்தது.


ஒவ்வொரு எறும்பும் போன பாதையானது, எந்த ஒரு நேரத்திலும், மேலே கூறியுள்ளபடி தத்தமது எறும்பை 'குறைவான' தூரத்தில் அடைய முனைந்ததாகும். **மேலும்,**

1) ஆரம்பத்தில் தூரம் AB = BC = CD = DA = 15 செ.மீ (15 செ.மீ பக்கம் கொண்ட சதுரம்)

2) ஒவ்வொரு எறும்பும் ஒரே வேகத்தில் சென்றன.

3) எறும்புகள் களைப்படையாவண்ணம் சக்தி பெற்றிருந்தன.

4) புதிருக்காக, எறும்புகளின் அளவு மிக மிகச் சிறியதாகக் கொள்ளவும்.





**கேள்வி:**

1) இவர்களின் பயணப் பாதை எப்படி இருந்திருக்கும்?

2) ஒவ்வொரு எறும்பும் அவற்றினுடைய வெற்றி இலக்கான அடுத்த எறும்பை அடைய முடிந்ததா?

3) ஒவ்வொரு எறும்பும் கடந்த தூரம் என்ன ? (சதுரத்தின் பக்க அளவில் எவ்வளவு பங்கு எனச் சொல்லலாம்?

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 20.06.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல. ௯௯௬**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 994**

**க.கேசவர்த்தனி, உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய்**

பரிசுக்குரியவர்: 994




01. யோ.சுதர்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. ம.பிரமிகா, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.
03. கே. சைந்தவி, கொழும்பு-06.
04. எஸ்.பிறேமிகா, நீர்கொழும்பு.
05. எம்.எச். மஸ்னவி, மன்னார்.
07. எம்.சுதர்சன், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
08. ஆர்.நியூட்டன், கல்விப்பாடு, முல்லைத்தீவு.

## கடவுளும் கிரேக்கரும்

**கிரேக்கர்கள் ஒவ்வொரு கிரகத்தையும் கடவுளாகக் கருதி வழிபட்டனர்.**

புதன் - தொழிலின் கடவுள்
வெள்ளி - காதல் மற்றும் அழகின் கடவுள்
செவ்வாய் - போரின் கடவுள்
வியாழன் - உயிர்கள் எல்லாவற்றுக்கும் கடவுள்
சனி - உழவின் கடவுள்
யுரேனஸ் - சொர்க்கத்தின் கடவுள்
நெப்ரியூன் - கடலின் கடவுள்
புளூட்டோ - பாதாளத்தின் கடவுள்

## ஆராய்ச்சி பிறந்தது!

**மொகஞ்சதாரோ, ஹரப்பா புதைபொருள் ஆராய்ச்சி பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தப் புதைபொருள் ஆராய்ச்சி முதன் முதலில் எப்படி நிகழ்ந்தது?**

**சில நூற்றாண்டுகளுக்கு முன்னர், ஓர் இத்தாலி இளவரசன் அரண்மனைத் தோட்டத்தில் நீருக்காக கிணறு ஒன்றைத் தோண்டினான். அப்போது தற்செயலாக அந்த நிலத்தினடியில் புதைந்து போயிருந்த ஒரு நகரம் வெளிப்பட்டது. உலகத்தில் புதை பொருள் ஆராய்ச்சியைத் தூண்டிய முதல் நிகழ்வு இதுதான்.**

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

161

**வந்தவனுக்கு** கிலி பிடித்துவிட்டது. மல்கான் சிங் கூறிய தகவலைப் பூலானிடம் தெரிவித்துவிட்டு, பூலானிடம் பணம் ஏதாவது பெற்றுக்கொள்ளும் திட்டத்தோடுதான் அவன் விரைந்து வந்திருந்தான்.

அதனால்தான் மான்சிங்கிடம் துப்பாக்கியையும் ஒப்படைத்தான். தன்னை சோதனையிட்டு துப்பாக்கியை எடுத்தால் சந்தேகம் வந்துவிடும். அதனால் தானாகவே

கோலாக இருந்த இராஜேந்திர சதுர்வேதி என்ற பொலிஸ் அதிகாரியையும் பாராட்டினர்.

ஆளும் கட்சி மார்தட்டிக் கொள்வதும், மக்களிடம் நல்ல பெயர் எடுப்பதும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பொறுக்கவில்லை.

"கொள்ளையர்களைப் பிடிக்க முடியாமல் கும்பிடு போடுகிறது உங்கள் அரசாங்கம். சரணடைந்தது இந்த அரசாங்கமா? அல்லது மல்கான் சிங் போன்ற கொள்ளை ராஜாக்களா? இந்த நாட்டை ஆள்வது யார் என்றே சந்தேகமாக இருக்கிறது!"

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் சாடல்களைப் பத்திரிகைகள் முதன்மைப்படுத்தின.

பூலானுக்கு ஒன்றுமே புரியவில்லை. "முதலில் இந்த அரசியல்வாதிகளைச் சுட்டுத்தள்ள வேண்டும். அப்போதுதான் நாடு உருப்படும்!" என்றாள்.

பூலான் குழுவில் மான்சிங் தவிர நான்கு பேர்தான் இருந்தனர். ஏனையோர் விடைபெற்றுச் சென்றுவிட்டனர்.

தனது கிராமத்துக்குச் சென்று மையாதீனையும் அவன் ஆட்களையும் பழிவாங்கும் எண்ணத்தை மான்சிங்கிடம் கூறினாள் பூலான்.

கிராமத்துக்குள் புகுந்து தாக்குவதற்கு ஆட்கள் போதாதே என்ற தயங்கினான் மான்சிங்.

"நாங்கள் ஐந்து பேரும் ஐம்பது பேருக்கு சமம். துணிந்தால்

வாய் பிளந்தபடி சுருண்டனர்.

"துப்பாக்கியால் சுட்டால் சத்தம் கேட்கும். நம்மில் ஆட்கள் அதிகமில்லை. முடியுமானவரை அமைதியான வேட்டைதான்." என்று முன்கூட்டியே கூறி வைத்திருந்தான் மான்சிங்.

பூலான் கோபத்தில் உணர்ச்சி வசப்பட்டதால்தான் இருவரையும் சுட்டுக்கொல்ல எத்தனித்தாள். நல்ல வேளையாக மான்சிங் தடுத்துவிட்டான்.

மையாதீன் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். நீண்ட தட்டலின் பின்னர் கதவைத் திறந்து வந்தது மையாதீனின் மனைவி.

"மையாதீன் எங்கே?" மான் சிங்தான் கேட்டான். அவளது கண்களில் பயம் குடிகொண்டது. வீட்டுக் காவலாக இருந்தவர்கள் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை அவள் கண்டுவிட்டாள்.

"ஐயோ.." பயத்தில் கத்தியபடி கதவை மூடமுயன்றாள். அதற்குள் உஷாராகிவிட்ட மான்சிங் கதவில் மோத மையாதீனின் மனைவி கதவால் அறைபட்டு பின்னே தள்ளப்பட்டாள்.

உள்ளே புகுந்து மையாதீனைத் தேடினார்கள். ஆள் எவருமே வீட்டில் இல்லை. இன்னொரு இளம் பெண்தான் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். மையாதீனின் மனைவியின் சகோதரி யாக இருக்கவேண்டும் என்பது முகத்தில் தெரிந்தது.

கொள்ளை ராணி

# பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு



துக்கமில்லை மான்சிங். புறப்பட ஆயத்தம் செய்!" என்று கட்டளை மாதிரியே கூறினாள்.

அன்றிரவே கிராமத்துக்குள் புகுந்தனர். நீண்ட நாட்களின் பின்னர் தன் கிராமத்துக்குள் காலடி எடுத்து வைக்கும்போது பூலானுக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது.

விக்ரம் மல்லாவுடன் வந்து சென்றபின்னர் இப்போதுதான் வருகிறாள். குனிந்து மண்ணைத் தொட்டுக் கும்பிட்டாள். அவள் கண்கள் கலங்கிவிட்டன.

வீட்டுக்குச் செல்ல வேண்டும் போல இருந்தது. ஆனால் பொலிசாருக்குத் தகவல் போனால் அவர்களுக்கு தொல்லை கொடுப்பார்கள் என்று நினைத்துத் தன் ஆசையை மனதுக்குள் புதைத்துவிட்டாள்.

மையாதீனின் வீட்டுக்குச்செல்லும் போது பூலான் தன் முகத்தை மறைத்து கறுப்புத் துணி கட்டியிருந்தாள்.

மையாதீன் வீட்டுக்கு காவலாக இரண்டு தடியர்கள் படுத்திருந்தனர். குறட்டைவிட்டு ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தனர்.

இரண்டு பேரையும் தட்டி எழுப்பினார்கள். தூக்கக் கலக்கத்துடன் மிரள விழித்தனர்.

இரண்டு பேரையும் பூலானுக்கு நன்றாகவே அடையாளம் தெரிந்தது. மையாதீன் கூறியபடி அவளை மரத்தில் கட்டிவைத்து அடித்தவர்களில் அந்த இரண்டு பேரும் இருந்தனர்.

பூலானின் துப்பாக்கி உயர்ந்தது. மான்சிங் தடுத்துவிட்டான்.

மான்சிங்கின் துப்பாக்கி முனையில் கத்தி செருகப்பட்டிருந்தது. கண் இமைக்கும் நேரத்துக்குள் அந்தக் கத்தியை இருவரது நெஞ்சிலும் செருகி எடுத்தான் மான்சிங்.

பூலானால்கூட அந்தக் காட்சியை சகிக்க முடியவில்லை. அத்தனை கோரமாக இருந்தது.

நிச்சயமான குத்து. கத்தக் கூட சந்தர்ப்பம் இல்லாமல் இரண்டு பேரும்

கொடுத்துவிடுவது நல்லது என்று நினைத்தே துப்பாக்கியை ஒப்படைத்தான்.

இப்போது மான்சிங் கூறியதைக் கேட்டதும் அவனுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. அவனைப் பார்க்க மான்சிங்குக்கு சிரிப்பாக இருந்தது.

"சரி சரி நீ போ, நான் சொல்லிக் கொள்கின்றேன். இந்தா உன் துப்பாக்கி. பணம் இருக்கிறதா?" என்று கேட்க தலையைச் சொறிந்தான்.

தன்னிடம்இருந்த பணத்தைக் கொடுத்து அவனை அனுப்பி வைத்தான் மான்சிங்.

மல்கான் சிங் சரணடைந்தது பற்றி பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியை பூலானுக்குக் கிராமத்துப் பெண் ஒருத்தி படித்துக் காண்பித்தாள். அந்தப் பெண்ணுக்கும் சரளமாக வாசிக்கத் தெரியாது. எழுத்துக் கூட்டிக்கூட்டி வாசித்துக் காண்பித்தாள்.

"கொள்ளைராஜா மல்கான் சிங் சரணடைந்தான். ஆனால் கொள்ளை ராணி பூலான்தேவி மட்டும் சுதந்திரமாக் நடமாட அனுமதிக்கப்பட்டிருக்கிறாள்!" என்று ஒரு பத்திரிகை பொலிசாரைச் சாடியிருந்தது.

"கொள்ளைக்காரனுக்கு பொலிசார் கொடுத்த மரியாதையும், இராஜ உபசாரமும் அதிகம்!" என்றது இன்னொரு பத்திரிகை.

"இந்தியப் பாராளு மன்றத்திலும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. மல்கான் சிங் சரணடைய தூண்டு

மையாதீனின் அதிர்ஷ்டம், அவன் அன்று தான் வியாபார விடயமாக வெளியூர் போயிருந்தான்.

மையாதீன் அங்கு இல்லை என்றதும் பூலானுக்கு ஏமாற்றமாகிப் போய்விட்டது... ஆனாலும் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறிவிட விரும்பவில்லை.

மையாதீனின் மனைவியின் இடுப்பில் இரும்புப் பெட்டி சாவி பத்திரமாக இருந்தது. பணக்கொழுப்பால்தானே இத்தனை ஆட்டம் போட்டார்கள். எங்கள் குடும்பத்தை படாத பாடுபடுத்தினார்கள். 'பூலான் மான்சிங்கின் காதோடு கட்டளையிட்டாள். "கிடைப்பதை எல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள். சாவி அவளது இடுப்பில் இருக்கிறது."

சாவிக்கொத்தைக் கொடுக்க அவள் மறுத்தபோது கன்னத்தில் அறைபட்டாள். அதனால் சாவிக்கொத்தை கொடுத்துவிட்டு கத்த முயல, அவளது சகோதரி யின் கழுத்தில் பூலானின் துப்பாக்கி உரசியது.

"இங்கே பார்! நீ சத்தம் போட்டாயானால் அவள் இனிமேல் சத்தம்போட முடியாமல் செத்துப் போவாள்!" என்றான் மான்சிங்.

அதன்பின்னர் அவள் அடங்கிப் போனாள்.

இரும்புப் பெட்டியில் பணமும், கொத்துக்கொத்தாக நகைகளும் இருந்தன. அனைத்தையும் வாரியள்ளி துணி மூட்டைபோல கட்டிக்கொண்டானர்.

மையாதீன் அணிந்திருந்த நகைகளும், அவள் சகோதரி அணிந்திருந்த நகைகளும்கூட விட்டுவைக்கப்படவில்லை.

மையாதீனின் மனைவியையும், சகோதரியையும் அறை ஒன்றுக்குள் போட்டுப் பூட்டிவிட்டு அவர்கள் சென்றனர்.

திருப்பங்கள் தொடரும்...

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 525

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | 27 | | | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **25.06.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 525
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 523- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ர [1] | வி [2] | ச [3] | ங் [4] | க [5] | ர் [6] |
| சா [7] | து [8] | | | க [11] | |
| க் [13] | | ட [15] | த [16] | க் [17] | கு [18] |
| | தா [20] | ம் [21] | பூ [22] | ல [23] | ம் [24] |
| பூ [25] | வீ [26] | க [27] | ர் [28] | ம் [29] | |
| டு [31] | து [32] | ண் [33] | | | நோ [36] |

**இடமிருந்து வலம்**

01.பிரார்த்தனை.

04.முதலாளித்துவ கொள்கைகளுக்கு இந்த நாடு ஒரு சவாலாக திகழ்கிறது. (திரும்பியுள்ளது)

07.உரம் அல்லது பெலன்

13.அன்புக்காக மீட்டப்படும் பண். (திரும்பியுள்ளது)

19.சுருங்கு (திரும்பியுள்ளது)

22.நால்வகைப் பெண்களில் ஒருத்தி. (குழம்பியுள்ளது)

31.தித்திப்பு (திரும்பியுள்ளது)

34. ஐ.நா. அமைப்பின் ஜெனிவாவிற்கான இலங்கை புதிய வதிவிடப் பிரதிநிதி.

**மேலிருந்து கீழ்**

01. வால்மீகி இராமாயணத்தை இப்படியும் அழைப்பர்.

02.ஒரு குரு நோய்.

06.கிரேக்க, உரோம, எகிப்திய வரலாறுகளின் மாற்றத்திற்கு காரணமான அழகுராணி.

09.ஒரு குடிவகை (திரும்பியுள்ளது)

16.பக்தி குறிக்தழைக்கும் சொல்.

27.அஞ்சனம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 523 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எம்.எஸ்.பிரணவன், 116, சிங்கபுர, சிலாபம்.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.சிவாஜினி, றெட்பானா, விசுவமடு.
02. எம்.லவன், வட்டுக்கோட்டை மத்தி, வட்டுக்கோட்டை.
03. ப.பிரணகவி, 01ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.
04. எஸ்.தனோஜிகா, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
05. கே.சைந்தவி, கடற்கரை வீதி, திருகோணமலை.
06. ப.றெஸ்மினி, பிரதான வீதி, கண்டி.
07. கே.வருணோதயன், தென்னமரவடி, மட்டக்களப்பு.
08. க.குந்தவை, துன்னாலை மேற்கு, துன்னாலை.
09. சி.சிவரஞ்சன், சின்னபண்டிவிரிச்சான், மன்னார்.
10. ம.அச்சுதன், செட்டிகுளம், வவுனியா.



ஒரு வானவில் போல



பிறவி



## சிவகார்த்திகேயனுக்கு அடித்தது அதிர்ஷ்டம்

தமிழில் மிக குறைந்த காலத்திலேயே முன்னணிக்கு வந்தவர் ஹன்சிகா மோத்வானி. இவரது நடிப்பில் வெளிவந்த சேட்டை படம் தோல்வி அடைந்ததால், சிங்கம்-2 படத்தை எதிர்பார்த்து காத்துள்ளார். மேலும் சித்தார்த்துடன் 'தீயா வேலை செய்யணும் குமாரு' படத்தில் இணைந்து நடித்துள்ளார். இந்த படங்களை தொடர்ந்து ஒரு சில கதைகளை கேட்டுவந்த ஹன்சிகா, அடுத்து திருக்குமரன் இயக்கும் படத்தில் நடிக்கிறார். இதில் விஜய் டி.வி புகழ் சிவகார்த்திகேயன் நடிக்கிறார். இப்படத்தை இயக்கும் திருக்குமரன், இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸுடன் பல ஆண்டு காலம் அசோஸியேட் இயக்குனராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முழுசா நனைந்த பின்னர் முக்காடு எதற்கு?


### தமன்னா

அஜித் படத்தில் படுகவர்ச்சியாக நடிக்க மறுத்தேன் என்றுவந்த செய்தியை மறுத்திருக்கிறார் நடிகை தமன்னா. கேடி படத்தின் மூலம் தமிழுக்கு வந்த தமன்னா. அதன்பின்னர் கல்லூரி, வியாபாரி போன்ற படங்களில் நடித்தார். ஆனால் சூர்யாவுடன் அயன், கார்த்தியுடன் பையா, ஆகிய படங்கள் தான் அவருக்கு ஹிட் ஹீரோயினாக மாற பாதை அமைத்துக் கொடுத்தது.

அதன்பின்னர் விஜய்யுடன் நடித்த சுறா, தனுஷுடன் நடித்த வேங்கையும் வெற்றிபெறாததால் தெலுங்கு பக்கம் போனார். அதனால் தமிழ் சினிமாவை விட்டுவிட்டு முழுக்கமுழுக்க தெலுங்கு படங்களில் மட்டும் நடித்த தமன்னா நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அஜித் படத்தில் நடித்து வருகிறார்.

சிறுத்தை சிவா இயக்கிவரும் இப்படத்தில் நடிகை தமன்னா படுகவர்ச்சியாக நடிக்க மறுத்தார் என்று சொல்லப்பட்டது. ஆனால் இது குறித்து தமன்னாவிடம் கேட்டால் உடனே மறுக்கிறார்.

என்னைப் பொறுத்தவரை கிளாமருக்கு ஒருபோதும் நான் தடை சொன்னதில்லை. காரணம் என் உடல்கட்டுக்கு கிளாமர் உடைகள்தான் மேட்சாக இருக்கும். பையா படத்தில் கூட நான் மழையில் நனைந்தபடி ஆடிப்பாடிய பாடல்களைத்தான் ரசிகர்கள் அதிகமாக ரசித்தார்கள். அந்த வகையில், என்னால் முடிந்த வரை கவர்ச்சி விருந்து கொடுத்திருக்கிறேன். அப்படிப்பட்ட நான் எப்படி கவர்ச்சியாக நடிக்க மறுப்பு சொல்வேன். முழுக்க நனைந்த பின்னர் யாராவது முக்காடு போட என்னிடம் எதுவும் இல்லை என்று சொல்லும் தமன்னா, அஜித் படத்தில் எந்தளவுக்கு கிளாமராக நடிக்க சொன்னாலும் ரெடியாக இருக்கிறேன் என்கிறார்.



சிங்கம் – 2

## தமிழை வெறுக்கிறார் அஞ்சலி!

தமிழ் சினிமா வளர்த்துவிட்டிருந்தாலும், இனிமேல் தாய்மொழியான தெலுங்குத்தான் தனக்கு முழுநேர சினிமா என்ற முடிவுக்கு வந்துவிட்டார் அஞ்சலி. இதற்கு முக்கிய காரணம் கொலிவூட்டில் தனக்கு ஏற்ற வருமானம் இல்லாததே என்று கூறுகிறாராம். அதனால் தனக்கு மரியாதை இல்லாத கொலிவூட்டை சீக்கிரம் காலி பண்ணிவிட வேண்டும் என யோசித்துவந்த அஞ்சலி, சமீபத்தில் சித்தியுடன ஏற்பட்ட மோதலை அதற்கு சரியான சந்தர்ப்பமாக பயன்படுத்தி கொண்டதாக கூறியுள்ளார். மேலும் தற்போது முழுநேர ஆந்திர நடிகையாகியிருக்கும் அவர், தான் நடிக்கும் ஒவ்வொரு படங்களிலும் ஒரு கிளுகிளுப்பு பாடல் மற்றும் ஒரு முத்தக்காட்சி என்பதை ஒரு பாணியாகவே கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கிறாராம். அஞ்சலியின் இந்த அணுகுமுறை அங்குள்ள இயக்குனர்களுக்கு ரொம்ப பிடித்துவிட்டதோடு, கவர்ச்சிக்கு தயங்கும் அமலா பால், சமந்தா போன்ற நடிகைகளுக்கு அஞ்சலி எவ்வளவோ பெஸ்ட் என்று அவரை போட்டி போட்டு புக் பண்ணுகிறார்களாம். இதனால் தெலுங்கில் அஞ்சலியின் மார்க்கெட் ஏறுமுகத்தில் இருக்கிறதாம்.



விண்மேகம்



தலைவா

## புதிய புதிய

மணிரத்னத்தின் கடல் படத்தின்மு
கமானவர் நவரச நாயகன் கார்த்திக்
கௌதம். அதை தொடர்ந்து தற்பே
இயக்கிய ஐஸ்வர்யா தனுஷ் இய
ராஜா வை, சிலம்பாட்டம் சரவண
சிப்பாய் ஆகிய படங்களில் நடித்
இந்த படங்களை முடித்ததும், சசி
வெளியாகியுள்ள குட்டிப்புலி படத்
முத்தையாவின் இயக்கத்தில் நடிக்
கௌதம்.

இப்படத்திற்கான கதைசொல
அனைத்துக்கட்ட பேச்சுவார்த்தை
கதாநாயகியாக யாரை நடிக்க
என்று பரிசீலித்தபோது, குட்
நடித்த லட்சுமி மேனனையே

## ஓ
## கொ


கொ
தொட
போ
கட
78



## இசை

இளையராஜ
இசையமைப்பா
பணியாற்றியுள்ள
இசை நிகழ்ச்சிக
அடிக்கும் ஸ்டை
ஆடாதவர்க
டிரம்ஸ் இசை.
ஞராக இருந்
களம் இறங்
கு
விக்




## ...ய நடிகைகளை விரும்புகிறாராம் கௌதம்!

...லம் அறிமு-
...கின் மகன்
...ாது 3 படத்தை
...க்கத்தில் வை
...ன் இயக்கத்தில்
...துவருகிறார்.
...தமார் நடிப்பில்
...தை இயக்கிய
...கிறாராம்
...வி
...யும் முடிந்ததும்,
... வைக்கலாம்
...டிப்புலியில்
... நடிக்க

வைக்கலாம் என்றாராம் முத்தையா. ஆனால் கௌதம் இடைமறித்து, அவர் வேண்டாம், தற்போது சிப்பாய் படத்தில் என்னுடன் நடித்துவருகிறார்.

அதேபோல், வை ராஜா வை படத்தில் ப்ரியா ஆனந்த் நடிக்கிறார். அதனால் இதுவரை என்னுடன் நடித்த நடிகையாக இல்லாமல் புதிய நடிகை யாரை யாவது கமிட் பண்ணலாம் என்றாராம்.

கதை புதிதாக இருப்பது போல் கதாநாயகியும் புதிதாக இருந்தால் நடிப்பும் புதுமையாக வெளிப்படும் என்று சொன்னாராம் கௌதம்.

அதனால் தற்போது நல்ல புதுமுக நடிகையாக தேடிக்கொண்டிருக்கிறார்களாம்.

## இந்திய பொலிசை பெருமைப்படுத்தும் சிங்கம் –2

இதுவரை தமிழ் படங்களில் இந்திய அளவில் உள்ள பொலிசில் தமிழ்நாட்டு பொலிஸ் தான் பெஸ்ட் என்பதை கருதும்வகையில் கதை எடுத்துவந்தார்கள். அதேபோல் சூர்யாவைக் கொண்டு ஹரி இயக்கிய சிங்கம் படத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒரு இளவட்ட பொலிசின் வீரம், விவேகம் பற்றிய கதையாக எடுத்திருந்தார்கள். ஆனால், அதே ஹரி இப்போது சூர்யாவை நாயகனாக வைத்து இயக்கியுள்ள சிங்கம்-2 படத்தில் தமிழ்நாட்டை கடந்து இந்திய பொலிசின் பெருமையைப் பற்றி படமாக்கியிருக்கிறாராம். இப்படத்தின் கதைக்களம் அதே தூத்துக்குடியில் தொடங்கினாலும் தென்னாபிரிக்கா வரை கதை செல்கிறதாம். கடைசியில், சர்வதேச குற்றவாளிகளை கண்டுபிடித்து குற்றவாளி கூண்டில் ஏற்றுகிறாராம் சிங்கம் சூர்யா. அந்தவகையில் இந்திய பொலிஸின் நேர்மை, வீரம் ஆகியவற்றை அருமையாக கூறியிருப்பவர் இயக்குனர் ஹரி என்று சொல்லும்வகையில் இப்படத்தை இயக்கியிருக் கிறாராம்.



## ...ய்வை ஓய்வுக்கு ...ண்டுவந்தார் அசின்

...லிவூட்டில் இருந்து பொலிவூட்டுக்கு போன அசின், ...ர்ந்து அங்கேயே செட்டிலாகி அமிர்கான், சல்மான் கான் ...ன்ற நடிகர்களுடன் நடித்துவந்தார். இதனை தொடர்ந்து ...ந்த ஆண்டு அக்ஷய் குமார் ஜோடியாக கில்லாடி ...6 படத்தில் நடித்தார். அந்த படம் எதிர்பார்த்த வெற்றியைத்தராத காரணத்தால், புதிய படங்களை ஒப்புக்கொள்ளாமல் இருந்துவந்தார்.

இதற்கிடையே, அவர் அமெரிக்க மாப்பிள்ளையை மணக்கப் போவதாக தகவல் வெளியானது. பிறகு பிரபுதேவா வுடன் நெருங்கிப்பழகுவதாக பரபரப்பாக பேசப்பட்டார். இதனால் அப்செட் ஆனவர் வீட்டில் முடங்கிக் கிடந்தார். தற்போது அந்த சூழலில் இருந்து மீண்டு புதிய படத்தில் அபிஷேக் பச்சன் ஜோடியாக நடிக்க ஒப்புக் கொண்டிருக் கிறார் அசின்.

## ...சயமைப்பாளராகிறார் ... டிரம்ஸ் சிவமணி

...ா, ஏ.ஆர்.ரஹ்மான் உள்ளிட்ட பல ...ார்களிடம் டிரம்ஸ் கலைஞராக ... சிவமணி. உலகம் முழுக்க ஏராளமான ...ளையும் நடத்தியுள்ளார். இவர் டிரம்ஸ் ...லே ரொம்ப வித்தியாசமானது.

...ளையும் ஆட்டம்போட வைக்கும் இவரது ...இந்நிலையில், இதுவரை டிரம்ஸ் கலை- ...வந்த சிவமணி, இசையமைப்பாளராக ...கி இருக்கிறார்.

...கி படத்திற்குப் பின்னர், நடிகர் ...ம் பிரபு, இவன் வேற மாதிரி, சிகரம் ...தொடு படங்களில் நடித்துவருகிறார்.

இந்தபடத்திற்கு அடுத்தபடியாக 'அரிமா நம்பி' என்ற படத்தில் விக்ரம் பிரபு நடிக்கிறார். ஜோடியாக ப்ரியா ஆனந்த் நடிக்கிறார். ஆனந்த் குமார் இயக்குகிறார். கலைப்புலி எஸ். தாணு தயாரிக்கிறார். இந்த படத்தில்தான் சிவ-மணி இசையமைப்பாளராகி இருக்கிறார். இசையமைப் பாளரானது குறித்து சிவமணி கூறியுள்ளதாவது, ரொம்ப சந்தோசமாக இருக்கிறது. இப்படத்திற்கு இதுவரை நான்கு பாடல்களை கம்போஸ் பண்ணி விட்டேன். முதல் பாடலை லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வைத்து கம்போஸ் பண்ணினேன். பொதுவாக என்னுடைய படங்களின் இசையில் டிரம்ஸ் கொஞ்சம் வேகமாக இருக்கும். அதேபோல் இந்த படத்திலும் அது தொடரும். அதேசமயம் மெலோடியும் நிறைய இருக்கும். ரசிகர்களே ஆச்சரியப்படும் அளவுக்கு இந்தப் படத்தின் இசை கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும். அதற்காக, வலியப் போய் இசையை திணிக்க நான் விரும்ப வில்லை, கதைக்கு என்ன தேவையோ அந்த இசையை நான் கொடுப்பேன் என்று கூறியுள்ளார்.

## இறப்புக்குப் பின்னர் வாழுமா காதல்?

கொலிவூட்டில் 'NOD' படக் கம்பெனி தயாரிப்பில் அறிமுக இயக்குனர் சினீஷ் 'என்றென்றும்' படத்தை இயக்கியுள்ளார். இறப்புக்குப் பின்னர் காதல் வாழ்கிறதா என்பதை இப்படத்தில் அலசியிருக்கிறார்.

இது குறித்து சினீஷ் கூறுகையில், இறப்புக்கு பின்னும் காதல் ஆத்மார்த்தமாக ஜீவித்திருக்கும் என்ற கருத்தை வலியுறுத்தி யதார்த்தம் மீறாமல் திரைக்கதை அமைத்து இப்படத்தை இயக்கியுள்ளேன். காதில் ரீல் சுற்றும் காதல்களாக இல்லாமல் உண்மை காதலர்களாக 'மானாட மயிலாட' புகழ் சதீஷ், புதுமுக நாயகி பிரியங்கா ரெட்டி படத்தில் வாழ்ந்துள்ளார்கள். தரண் இசையில், பாடல் வரிகளை நிரஞ்சன் பாரதி எழுதியுள்ளார். பாடல்கள் ரசிகர்களை நிச்சயம் கவரும். ஓடியோ உரிமையை சோனி மியூசிக்ஸ் வாங்கியிருக்கிறது என்றும் இசை வெளியீட்டுக்கு பின்னர் படத்தின் ரிலீஸ் திகதி அறிவிப்போம் எனவும் கூறியுள் ளார்.

# தேன் கிண்ணம்



## இன்றைய இளைஞர்களின் பெஷன்

பெஷன் என்ற நாகரிகப்
போர்வையில் இன்றைய இளைஞர்கள்
நிலையோ கவலைக்கிடம்...!

மானம் மறைக்க டவுசர் அணிந்தா
இடுப்பில் டவுசர் நிற்குதில்லையாமே
இதற்கு பெயர்தான் பெஷனாம்...!

உடல் முழுவதும் பல உருவங்களால்
பச்சை குத்தி அலங்"கார" (கோல)மாம்
இதற்குப் பெயர்தான் விடி(மடி)வான பெஷனாம்

பெண்கள் அணியும் ஜிமிக்கி - அது
இன்றைய இளைஞர்களின்
காதிலே புதுப்புது பெஷனாம்...!

தலைமுடியிலே டேவிட் பெக்காம்
என்ற மேற்கத்தேய நாகரிகமாம்
இதுதானாம் இன்றைய உலகின்
பெஷனாம்...!

பைக்கும் செல்போனும் இல்லை
என்றால் உயிர்வாழ்வதே
கடினமாமே! - இவைதானாம்
இன்றைய இளைஞர்களின்
விடிவான நாகரிகமாம்...!
தமக்கென்ற கலாசாரம் - அது
காலாவதியாகிவிட்ட பொருளாகக்
கருதும் இளைஞர்களின்
இன்றைய நிலையோ
கவலைக்கிடத்திலும் கவலைக்கிடமே...!

எம்.யூ.அல்சாத். ஒட்டமாவடி.



## உன் வீடு தேடி...

என் உறக்கத்தை
விரட்டியடித்தது
பனித்துளிகள்
சிரித்துக்கொண்டன...

அலுத்துப் போய்
கடற்கரை மணலில்
கால் புதைந்து
நடந்தேன்
கடலலை
என்னைப் போல்
காதலுக்காக
அவஸ்தைப்பட்டு
போனது
நீ இல்லாத
தேசமும் இப்படித்தான்.

எங்கே போகிறேன்
எங்கே நடக்கிறேன்
என்று... மனசு இடிந்தது
வந்த வழியைத் திரும்பிப்
பார்த்தேன்
உன் நினைவுகளுடன்
உன் வீடு தேடி...

K.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.

## தனிமை

இதுவொன்றும் இன்று
எனக்குப் புதிதல்ல

இதுவரை நேரம்
என்னுடன் கூடவே
இருந்துவிட்டு
திடீரென
எப்படி நீ மறைந்தாய்
அதைத்தான் என்னால்
ஏற்றுக்கொள்ள
முடியவில்லை.

கரிய இரவுகளையும்
கனத்த பொழுதுகளையும்
உன்னோடு பல தடவைகள்
அனுபவித்து இருந்த
போதினிலும்
தெரிந்த சில முகங்கள்
இந்தத் தருணங்களில்
கூடவே இருக்கவும்
வலிக்கின்றது மனசு...

உன்னை விடவும்
என்னை துயரத்தில் ஆழ்த்தும்
அற்புத சக்தியை
கண்டுபிடித்ததால்தான்
தடுமாறுகின்றேன் நான்.

ஆஷா,
யாழ்ப்பாணம்.



## பிடிகள் தகர்ந்து போகும் பின்னகராப் பாதங்கள்

நாளைய தேவைகளுக்கான
தேடல்களுடே சேகரித்தவை பலவும்
தொலைத்தாயிற்று
தூரம் ஒரு வழிகளாம்...

எஞ்சியிருக்கும் நினைவுகள் சிலவும்
இன்றோ... நாளையோ...
உயிர் பிரியும் கணப்பொழுதுகள் போன்று.

காலச்சுழற்சியுள்
அவைகளும்
காணாமல் போகலாம்?!

சூரிய வெளிநோக்கி
தளர்வுறும் பயணங்களில்
தொலைந்துபோன
நினைவுகளைத் தேடியபடி...
இன்னமும் நான்
எதுவுமற்றவனாய்...

எனது
நம்பிக்கைப் பிடிகளைத் தகர்த்தவர்கள்
முகச் செழிப்போடு முன்னேறிவிட்டார்கள்.
எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி.

ஓடும் - பழமுமான உறவுகளில்
ஒட்டியிருப்பதை உதறுகிறேன்
காலம்
எனக்கான பாதைகளை
செதுக்குமென்ற நம்பிக்கையில்
என் வழி தனி வழியாகிறது.

எனக்கான நடையும்...
எனக்கான வழியும்...
எனக்கான பேச்சும்...
இன்னும்... இன்னும் பலவாறாய்
என்றும் என்னுடன் தொடர்கிறது
இறுமாப்பாக!

அலெக்ஸ் பரந்தாமன், புதுக்குடியிருப்பு.



## இறந்தும் இறவாத இசைக் குயிலன் ரி.எம்.எஸ்

சிந்தைக் கினிய
பாடல்களைத்
தந்தவனே!
இத்தரை மீதினில்
எத்தனையோ
காதலர்கள் – உன்
பாடல் வரிகளைப்
பகிர்ந்து கொண்டார்கள்!
இனியு முந்தன்...
"காதல் கீதம்
கேட்குமா?"
"அன்னையைப் போலொரு
தெய்வமில்லை – அவள்
அடி தொழ மறப்பவர்
மனிதரில்லை"
(மனிதரில்லை)
இது என்
சின்னப் பராயத்தில் நீ
சொன்ன பாடல்!
"அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்" என
தாய் தந்தையற்கும்
பெருமை சேர்த்தது – உன்
பாடல்கள்!
"அண்ண னென்னடா
தம்பி யென்னடா"
பணம் இல்லை யென்றால்
பாசமில்லை யென்று
பாடினாயே! அது
எவ்வளவோ பெரிய உண்மை!
"தங்கை உயி ரெண்ணித்
தன்னுயிரை வைத்திருந்தான்... உன்
பாசமலர் பாடல்
இன்னு மெங்கள்
இதயங்களில்
இனிமையாகவே...
"மனிதன் நினைப்பதுண்டு
வாழ்வு நிலைக்குமென்று"
அவன் செத்தும்...
"போனால் போகட்டும் போடா – இந்த
பூமியில் நிலையாய்
வாழ்ந்தவன் யாரடா?" என
தத்துவம் பாடினாய் – அவன்
ஆடிய ஆட்டமும்
முடிந்த பின்...
"வீடுவரை உறவு
வீதிவரை மனைவி
காடுவரை பிள்ளை
கடைசிவரை யாரோ?" என
எம்மையே கேட்டாய்!


திரையுலகில் பின்னணி
எல்லோருக்குந்தான் பாடினார்கள்...
ஜெமிக்கோர் – ராஜா,
நாகேசுக்கோர் – ராகவன்
தங்கவேலுக்கோர் – கிருஷ்ணன்
உன்போல், எம்.ஜி.ஆருக்கும்
சிவாஜிக்கும் ஏற்றால் போல்
எவர் பாடினார்கள்?
எம்.ஜி.ஆர் படங்களில்...
"நான் ஆணையிட்டால்..."
அது அவரின் வீரப்பாடல்
சிவாஜி படங்களில்
"உன் கண்ணில் நீர் வடிந்தால்..."
இது இவரின் உருக்கமான
நடிப்பிற் கேற்ப
சோகப்பாடல்...
இனியார் நடிப்பார்?
உன்போல் எவர்தான் படிப்பார்?

பாடிச் சென்ற இவர் ...
பட்டினத்தார், அருணகிரிநாதர்,
கல்லும் கனியாகும் என்
மூன்று படங்களிலும் – கதா
நாயகனாக நடித்தது முண்டு
இறந்தும் இறவாத இசைக்குயிலன்...
எங்கள் ரி.எம்.எஸ்.

பாண்டியூர் பொன்.நவநீதன்.



# கண்களுக்கும் தேவை உடற்பயிற்சி



**உடற்பயிற்சி** என்பது எத்தனை அவசியம் என்று நமக்கு தெரியும். யோகா, நீச்சல், ஜோக்கிங் போன்ற விஷயங்களை செய்து உடலை சரியாக வைத்துக்கொள்வது எவ்வளவு முக்கியமோ, அதேபோல் கண்களுக்கும் சரியான உடற்பயிற்சி மிகவும் முக்கியம். ஏனெனில் உடற்பயிற்சியானது கண்களை ஆரோக்கியமாக வைத்து கண்களில் ஏற்படும் களைப்புகளை குறைக்கும்.

கண்களில் எந்த பிரச்சினையும் வராமலிருக்க என்னவெல்லாம் செய்யவேண்டுமென்று தெரிந்துகொள்ளுங்கள்.

1. ஒரு நாற்காலியில் வசதியாக உட்கார்ந்து, உள்ளங்கையை தேய்த்து வெப்பம் உண்டானபின் கண்களை மூடி, உள்ளங்கையால் கண்களை மூடிகொள்ளவும். அவ்வாறு செய்யும்போது கருவிழிகளின் மேல் அதிகம் அழுத்த வேண்டாம். மூக்கையும் மூடிக்கொள்ள வேண்டும். முக்கியமாக கண்களை மூடும்போது இருட்டாக இருப்பதால், அந்த நேரம் பல மகிழ்ச்சியான சம்பவங்களை நினைத்து, மூச்சை உள்ளே இழுத்து, மெதுவாகவிட வேண்டும். இதை போல் 3 நிமிடங்களுக்கு ஒருமுறை செய்தல் வேண்டும்.

2. கண்களை 3 - 5 விநாடிகள் இறுக்கமாக மூடிகொண்டும், பின் 3-5 விநாடிகள் திறந்தும் வைத்திருத்தல் வேண்டும். இதனை 7 அல்லது 8 முறை செய்யவும்.

3. வெப்பம் மற்றும் குளிர்ந்த நீர் மசாஜ்: குளிர்ந்த மற்றும் சூடான நீரில் துண்டை நனைத்து புருவம், மூடிய இமைகள், மற்றும் கன்னங்கள்மீது அழுத்தவும். இரண்டையும் மாற்றி மாற்றி செய்யவும். ஆனால் குளிர்ந்த நீரில் அழுத்துவதை கடைசியாக அமையும்படி செய்யவும். அடுத்ததாக, கண்களை மூடி 1-2 நிமிடங்கள் விரல்களால் வட்ட இயக்கங்களில் மசாஜ் செய்யவும். பின் கைகளை கழுவி சுத்தமாகவும், அதிகமாக அழுத்தாமல் சாதாரணமாக அழுத்துவது அவசியம்.

4. மெதுவாக மூன்று விரல்களால் இரண்டு கைகள் கொண்டு மேல் கண் இமைகள் மீது அழுத்தவும். பின்னர், 1-2 விநாடிகளில் அப்படியே அழுத்தியவாறு இருந்து பின் விடுவிக்கவும். இதை தொடர்ந்து 5 முறை செய்யவும்.

5. அமைதியாக உட்கார்ந்து, பின்னர் கண்களை இடஞ்சுழியாகவும் பின் வளஞ்சுழியாகவும் சுழற்றவேண்டும். 5 முறை செய்யவும், அதன் இடையே ஒவ்வொரு முறையும் கண்களை சிமிட்டவும்.

6. 10-15 விநாடிகள் ஒரு தொலைதூர பொருளைப் (150 அடி அல்லது 50 மீற்றர் மேல்) பார்க்கவும். பின்னர், மெதுவாக கண்களை அருகில் உள்ள பொருள்மீது (30 அடி அல்லது 10 மீற்றர் தூரத்தில்) 10-15 விநாடிகள் நோக்கவும். மீண்டும் தொலை தூர பொருளைப் பார்க்கவும். இதனை 5 முறை செய்யவும்.

7. முழங்கை நீட்டி ஒரு பென்சில் வைத்து, மூக்கின் முன் மெதுவாக நகர்த்திவரவும். கண்களை அந்த பென்சிலைப் பார்த்தபடியே நகர்த்துவதை கவனம் செலுத்தவும். இதனை 10 முறை செய்யவும்.

8. எதிரில் உள்ள சுவர்மீது நோக்கியபடியே உங்கள் கண்களால் எழுத முயற்சிக்கவும் அதுவும் தலையை நகர்த்தாமல் எழுதவேண்டும். இது முதலில் கஷ்டமாக இருக்கும் மீண்டும் மீண்டும் செய்தல், பின் பழகிவிடும்.

9. கண் அசைவுகளை கீழ், மேல் எனச் செய்யவும். இதனை 8 முறை செய்தல்வேண்டும். பின்னர் இடது - வலது என அசைக்கவும். இதையும் 8 முறை செய்தல்வேண்டும். கண்களை அதன் போக்கில்போகும் போது அதனை கட்டாயப்படுத்தி, நம் திசையில் பார்ப்பது தவறு. அப்படி செய்தல் பார்வை மோசமாகிவிடும்.

10. எப்போதும் கண் உடற்பயிற்சியை முடிக்கும்போது, உள்ளங்கையால் தடவி முடிப்பது நல்லது.

நீண்ட நேரம் தொடர்ந்து பயிற்சிகள் செய்வதை விட, தினமும் சிறிதுநேரம் செய்தல் நல்லது. இந்த மாதிரியான ப்பயிற்சிகள் குறிப்பாக கம்பியூட்டர் முன் வேலைசெய்வோருக்கு சிறந்ததாக இருக்கும்.

# எலுமிச்சை தரும் ஆரோக்கியம்

**எலுமிச்சம்** பழத்தைப் பிழிந்தெடுத்து அதன் சாற்றை சமையலில் பயன்படுத்துகிறோம். சுவைக்காக சேர்த்துக் கொண்டாலும் அதில் நிறைய மருத்துவ குணங்கள் பொதிந்து கிடக்கின்றன.

நோய்கள் வராமல் தடுத்து உடல்நலத்தை காத்துக்கொள்ள என்னென்ன பொருட்கள் அவசியம் தேவையோ, அவைகள் அனைத்தும் இந்த பழத்தில் இருக்கின்றன. இரத்தக் கொதிப்பைத் தடுப்பதில் எலுமிச்சம்பழம் மிக முக்கிய பங்காற்றுகிறது. மேலும் கெட்ட இரத்தத்தை தூய்மைப்படுத்துவதற்கு எலுமிச்சம் பழத்தைவிட மேலான ஒன்று கிடையாது.

முக்கிய விற்றமின் சத்தான விற்றமின்-சி, எலுமிச்சம் பழத்தில் நிறைய இருக்கிறது. எலுமிச்சையில் இருக்கும் சிட்ரிக் அமிலம் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. அதனால் தொற்றுநோய் கிருமிகளின் தாக்குதலில் இருந்து உடலை கண்போல பாதுகாக்கிறது. எலுமிச்சம் பழரசத்தை சாப்பிட்டால் மண்ணீரல் வீக்கம் பிரச்சினையில் இருந்து விடுபடலாம்.

இத்தனை நன்மை செய்யக்கூடிய எலுமிச்சம் பழத்துக்கு மலத்தை கட்டக்கூடிய குணமும் உண்டு. ஆனாலும் தேன் சேர்த்து உண்டு வந்தால் மலக்கட்டு நீங்கிவிடும். அளவிற்கு மீறிய வயிற்றுப்போக்கானால் ஒரு எலுமிச்சை பழச்சாற்றை அரை டம்ளர் நீரில் கலந்துகொடுத்தால் உடனடியாக வயிற்றுப்போக்கு நின்றுவிடும்.

கடுமையான வேலைப்பளுவினால் ஏற்படும் களைப்பைப் போக்க எலுமிச்சை பழத்தினை கடித்து சாற்றை உறிஞ்சி குடித்தால் உடனே களைப்பை போக்கும். இருமலால் கஷ்டப்படுகிறவர்கள் ஒரு எலுமிச்சை பழச்சாறுடன் ஒரு கரண்டி தேன்கலந்து காலை, மாலையாக தொடர்ந்து 3 நாட்கள் உண்டுவந்தால் உடல் நன்குதேறும்.

பழங்களைப் போலவே காய்கறிகளும், மனிதர்களுக்கு உடல்நலக் கோளாறுகளை தணிக்கும் வகையில்தான் உள்ளது. நோய்களை முழுவதுமாக குணப்படுத்துகிறதோ, இல்லையோ ஆனால் நோய்வராமல் தடுக்கும் ஆற்றல் காய், கனிகளுக்கு உண்டு என்பதை மறுக்கமுடியாது.



# குழந்தை பெற்ற பெண்களும் நீங்காத முதுகுவலியும்...

**பெரும்பாலான** பெண்கள், குழந்தை பிறப்பிற்கு பின்னர் வரும் முதுகுவலி பிரச்சினையால் அதிகமாகவே அவஸ்தைக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக சிசேரியன் பிரசவம் நடந்தவர்களுக்கு உண்டாகும் முதுகுவலி மிகவும் கொடுமையாக இருக்கும். ஆனால் இத்தகைய முதுகுவலியைப் போக்குவதற்கு நிறைய வழிகள் உள்ளன. முதுகுவலி வருவதற்கான காரணங்கள் என்னவென்று பார்க்கலாம்.

* சிசேரியன் பிரசவம் சிலருக்கு நடப்பதால், அவர்கள் குறைந்தது 3 மாதம் படுக்கையிலேயே இருக்க நேரிடும். அப்படி இருப்பதால், அது உடலில் பல்வேறு வலிகளை உண்டாக்கும். மேலும் முதுகிற்கு இந்த மாதிரியான சூழலில் அதிக வேலை இருக்காததால், திடீரென்று வேலை செய்ய ஆரம்பிக்கும்போது முதுகுவலியை உண்டாக்கும்.

* பெரும்பாலான பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது சரியான நிலையில் உட்காரமாட்டார்கள். இதனாலேயே பிரசவத்திற்கு பின் முதுகுவலி ஏற்படுகிறது.

* கர்ப்பமாக இருக்கும்போது, குழந்தையின் முழுச்சுமையை முதுகுதான் தாங்கியுள்ளது. அதிலும் இறுதி மாதத்தில் அதிகப்படியான எடை இருப்பதால், நீண்ட நாட்கள் முகுது அந்த சுமையை சுமந்து, பிரசவத்திற்கு பின் கடுமையான முதுகு வலியை உண்டாக்குகிறது.



* கர்ப்பத்தின் போது அதிகமான உடல் எடை இருப்பதால், அதனை உடலின் கால் மற்றும் முதுகு பகுதி தான் அதிகம் சுமக்கிறது. அதிலும் கர்ப்பமாக இருக்கும்போது 10 கிலோ உடல் எடை அதிகரிக்கும். இதனை சுமப்பதாலேயே பிரசவத்திற்கு பின் கடுமையான முதுகு வலியானது ஏற்படுகிறது.

* பிரசவத்திற்கு பின் செய்யக்கூடிய உடல் மசாஜை மேற்கொண்டால், முதுகு வலியை குணமாக்கலாம். இதனை வாரத்திற்கு இருமுறை செய்துவருவது நல்லது.

* பிரசவம் முடிந்தபின்னர், பெண்கள் மீண்டும் பழைய நிலைக்கு, அதாவது சரியான எடையில் இருக்க வேண்டும். அதற்கு முறையான உணவு-முறை மற்றும் உடற்பயிற்சியை பின்பற்ற வேண்டும். இதனால் உடல் எடை குறைந்து, முதுகிற்கு அதிகப்படியான சுமையை சுமக்க வேண்டியிருக்காது.

* பிரசவத்திற்குப் பின், முதுகு மற்றும் தசைகளை வலுவாக்குவதற்கு சிறந்த வழி யோகா செய்வதுதான். எனவே யோகா வகுப்பில் சேர்ந்து, உடலை சிக்கென்றும், முதுகு வலியிலிருந்தும் விடைபெறுங்கள்.


# மெனோபஸ் சொல்லும் செய்தி



**பெண்களுக்கு** வயது முதிர்ந்த காலத்தில் மாதவிடாய் தடைப்படுவதை மெனோபஸ் என்று அழைப்பர். பொதுவாக, 45 வயதிற்குமேல் மெனோபஸ் வருவதுதான் அவர்களின் உடல்நலத்திற்கு ஏற்றது. அதற்கு முன்னதாக மெனோபஸ் வருவது இதயநோய், பக்கவாத நோய்க்கு வழிவகுக்கும் என்று எச்சரிக்கின்றனர் நிபுணர்கள்.

அமெரிக்காவில் இதுதொடர்பாக நடைபெற்ற ஆய்வு ஒன்றில் 2,509 பெண்கள் பங்கேற்றனர். இதில் 693 பேர் 46 வயதிற்கு முன்னபாகவே மெனோபஸ் காலத்தை எட்டியவர்கள். அவர்களின் உடல் எடை அதிகம் காணப்பட்டது. நீரிழிவு நோயினாலும் அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் பி.எம்.ஐ சராசரி அளவை விட அதிகம் காணப்பட்டது. சீக்கிரமே மெனோபஸ் பருவத்தை அடையும் ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆசியாவைச் சேர்ந்த பெண்களுக்கு தாமதமாக மெனோபஸ் பருவத்தை அடைபவர்களைவிட இதயநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம் என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மாரடைப்பு, இதயநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ குறிப்பேடுகளை ஆய்வு செய்ததின் மூலம் இந்த உண்மை தெரியவந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.





பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# லேடீஸ் ஸ்பெஷல்



# பெண்ணாகப் பிறந்துவிட்டால் பொன் – பொருள் அவசியமா?

**எப்போதும்** கலாசாரம் பண்பாடு என்றுவரும் போது நம் நாட்டுப் பெண்களும், அவர்களது பொட்டும், தாலியும், உடைகளும்தான் அலசப்படு கின்றன. ஏன் எமது நாட்டு ஆண்களுக்கென்று கலாசாரம் பண்பாடு எதுவுமே இல்லையா?

ஆனால் பட்டிமன்றங்களும், பெண்களின் பொட்டும், தாலியும், உடையும்தான் விவாதத் துக்கான கரு என்று சொல்லிக் கதைத்துக் கொண்டு இருக்கின்றன. அதையும் தாண்டிப் போவதானால் பெண்களின் மறுமணம் பற்றிப் பேசுகின்றன.

ஆனால் ஆண்களின் மறுமணம் பற்றிப் பேசுவதில்லை. ஆண் மறுமணம்செய்து கொள்வது அதிசயமான விடயமே இல்லையாம். மனைவி இறந்தவுடனே அவனுக்கு மறுமணம் பேசி, அவனது மனைவியின் தங்கையையோ அல்லது உறவுப் பெண்ணையோ நிச்சயித்துவிடுவார்கள். ஏனென்றால் அவன் ஒரு ஆணாம்.

அவனுக்குத் துணை தேவையாம். ஆனால் பெண்ணுக்கு மட்டும் கணவன் இறந்தவுடன் பொட்டை அழித்து, தாலியைக் கழற்றி, "இனி உனக்கு ஆசாபாசம் எதுவுமே வரக்கூடாது" என்று சொல்லி, மூலையில் தள்ளிவிடுகிறார்கள்.

ஏனென்றால் அவள் ஒரு பெண்ணாம். அவ ளுக்குத் துணையே தேவையில்லையாம். ஆசையே வரக்கூடாதாம். பெண் ஒன்று பிறந்துவிட்டாலே பொன் வேண்டும், பொருள் வேண்டும், அவளை நல்லவன் கையில் கொடுத்துவிடவேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கிவிடுவார்கள் பெற்றோர்கள். இதுவே எமது தமிழ் கலாசாரமாக மாறிவிட்டது.

தமது ஆசைகளைக் குறைத்து, தேவைகளைத் தவிர்த்து அந்தப் பெண் பிள்ளைக்காகச் சேமிக்கத் தொடங்கிவிடுவார்கள். ஒரே ஒரு பெண் குழந்தையைப் பெற்றவர்களுக்கே இந்தக் கதி என்றால், நான்கைந்து பெண்களைப் பெற்றவர்களின் நிலையைச் சொல்லவே தேவையில்லை.

முதலில் எமது கலாசாரத்தில், பண்பாட்டில் புகுத்தப்பட்ட அடாவடித்தனங்கள் களையப்பட்டு, தேவையான நல்ல புதிய விடயங்கள் புகுத்தப்பட வேண்டும்.

கொட்டும் பனியில் சேலை அணிவதுதான் எமது பண்பாடு என்று சொல்லிச் சேலையுடன் செல்ல முடியுமா? அல்லது ஆண்களால் வேட்டியுடன் செல்ல முடியுமா? சில விஷயங்கள் காலத்துக்கேற்ப, நேரத்துக்கேற்ப, இடத்துக்கேற்ப மாறத்தான் வேண்டும்.

கலாசாரம் என்ற முறையில் கட்டிக்காக்க நம்மிடம் எத்தனையோ நல்ல விஷயங்கள் உள்ளன. அவைகளைக் கட்டிக்காப்போம்.



# கர்ப்ப காலத்தில் ஏற்படும் பல் பிரச்சினை

**ஹோர்மோன்** மாற்றங்களினால் கர்ப்பிணிகளுக்கு ஏற்படக்கூடிய ஈறு அழற்சி பிரச்சினை மிகவும் சகஜம். இது 2ஆவது, 3ஆவது மாதத்தில் தொடங்கி, 8ஆவது மாதத்தில் தீவிரமாகி, 9ஆவது மாதம் குறைய ஆரம்பிக்கும். இதற்கு கர்ப்பகால ஈறு அழற்சி என்று பெயர். ஈறுகளில் வீக்கம், சிவந்து, இரத்தம் வடிதல் போன்றவை இதன் அறிகுறிகள். மற்ற ஈறு அழற்சி மாதிரித்தான் இதுவும்.

கவனிக்கப்படாவிட்டால், பற்களைச் சுற்றியுள்ள எலும்புகளை பாதித்து, திசு இழப்புக்கு வித்திடும். அரிதாக சிலநேரங்களில் வீங்கிய ஈறு திசுக்களானது, அந்த இடத்தில் கட்டிகளைப் போன்று உருவாக்கலாம். அவை புற்றுநோய் கட்டிகள் அல்ல என்பதால் பயப்படத் தேவையில்லை. அந்தக் கட்டிகள் வலியின்றி இருக்கும். சிலவேளைகளில் உணவுத்துகள்கள் அதன் அடியில் புகுந்துகொண்டு, வலியை ஏற்படுத்தலாம்.

பிரசவத்துக்குப் பிறகு இது மெல்லக் குறையத் தொடங்குமே தவிர, முற்றிலும் சரியாகாது. எனவே, பிரசவத்துக்குப் பிறகு, முழுமையான பல் பரிசோதனை அவசியம். முதல் 3 மற்றும் கடைசி 3 மாதங்களில் பல் சிகிச்சைகளைத் தவிர்க்கவேண்டும். அவசர சிகிச்சை இல்லை என்கிற பட்சத்தில், பிரசவமாகும்வரை அதைத் தள்ளிப்போடலாம்.


நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் மருந்துகள், அவற்றின் அளவுகள் பற்றி பல் மருத்துவரிடம் சொல்லவேண்டும். டெட்ராசைக்ளின் போன்ற சில மருந்துகள், கருவிலுள்ள குழந்தையின் பற்களைப் பாதிக்கும் என்பதால், அவை கர்ப்ப காலத்தில் தவிர்க்கப்படவேண்டும். எக்ஸ்ரே எடுப்பதும் தவிர்க்கப்பட வேண்டும்.

மசக்கை அதிகமுள்ள பெண்கள், அடிக்கடி வாயைக் கொப்பளிக்க வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் வாந்தி எடுப்பதால் உருவாகும் ஒருவித அமிலச்சுரப்பின் காரணமாக, பற்கள் பெரியளவில் பாதிக்கப்படலாம். பற்பசைகூட உபயோகிக்க முடியாத அளவு மசக்கை தீவிரமாக இருந்தால், மருத்துவரிடம் கேட்டு, சுவையற்ற பற்பசை வாங்கி உபயோகிக்கலாம்.



தேவையான பொருட்கள்

முந்திரிப் பருப்பு - 3/4 கப், பாதாம் பருப்பு - 3/4 கப், கடலை மா - 1 மேசைக்கரண்டி, பால் - 3/4 லீற்றர், சீனி - 1 1/2 கப், நெய் - 1கப், ஏலக்காய் - 5



## செய்முறை

பாதாம் பருப்பை வெந்நீரில் 10 நிமிடம் ஊறவைத்து தோல்நீக்கி, காயவைத்துக் கொள்ளவும்.

முந்திரி, பாதாம் பருப்பை மிக்ஸியில் மென்மையாகப் பொடித்துக்கொள்ளவும்.

பாலை அடுப்பில் வைத்து சேர்ந்தாற்போல் திரிதிரியாய் வரும் பதத்திற்குக் காய்ச்சிக்கொள்ளவும். (முற்றிலும் இறுகவேண்டாம்.)

அதேநேரத்தில் இன்னொரு அடுப்பில் வாணலியில் சீனியுடன் ஒரு கப் தண்ணீர் சேர்த்து, (தேவைப்பட்டால் சீனி கரைந்ததும் சிறிது பால்சேர்த்து அழுக்கு நீக்கி) ஒற்றைக் கம்பிப் பதத்திற்குப் பாகு காய்ச்சவும்.

பாகு வந்தவுடன் பருப்புப்பொடிகள், கடலைமாவை சிறிது சிறிதாகத் தூவிக் கிளறிக்கொண்டே இருக்கவும். எல்லாப் பொடியும் கலந்து, கலவை சேர்ந்தாற்போல் வரும்போது, பால்கோவாவையும் கலந்துகிளறவும்; ஏலப்பொடி தூவி, நெய்யைச் சிறிது சிறிதாகச் சேர்த்து, தொடர்ந்து கிளறவும். நெய்பிரிந்து, கலவை ஒட்டாமல் சேர்ந்துவரும்போது நெய்தடவிய, தட்டில் கொட்டி, லேசான சூடு இருக்கும்போதே வில்லைகள் போட்டு, ஆறியதும் எடுத்துவைக்கவும்.

## பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-372**

**கேள்வி: கர்ப்பிணிகள் எந்தெந்த மாதங்களில் பற்சிகிச்சையை தவிர்க்க வேண்டும்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-20.06.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 372
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 370 இற்கான விடை :- பப்பாளிக்கூழ், இரண்டு துளி தேன், பால் சேர்த்து முகத்திற்கு பேக் போட்டு, 20 நிமிடம் ஊறவிட்டுக் குளிர்ந்த நீரால் கழுவவேண்டும்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- இ.சிவசிறிதரன், சங்கானை.

372

பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________

தே.அ. அட்டை இல : ____________________

விடை : ____________________

கையொப்பம் : ____________________

நகங்களை சுத்தமாக வைத்துக்கொண்டால் உடல் நலத்திற்கு நல்லது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் அந்த நகத்தையும் அழகாக வளர்த்து, சுத்தப் படுத்தி, பிறரை கவரும் விதத்தில் பல்வேறு வகையான அலங் காரங்களை செய்துகொள்வது இப்போது வாடிக்கை ஆகிவிட்டது.

கடந்த சில ஆண்டுகளில் மிகவேகமாக பிரபலமான இந்த



'நெய்ல் ஆர்ட்' முறை பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

நகங்களை நீளமாக வளர்ப்பதுதான் இன்றைய நாகரிகம் என்ற கருத்து பலரிடையே நிலவுகிறது. ஆனாலும் நெய்ல் ஆர்ட்- க்கு மிக நீளமான நகங்கள் அழகாக இருக்காது. எனவே, நகங்களை சரியான அளவு வளர்த்து, அவற்றின் ஓரங்களை உங்கள் விருப்பம் போல் ஷேப் செய்துகொள்ளவும்.

ஷேப் செய்த நகங்களின் மேல் டிரான்ஸ்பரன்ட் நெய்ல் பொலிஷினை பூசி அது காயும்வரை காத்திருங்கள்.

நெய்ல் ஆர்ட் பல வகையான டிசைன்களை உடையது. உங்களது நகங்களை பிறரை கவரும் விதத்தில் அலங்கரிக்க உங்களுக்கு குறைந்தது 4 நிறங்களில் நெய்ல் பொலிஷ்கள் தேவைப்படலாம்.

உங்கள் மனதிற்குப் பிடித்த டிசைன்களை தேர்வு செய்யுங்கள். பண்டிகைகள், மலர்கள், கார்டூன் உருவங்கள் என நீங்கள் நெய்ல் ஆர்ட்-க்கு தேர்வு செய்ய வகைகள் நிறைய உள்ளன.


உதாரணத்திற்கு நகங்களில் சுழல் போன்ற டிசைனை வரைய, உங்களுக்கு 3 கலர் நெய்ல் பொலிஷ்கள் தேவைப்படும். முதலில் ஒரு நிறத்தை வைத்து நகத்தில் சுழலை வரைந்து, மீதமிருக்கும் கலரை, முதலில் வரைந்த சுழலுக்கு உட்புறமாக, அடுக்கடுக்காக வரையலாம். இந்த டிசைன்தான் இப்போதைய டிரன்ட்.

உங்களிடம் 2 கலர் நெய்ல் பொலிஷ்கள் மட்டுமிருந்தால், ஒரு கலரை நகங்கள் முழுவதும் பூசி, மற்றொரு கலரை நகங்களின் நுனியில் மட்டும் மெல்லிய இழையாக பூசுங்கள். இந்த டிசைன் சிம்பிளாக இருந்தாலும், அசத்தலாக இருக்கும்.



# நகங்களின் வர்ணப்பூச்சு!





அதாவது, பர்மா ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று அதிரடியாக அறிவித்தது. இதனால் உழைக்கும் மக்கள் சிறுகச் சிறுக சேகரித்து வைத்த சேமிப்பு தொகை அனைத்தும் மொத்தமாக பறிபோனது. குறிப்பாக 1960 இல் 670 டாலராக இருந்த தனிநபர் வருமானம் 1989 இல் 200 டாலராக குறைந்தது. அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தில் திகழ்ந்த பர்மா மோசமான ஆட்சியின் காரணமாக அந்நாட்டு மக்களை பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளியது. இதன் விளைவாக ஏற்பட்டதே 1988 எழுச்சி.

இந்த எழுச்சியை ஒடுக்குவதற்கு சக்தியற்ற நீ வின் பதவி விலகி அந்த இடத்தில் தனது கைப்பாவைகள் பலரை பதவியில் அமர்த்தினார். இருப்பினும் மக்களின் தொடர் போராட்டம் மற்றும் எழுச்சியின் விளைவாக 1989 இல் இராணுவ உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு ஆட்சியை கைப்பற்றியது. இந்தக் குழு பர்மாவில் அமைதியையும் - வளர்ச்சியையும் நிலை நாட்டப் போவதாக கூறிக் கொண்டு 'அரசு அமைதி - மற்றும் வளர்ச்சிக் கவுன்சில்' என்ற பெயரில் இராணுவ உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவின் (ஜுன்டா) ஆட்சியாக தன்னை மாற்றிக் கொண்டு புதிய வடிவம் எடுத்தது. அதன் சர்வாதிகாரிதான் ஜெனரல் தான் ஷா.

1988- 89களில் பர்மாவில் ஜனநாயகத்திற்கான போராட்டம் வீறு கொண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் ஆங் சாங் சூ குயி-இன் தாயாரின் உடல் நிலை பாதிப்படைந்ததைக் கேள்வியுற்று சூகியி தன்னுடைய கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் பர்மாவிற்கு திரும்பினார். ஆங் சான் சூ குயி-யின் தந்தை ஆங் சான் பர்மிய மக்களின் அடையாளம். அந்த பாரம்பரியத்தில் வந்த ஆங் சான் சூ கியி-யை சந்திக்க மக்கள் சாரை சாரையாக வந்தனர். அத்தோடு நாட்டில் நிலவும் அடக்குமுறை, சர்வாதிகாரம் மற்றும் தங்களது துன்ப துயரங்களை விளக்கியதோடு, அவருக்கு தங்களது ஆதரவையும் தெரிவித்தனர்.

பர்மாவின் அப்போதைய குழப்பமான அரசியல் நிலையும், போராட்ட சூழலும்தான் ஆங் சான் சூ குயி-யை களத்திற்கு இழுத்து வந்தது. உழைக்கும் மக்களோடும், போராடும் மாணவர்களோடும் கரம் கோர்த்த ஆங் சான் சூ குயி நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஜனநாயகப் பாதை யில் பர்மாவை மீட்டெடுக்க வேண்டும் என்று முழங்கினார். இதற்கு நாடு முழுவதும் பலத்த ஆதரவு கிடைத்தது. அத்தோடு தனது ஆதரவாளர்களைக் கொண்டு என்.எல்.டி. - நேஷனல் லீக் பார் டெமாக்ரசி (ஜனநாயகத்திற்கான தேசிய கட்சி) என்ற பெயரில் புதிய கட்சியை தொடக்கினார். பல்வேறு ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் இந்த அமைப்பில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

## இரத்தக் கறை படிந்த 88

இதைத் தொடர்ந்து வீறு கொண்டு எழுந்த போராட்ட பேரலையை ஒடுக்குவதற்கு திட்டமிட்ட இராணுவ அரசு ஆகஸ்ட் மாதம் 8 ஆம் தேதி 1988 அன்று (8.8.1988) 3000க்கும் மேற்பட்ட போராட்ட வீரர்களை துப்பாக்கி குண்டுக்கு இரையாக்கியது. ஜனநாயக ரீதியான அமைதி வழியிலான போராட்டத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது இராணுவ சர்வாதிகார அரசு. இதில் 500க்கும் மேற்பட்ட புத்த துறவிகள் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கான மாணவர்களும், தேச பக் தர்களும் இந்த துப்பாக்கி சூட்டிற்கு பலியாகி னர். பல்லாயிரக்கணக்கான மக்கள் சிறையில் அடைக்கப்பட்டதோடு, ஆயிரக்கணக்கானோர் நாட்டை விட்டே விரட்டியடிக்கப்பட்டனர். லட்சக்கணக்கான மக்கள் தாங்கள் குடியிருந்த இடத்திலிருந்து புலம் பெயர்ந்து சென்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆங் சான் சூகுயி வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அவரது கணவர் மற்றும் குழந்தைகள் கூட அவரோடு இருப்பதற்கு அனுமதிக்கப்பட வில்லை. இரத்த வெறி பிடித்த இராணுவ ஆட்சியாளர்கள் துப்பாக்கி முனையில் தங்களது ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டனர்.

இவ்வாறு சிறைப் பிடிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான மாணவர்கள் இன்றும் கூட சிறைக் கொட்டகையில் அடைபட்டுக் கிடக்கின்றனர். ஆங் சான் சூகுயி தொடர்ந்து 17 ஆண்டுகள் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். உலகிலேயே அதிக நாட்கள் சிறையிலிருந்த முதல் பெண் ஆங் சான் சூ குயி என்பது குறிப்பிடத்தக்கது. இவரை இன்னொரு நெல்சன் மண்டேலா என்று அழைக்கின்றனர். மாணவர் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய மின் கியோ நியாங் 1989 முதல் 2005 ஆம் ஆண்டு வரை சிறைவாசம் இருந்தார். இளைஞராக சிறைக்குச் சென்றவர் முதுமையோடு வெளியே வந்த காட்சி இராணுவ ஆட்சியின் அடையாளத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்களைத்தான் '88 ஜெனரேஷன்' என்றும் அழைக்கின்றனர். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பலரது குடும்பங்கள் சிதறி சின்னாபின்னமாய் போனது. அவர்களுக்கு உதவுவதற்காக தாய்லாந்திலிருந்து பல உதவிக்குழுக்கள் இயங்கி வருகிறது.

தற்போது நடைபெறும் ஜனநாயகத்திற்கான போராட்டத்திலும் மின் கியோ நியாங் ஈடுபட்டதால் மீண்டும் அவரை சிறைக்குள் தள்ளியது இராணுவ அரசு.

## கேலிக் கூத்தான ஜனநாயகம்!

1988ஆம் ஆண்டு நடைபெற்ற மகத்தான எழுச்சியைத் தொடர்ந்து 1990 மே மாதம் 27 ஆம் தேதி பொதுத் தேர்தலை நடத்தியது இராணுவ அரசு. இத்தேர்தலில் 93 கட்சிகள் போட்டியிட்டன. இதில் ஆங் சான் சூ குயி-இன் என்.எல்.டி. - ஜனநாயகத்திற்கான தேசிய கட்சி மகத்தான வெற்றி பெற்றது. 485 இடங்களில் 392 இடங்களை இக்கட்சி கைப்பற்றியது. மொத்த இடத்தில் இது 80 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. இராணுவ ஆட்சியாளர்கள் எதிர்பாராத அளவில் இந்த வெற்றி அமைந்ததால், ஆங் சான் சூகுயி தலைமையில் ஜனநாயக அரசை அமைப்பதற்கு அனுமதிக்காமல், மக்கள் தீர்ப்பை தூக்கி யெறிந்து ஆட்சி அதிகாரத்தை இராணுவ ஆட்சியாளர்களே தக்க வைத்துக் கொண்டனர். முதலாளித்துவ சர்வாதிகாரம் என்பது ஜனநாயகத்திற்கு எப்போதும் நேர் விரோதமானது. சகலவிதமான அடக்குமுறைகளையும் மேற்கொண்டு ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்டது.

இந்த சம்பவங்களைத் தொடர்ந்து ஜெனரல் தான் ஷா தலைமையிலான ஆட்சியாளர்கள் பர்மாவிற்குள் வெளிநாட்டு முதலீடுகளுக்கான கதவுகளை திறந்து விட்டனர். இதனால் பர்மாவின் எண்ணை வளம், அரிசி உற்பத்தி, தேக்கு மர ஏற்றுமதி, வைரச் சுரங்கங்கள் என அனைத்து துறைகளிலும் தாராளமாக அந்நியர்கள் நுழைந்து கொள்ளையடிக்க அனுமதிக்கப் பட்டது.

## கொள்ளை போகும் பர்மிய வளம்

அமெரிக்காவின் 'ச்செர்வான்' ஓயில் நிறுவனமும், பிரான்சின் 'டோட்டல்' நிறுவனமும், தாய்லாந்தின் '.:பேம்' நிறுவனமும் எண்ணை வளத்தை பங்கு போட்டு கொண்டன. மேலும் தாய்லாந்து வழியாக பல்வேறு துறைகளில் முதலீடுகள் செய்யப்பட்டு அந்நாட்டை மொத்தமாக சுரண்டி வருகின்றனர். பர்மாவிலிருந்து 25 சதவீதம் துணியை அமெரிக்கா இறக்குமதி செய்து வருகிறது. இதன் மூலம் கிடைக்கும் டாலர்களை கொண்டு இராணுவ அரசு தனது படை பலத்தை பெருக்கிக் கொள்வதையே பிரதான தொழிலாக மேற்கொண்டு வந்தது. மியான்மர் - பர்மா இராணுவத்தில் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டனர். அத்தோடு போராட்டக் காரர்களை ஒடுக்குவதற்கு நவீன ரக ஆயுதங்களையும் வாங்கிக் குவித்தனர்.

இராணுவ ஆட்சியாளர்கள் 1997 ஆம் ஆண்டு முதல் அரசின் பட்ஜெட் - வரவு செலவு கணக்கை வெளிப்படையாக அறிவிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அரசின் மொத்த வருவாயில் 40 - 60 சதம் வரை இராணுவத்திற்கே செலவழிக்கப் படுகிறது. கல்விக்கும் - சுகாதாரத்திற்கும் வெறும் ஒரு சதவீதம் மட்டுமே ஒதுக் கப்படுகிறது.

அந்நாட்டின் வேலையிண்மை தற்போது 10 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. மேலும், 10 சதவீதம் செல்வந்தர்களிடம் அந்நாட்டின் மொத்த வருவாயில் (ஜி.டி.பி.) 32.4 சதம் செல்வம் குவிந்துள்ளது. அதேசமய்ம் 10 சதவீதம் உழைக்கும் மக்களிடம் வெறும் 2.8 சதவீதமே சென்றடைகிறது. அரிசி ஏற்றுமதியில் முக்கிய இடத்தை வகித்த பர்மா இன்றைக்கு ஓபியத்தை (போதைப் பொருள்) ஏற்றுமதி செய்து வருவதில் இருந்தே இராணுவ ஆட்சியாளர்களால் சீரழிக்கப்பட்ட நிலையை உணர முடியும். ஓபியம் ஏற்றுமதியில் முதலிடத்தை வகிப்பது அமெரிக்க வழியிலான ஜனநாயகம் நடைபெறும் ஆப்கானிஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீரழிந்த பர்மா

திரு. வால்கவ்ஹெவல் மற்றும் திரு. டெஸ்மண்ட் எம். டிட்டு என்ற இரு நோபல் பரிசு பெற்ற ஆய்வாளர்கள் பர்மா குறித்து ஆய்ந்து ஐ.நா.விற்கு சமர்ப்பித்த அறிக்கையில் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக, அந்நாட்டு மக்கள் தொகையில் 75 சதம் பேர் வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பதாக தெரிவித்துள்ளனர். ஐந்து வயதிற்கு உட்பட்ட 36 சதவீத பர்மிய குழந்தைகள் குறைந்த எடையுடன் இருப்பதாகவும், மூன்றில் ஒரு பகுதி குழந்தைகள் 5 ஆம் வகுப்பு வரைகூட பள்ளி கல்வியை முடிப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளனர். மேலும் 2005 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி பர்மா அகதிகளில் 5 இலட்சம் பேர் தாய்லாந்திலும், 15,000 பேர் பங்களாதேஷிலும், 60,000 பேர் இந்தியாவிலும், 25,000 பேர் மலேசியாவிலும் மேலும் 2,50,000 பேர் இசுலாமிய நாடுகளில் தஞ்சமடைந்திருப்பதாக கூறப்படுகிறது. மேலும், 2500க்கும் மேற்பட்ட கிராமங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இராணுவ ஆட்சியாளர்களின் ஊழல் மற்றும் ஊதாரித்தனத்தாலும், அந்நிய நிறுவனங்கள் பர்மாவின் செல்வத்தை கொள்ளையடித்துச் செல்வதாலும் ஏற்பட்ட நெருக்கடியின் ஒரு பகுதியாகத்தான் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வும், அதையொட்டிய போராட்டமும் விண்ணை கீறிக் கொண்டு வந்தது.

இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளிலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான் முதன் முதலில் பர்மாவிற்கான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததோடு, பர்மாவில் ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கு இந்திய அரசும் ராஜதந்திர ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

மேலும் ஏகாதிபத்திய சக்திகள் அந்நாட்டின் மீது கொண்டு வரும் எந்தவிதமான பொருளாதார தடைகளையும் ஏற்க முடியாது என்று வலியுறுத்தி வருகிறது.

உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக சக்திகள், பர்மாவில் கைது செய்து பல வருடங்களாக சிறையில் உள்ள அரசியல் கைதிகள், புத்த துறவிகள் மற்றும் போராட்டக்காரர்களை உடனடியாக விடுதலை செய்வதோடு, அந்நாட்டில் ஜனநாயக அரசு அமையவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.அத்தோடு, பர்மாவின் ஜனநாயகத்தை புதைகுழிக்கு அனுப்பும் அந்நாட்டு இராணுவ ஆட்சியாளர்களுக்கு ஆதரவான பர்மாவின் அரசியல் சாசன சட்டத்தையும் திருத்த வேண்டும் என்று அங்குள்ள ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் வலியுறுத்தி வருகின்றன.

20ஆம் நூற்றாண்டு, காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் மகத்தான பங்கினை ஆற்றியது. 21ஆம் நூற்றாண்டு பர்மா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இந்தோனேசியா என பல்வேறு நாடுகளில் நிலவும் இராணுவ ஆட்சியாளர்களின் சர்வாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயகத்தை மீட்பதற்கான போராட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் அந்தோனியா கிராம்சி கூறியது போல், "சோசலிசத்திற்கான போராட்டத்தில் நொடிப் பொழுது கண்ணயர்ந்தால் கூட பாசிசம் எனும் கொடுந் தண்டனை நம்மை வந்து சேரும்" என்ற உன்னதமான கூற்று எவ்வளவு நிதர்சனமானது என்பதை பர்மா விஷயத்தில் உணர முடிகிறது.

## கிழக்காசியாவின் 22 ஆவது உலகப் பொருளாதார மாநாடு மியான்மாரில் தொடங்கியது

மியான்மாரில் கிழக்காசிய நாடுகளுக்கான 22 ஆவது உலகப் பொருளாதார மாநாடு 2013 யூன் 5ம் திகதி புதன் கிழமை தொடங்கியது. இதற்காக நூற்றுக் கணக்கான உலகத் தலைவர்களும் தொழிற் துறை பிரமுகர்களும் அங்கு கூடினர்.

மியான்மாரில் ஜுன்டா (Junta) ஆட்சி வீழ்ச்சியடைந்த பின் நிகழும் முதலாவது சர்வதேச மாநாடு இது என்பதுடன் இதன் மூலம் அங்கு வெளிநாட்டு உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

மூன்று நாட்களுக்கு இடம்பெற்ற இந்த மாநாட்டில் 50 நாடுகளைச் சேர்ந்த சுமார் 900 பேராளர்கள் நேய்பைடாவ் (Naypyi daw) இல் கூடினர். இம்மாநாடு குறித்து உலகப் பொருளாதார அமைப்பான றுநுகு இன் ஆசிய தலைவர் சுசாந்த் பலகுர்திராவோ கூறுகையில் இந்த மாநாடு மியான்மாரில் நடைபெற்ற மிகப்பெரிய வைபவங்களில் ஒன்று எனவும் இதன் மூலம் மியான்மாரில் முதலீடு செய்யப் பல தலைவர்கள் விருப்பம் காட்டுவதை இது உணர்த்துகின்றது என்றும் குறிப்பிட்டார். இருவருடங்களுக்கு முன் ஆட்சிக்கு வந்த மியான்மார் அதிபர் தெயின் செயினின் புதிய அரசு உலகுக்கு ஆச்சரியம் அளித்திருப்பதாகவும் உள்நாட்டில் முக்கிய அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தி மேற்குலகால் விதிக்கப் பட்டிருந்த பல பொருளாதாரத் தடைகளை நீக்கியிருப்பதாகவும் இவர் மேலும் தெரிவித்தார்.

இம்மாற்றங்களை ஏற்படுத்தியதால் வெளிநாடுகள் தமது வணிகத்தினை மேற்கொள்ள சிறந்த இடமென மியான்மார் பக்கம் தமது பார்வையைத் திருப்பியிருப்பதாகவும் பல முக்கிய நபர்கள் அதிபரைச் சந்திக்க விரும்புவதாகவும் மியான்மார் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் 60 மில்லியன் புதிய வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள மியான்மார் அரசின் திறக்கப்படாத சந்தைகள் முதலீடு செய்வதற்காகக் காத்திருக்கின்றன.

உதாரணமாக கொக்கோ கோலா நிறுவனம் தனது புதிய உற்பத்தித் தொழிற்சாலையை 60 வருடங்களுக்குப் பின்னர் மியான்மாரில் திறந்துள்ளது. மியான்மார் சிறைச்சாலைகளில் இன்னமும் 200 அரசியல் கைதிகள் அடைக்கப் பட்டுள்ள நிலையில் அதிபர் தெயின் செயின்னும் எதிர்க் கட்சித் தலைவி ஆங் சான் சூ குயி உம் இம் மாநாட்டில் உரையாற்றினர்.

## பர்மாவில் 60–ஆண்டுகளின் பின் முதன் முறையாக தனது உற்பத்தி மையத்தை நிறுவிய கொக்கா கோலா..!

பர்மாவில் பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்ட பிறகு அறுபது ஆண்டுகளில் முதல் முறையாக அங்கு கொக்க கோலா தனக்கென்று ஒரு உற்பத்தி மையத்தை தொடங்கியுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பர்மா அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுக்க ஆரம்பித்த நிலையில் அதன் மீதான தடைகள் நீக்கப்பட்டன. யங்கோன்(ரங்கூன்) நகரின் புறநகரில் இந்த புதிய தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

தனது நிறுவனம் மீண்டும் பர்மாவுக்கு வந்துள்ளது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது என்று அதன் தலைவர் முஹ்தார் கெண்ட் தெரிவித்துள்ளார்.

இதை ஒரு சரித்திரபூர்வமான தருணம் என்று வர்ணித்துள்ள அவர் பர்மா போன்ற ஒரு அழகிய நாட்டில் அறுபது ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தமது நிறுவனம் கால்பதித்துள்ளது குறித்தும் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார்.

இனி வரும் ஐந்து ஆண்டுகளில் இருநூறு மில்லியன் டாலர்களை தாங்கள் அங்கு முதலீடு செய்யவுள்ளதாக கொக்க கோலா நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் 20,000 க்கும் அதிக மானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனக் கூறும் அந்த நிறுவனம் பல உள்ளூர் வர்த்தகர்களுடன் இணைந்து பணியாற்றவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளது.

முதல் கட்டமாக புதிதாக அமைக்கப் பட்டுள்ள உற்பத்தி மையம் அமைந்துள்ள பிந்யாப் பகுதியிலிருந்து உள்ளூர் வர்த்தகர்களுடன் இணைந்து செயல்படும் நடவடிக்கை தொடங்கும் எனவும் கொக்க கோலாவின் தலைவர் கூறுகிறார்.

## ஆங் சாங் சுகி மியன்மாரின் (பர்மா) அடுத்த அதிபர்?

பர்மாவின் பிரதான எதிர்க்கட்சித் தலைவியும், நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சாங் சுகி அம்மையார் அந்த நாட்டின் அடுத்த அதிபராக பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை அவர் சி.என்.என் தொலைக்காட்சிக்கு அறிவித்துள்ளார்.

ஆனால் இவருடைய கணவன் பிரிட்டனைச் சேர்ந்தவர் ஒரு பர்மிய நாட்டவர் அல்ல இரண்டு மகன்களும் பிரிட்டன் குடியுரிமை பெற்றவர்களே.. இது சுகி அதிபராக வருவதற்கு பிரதான தடையாக இருக்கிறது.

பர்மிய சட்டப்படி பர்மிய பிரஜை ஒருவர் வெளிநாட்டில் மணமுடித்து, அங்கு அவர்களுக்கு பிள்ளைகளும் இருந்தால் பர்மாவிற்கு தலைமை தாங்க இயலாது என்று கூறுகிறது.

ஆகவேதான் இந்தச் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தினாலே நோபல் பரிசு வென்ற ஆங் சாங் சுகி அம்மையார் நாட்டின் அதிபராக முடியும் என்ற யதார்த்த நிலை இருக்கிறது.

பர்மிய ஜிந்தாக்கள் கூண்டோடு தோற்கடிக்கப்படாமல் தம்மையும் காப்பாற்றக் கொண்டு, சுகியையும் தலைவராக்கி அடுத்த கட்ட காலத்திற்குள் கச்சிதமாக நகர்ந்துள்ளார்கள்.

இவர்களைப் போன்ற புத்திசாலித்தனமான நகர்வுகளை சிரிய அதிபர் ஆஸாட் போன்றவர்கள் செய்யத் தவறியதால் பெரும் சிக்கல்களை சந்தித்துள்ளார் எனும் கருத்தை சில ஆய்வாளர்கள் கூறுவர்.

இதுவரை சுதந்திரம் மனித உரிமை என்று பேசிய ஆங் சாங் சுகி பர்மாவில் முஸ்லீம்கள் புத்த பிக்குகளால் தாக்கப் பட்டபோது பெரும்பான்மைப் பக்கமே நின்றிருக்கிறார்.

அந்த இடத்தில் அவருடைய நீதி மௌனித்துக் கிடந்ததையும் உலகம் கண்டும் காணமலிருப்பது கவனிக்கத்தக்கது.



ஜோசெப் கிருஷ்ணா

# விளையாட்டு

## நிலைக்குமா நிம்மதி



உசேன் போல்ட் ஆறுமுறை ஒலிம்பிக் தங்கம் வென்றவர். தற்போது உடல் உபாதைகளால் துன்பப்பட்டாலும் ரோம் கோல்டன் காலா தடகளப் போட்டிகளில் கலந்து கொள்வது என்று உறுதியாக இருந்தார்.

ஆனால் அவர் பாவம் அமெரிக்காவின் ஜஸ்ரின் கெட்லினிடம் தோற்றுப் போய்விட்டார். உசேன் போல்ட்டின் 100 மீற்றர் உலக சாதனை நேரம் 9.58 செக்கன்கள் இந்த நேரத்தைப் பேணுவது அல்லது எதிரளியைத் தோற்றடிப்பது என்பதில் போல்ட் சிறிது சிரமப்படுகிறார் என்றே தெரிகிறது. கோல்டன் தொடர் தடகளப் போட்டிகளில் முன்னதாக இரண்டு போட்டிகளில் கெட்லின் வெற்றி பெற்றே ரோம் வந்திருந்தார்.

ஆனால் அந்த இரண்டு போட்டிகளிலும் உபாதைகள் காரணமாக போல்ட் பங்கு கொள்ளவில்லை. எனவே இத் தொடரில் ரோம் போட்டிகளே போல்டுக்கு முதலாவது போட்டியாக அமைந்தது. இதனாலேயே எதிர்பார்ப்பும் அதிகமாக இருந்தது.

ஓட்டத்தின் போது கெட்லின் சுமாராகத்தான் ஆரம்பித்தார். போல்ட் சிறப்பாக ஆரம்பித்தார். அவரது பலமே இறுதி 50 மீற்றர்கள் தான். அந்த இடைவெளியில் தான் தன் அதீத வீச்சைக் காட்டுவார். ஆனால் ரோமில் அது நடக்கவில்லை. போல்டின் அந்த வித்தை கெட்லினிடம் பலிக்கவில்லை. இவர் ஒரு கணம் சேர்ந்து போக, கெட்லின் மின்னல் வேகத்தில் பாய்ந்து 9.94 செக்கனில் 100 மீற்றரைக் கடந்து விட்டார். இது கோட்டன் டயமண்ட் லீக்கின் மூன்றாவது வெற்றி கெட்லினுக்கு.

எனவே போல்டின் ஆதிக்கம் இப்போது கேள்விக் குறியாக்கப் பட்டுள்ளது. அடுத்த தொடர் ஒஸ்லோவில் ஜூன் 14 இல் நடைபெறவுள்ளது. இங்கும் கெட்வின் எதிர்பார்க்ககப்படும் அதேவேளை எதிர்வரும் மொஸ்கோ உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் இருவரும் மோதுவது நிச்சயம் என்றே தெரிகிறது.

இப்போதுள்ள கேள்வி, உபாதைகள் அற்ற போட்ல் தனிக்காட்டு ராஜாவா? அல்லது அவருக்கு ஈடாக கெட்கின் போன்றவர்கள் முன்னேவர போல்ட் பின் தள்ளப்படப் போகிறாரா என்பதுதான்.




சூதாட்டப்புகார் நிழல்கள் வேகமாகப் பின் நோக்கி நகர்கின்றன. இப்பொழுது வெளிப்பட்டுள்ள செய்தி 2010 இல் இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது நடைபெற்றது என்று ஊடகங்கள் செய்திகள் வெளியிடுகின்றன. இந்த விடயத்தையும் வெளியே கொண்டு வந்திருப்பார் பஞ்சாப் கிரிக்கெட் சபையின் தலைவர் இந்திரஜித் பிந்த்ரா. இந்தக் குற்றச் சாட்டை சகல தரப்பாரும் மறுக்கின்றனர்.

ஆனால் அவர் உறுதியாக இருக்கின்றார். அதாவது மேற்படி சுற்றுப் பயணத்தின்போது பல இரவுகளில் ஒரு இந்திய வீரர், சூதாட்டத் தரகர்களுடன் தொடர்புடைய பெண்மணி ஒருவருடன் காணப்பட்டிருக்கிறார் என்பதே அது.

அதிலும் இந்திய அணிக்கு இலங்கையில் மேஜர்.ஜெனரல் ஒருவரின் CCTV புகைப்படக்கருவிகள் பொருத்தப்பட்டிருக்க, இதையெல்லாம் மீறி இந்த நபர் எப்படி அந்தப் பெண் மணியுடன் இருந்திருக்க முடியும். அல்லது அந்தத் துணிவு எப்படி வந்தது என்பதும் கேள்வி.

இதேவேளை இப்படி எழுந்த குற்றச் சாட்டை பீ.சீ.சீ.ஐ மறைத்து பூசி மெழுக முயற்சித்ததாகவும் குற்றச் சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அதோடு இப்படியான முறைப்பாடுகள் இருந்தால் அலை ஐ.சி.சியின் ஊழல் தடுப்ப அமைப்புக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் அப்படி அறிவிக்கப்படவில்லை என்பது இன்னொரு கேள்வி. இந்த விடயங்கள் லண்டன் பத்திரிகை, மற்றும் இந்தியப் பத்திரிகைகளில் சுடச்சுட வெளிவந்து கொண்டிருக்கின்றன. பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடித்த கதையாகத்தான் எல்லாம் முடியப் போகிறது போலத்தெரிகிறது. சிறிசாந்த் தொடங்கி வைத்தார். சிலந்தி வரை விஸ்வரூபம் எடுத்து எண்ணென்னவோ ரகசியங்களை எல்லாம் வெளியே கொண்டு வரப் போகிறதோ தெரியவில்லை.

அது சரி இலங்கையில் வந்து சர்ச்சைக்கள்ளாகிய வீரர் யார்? அவர் இந்திய ஒரு நாள், இருபதுக்கு இருபது போட்டிகளுக்க தவிர்க்க முடியாத வீரர். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முக்கியமான வீரர்.டெஸ்ட் அணியில் இடம்பிடிக்கப் போராடுபவர். உண்மையில் அதிதிறமையான கிரிக்கெட் வீரர். என்ன செய்வது சிக்கல்கள் எதிர்பாராமல் வருகின்றன. இன்னொரு தரப்பினர் கூறுவதைப் போல அந்தப் பெண்மணி சூதாட்டத் தரகர்களுடன் தொடர்புள்ளவர் அல்ல அவர் PLAYER AGENT எனும் அங்கீகரிக்கப்பட்ட கடமையாற்றியவர் தான் என்று நிரூபணமானால் நன்றாகத் தான் இருக்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.



## பந்தயக் குதிரைகள்

# இந்து மக்களின் ஆலயங்கள் என்ன செய்தன?



- ரெகஸ்பதி -

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இந்த மாத ஆரம்பத்தில் நான்கு இந்து ஆலயங்கள் உடைத்துச் சேதமாக்கப்பட்டுடன் கொள்ளையும் இடப்பட்டிருந்தது. அதே வேளை கடந்த 8ஆம்திகதி திருகோணமலை திருஞான சம்பந்தர் வீதியிலுள்ள கற்பக விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கோபுரத்தில் 13 சிற்பங்கள் சேதமாக்கப்பட்டிருந்தன.

இந்து ஆலயங்கள் என்பவை ஒரு கலாச்சாரத்தின் சின்னங்கள் என்பதுடன், தமிழ் மக்களின் ஆத்மார்த்தமான விடயமுமாகும். இவற்றில் தேவையற்ற விதத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தமிழ் மக்களை மேலும் மனக்காயத் துக்குட்படுத்துவதாகவே இருக்கும் . அந்த வகையில் இந்த ஆலயங்கள் மீதான பிழையான நடவடிக்கைகள் குறித்து இவ்வாறம் ஆராயலாம்.

அத்துடன், ஆலயங்களின் தாக்குதல்களுக்கு அரசியல் பின்னணியா, வேறு ஏதாவது விபரீத நோக்கமாக காரணம் என்று கிளறிப் பர்ப்பது இந்தக்கட்டுரையின் நோக்கமல்ல என்ற வகையில் இதனை ஆராயலாம்.

கடந்த ஜூன் 2ஆம்திகதி இரவு நான்கு இந்து ஆலயங்களை இனந் தெரியாத நபர்கள் உடைத்துச் சேதமாக்கி உள்ள நிலையில் அவை தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனார். ஆலயங்களில் இருந்த மூல விக்கிரகம், நவக்கிரகங்கள் என்பவற்றை சேதப்படுத்திய இனந் தெரியாதோர் அங்கிருந்த தங்க நகைகள், பணம் என்பவற்றையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவங்களால் மட்டக்களப்பு நகரில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது. மட்டக்களப்பு பிள்ளையாரடி பிரதேசத்தில் புத்தர் சிலையை நிறுவ நீதிமன்றத்தால் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் இடம்பெற்ற இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல்கள் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகங்களை தோற்றிவித்திருந்தன. இது சில வேளைகளில் புத்தர் சிலை நிறுவுவதற்கு தடை மேற்கொள்ளப்பட்டதன் எதிரொலியா என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு குருக்கள்மடம் சிறி செல்லக்கதிர்காமர் ஆலயம், மாங்காடு பிள்ளையார் ஆலயம், கிரான் குளம் ஐயனார் ஆலயம், பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம் ஆகியவற்றிலேயே இனந்தெரியாதோர் செயலை அரங்கேற்றி உள்ளனர்.

இந்து ஆலயங்களை உடைக்க வேண்டும் என்ற நோக்கமும், அங்கிருந்த பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிடவேண்டும் என்ற நோக்கமும் இந்தச் சம்பவங்களின் பின்னணியில் தென்படுவதாக ஆலயங்களின் நிர்வாகத்தினரும், பிரதேச மக்களும் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு குருக்கள்மடம் சிறி செல்லக்கதிர்காமர் ஆலயத்தில் இருந்த 19 விக்கிரகங்கள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன. அங்கிருந்த சுமார் 20 பவுண் தங்க நகைகளும், விக்கிரகத்தின் அடியில் வைக்கப்பட்டிருந்த தங்கத் தகடும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாங்காடு கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் மூல விக்கிரகம் மற்றும் நவக்கிரகங்கள் என்பன உடைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, கிரான்குளம் கிராமத்திற்கும், அம்பிளாந்துறைக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள ஐயனார் ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் மற்றும் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்த மூன்று ஆலயங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் குறித்து ஆலயங்களின் நிர்வாகத்தினர் களுவாஞ்சிக்குடிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லையிலுள்ள பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த கும்பாபிசேக கலசம் சேதமாக்கப்பட்டுள்ளதோடு அந்த ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியலும் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. திரௌபதை அம்மன் ஆலயம் சுமார் 500 வருடங்கள் பழமைவாய்ததொன்று என்பதனை விடவும் வரலாற்றுச்சிறப்பு மிக்கதுவாகும்.

இது தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்தச் சம்பவங்கள் குறித்து கேள்வியுற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் மாகாண சபை உறுப்பினர்களான ஆர்துரைரெட்ணம், இந்திர குமார் பிரசன்னா ஆகியோர் குறித்த ஆலயங்களுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இந்த நிலையில், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில், ஒரே இரவில் நான்கு இந்து ஆலயங்கள் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப் பட்டதைக் கண்டித்து சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப் படவுள்ள இந்த மகஜர், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கத்திடம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ. சபா வாசுதேவ குருக்கள் மற்றும் ஏனைய குருமார் ஒன்றிணைத்து கையளித்தனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப் பட்டு தண்டிக்கப்பட வேண்டும். மத வேற்றுமைகளை களைந்து இந்துக்களின் சுதந்திரமான வழிபாட்டிற்கு வழசமைப்பதோடு அனைத்து மக்களினதும் வழிபாட்டு சுதந்திரமும் பாதுகாக்கப்படுவதற்கு மாண்புமிகு ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கையாக இருந்தது.

இதே நேரம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் ரொபின்சொன் அம்மையாரிடம் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆலயங்களில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் யுத்தத்தின் பின்பே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதையும் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் கோயில்கள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டது தொடர்பிலான விசாரணைகள் ஆமைவேகத்திலேயே சென்றுகொண்டிருக்கின்றது. விசாரணையை துரிதப்படுத்தி குற்றவாளிகளை கைதுசெய்ய பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொள்ள வேண்டும் என கிழக்கு மாகாணசபை உறுப்பினடீ கோவிந்தன் கருணாகரம் (ஜனா) வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஒரே இரவில் நான்கு இந்து ஆலயங்கள் இனந்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் பணம் மற்றும் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் இந்து மக்களை மிகவும் மன வேதனை அடையச் செய்துள்ளது.

இச் சம்பவமானது, ஒன்றுபட்டு வாழும் பல்வகை மதம் சார்ந்த மக்களை பிளவுபடுத்தும் நோக்கமாகக் கொண்டதாக அமைந்திருக்கலாம் என்பது பொது மக்களது கருத்தாக இருக்கிறது. யுத்தத்தினை அனுபவித்து அதில் இருந்து முற்று முழுதாக மீளாத நிலையில் மீண்டும் கலவரத்தினை தூண்டும் வகையில் இவ் வாறான திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதானது மக்களை மேலும் சுதந்திரத்தில், ஜனநாயகத்தில் அக்கறையற்றதொரு நிலைப்பாட்டிற்குள்ளேயே தள்ளிவிடும்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் மக்கள் அக்கறையற்று இருக்கும் நிலையொன்று தோன்றிவிடுமானால் அவர்கள் விரக்தி நிலையினை அடைந்து விட்டார்கள் என்பது பொருளாக இருக்கும். ஆனால் துரதிஸ்ட வசமாக இந் நிகழ்வு மூலம் இந்துமக்களை மிகவும் புண்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஆலயங்களில் நடந்து வரும் திருட்டுக்கள் ஒருபுறம் நடந்து கொண்டே இருக்கின்றன. இந்நிலையில், இச்சம்பவங்கள் மக்களை மேலும் பதற்றமடையச் செய்வதோடு கடந்த கால யுத்த சூழலையும் எண்ணிப்பாரப்பதற்கான தேவையையும் கொண்டுவந்திருக்கிறது.

இது போன்ற சம்பவங்கள் இனிமேல் தொடராவண்ணம் உடனடியாக தடுத்து நிறுத்துல் முதலாவது வேலையாக இருந்தாலும், இச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கண்டுபிடிக்கப் பட்டேயாகவேண்டும்.

ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் தமிழ் இந்து மக்கள் இவ்வளவு அமைதியாக இருப்பதே அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு தகவலாகவே இருக்கிறது. திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் வீண் முயற்சிகளால் எழப் போகும் விபரீதங்கள் தேவையற்றதாகவும், விரும்பத்தகாதவைகளாகவுமே இருக்கும் என்பதுதான் அந்தத் தகவலாகும்.

யுத்தம் நிறைவு பெற்று பல வருடங்கள் கடந்த போதும் இது வரையில் நிம்மதியான வாழ்வை வாழ முடியாததொரு பொருளாதார சுமை மக்களை வாட்டிக்கொண்டு தான் இருக்கிறது. ஆலயங்களும் கடவுள் வழிபாடுகளுமே மக்களின் நிம்மதிக்கு ஒரு வழியாக இருக்கிறது. அவ்வாறிருக்க ஆலயங்கள் தாக்கப்படுவது மிகவும் மோசமானதொரு செயலாகும்.

மக்களை அமைதிப்படுத்துவதற்கும் அவர்களின் நிம்மதியையும் சந்தோசத்தையும் மேலும் வலுப்படுத்துவதற்கான காலமாக அனைத்து தரப்பினரும் இதனைப் பார்த்தால் இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் பார்த்துக் கொள்வார்கள்.

இன ஐக்கியமும் அமைதியும் சமாதானமும் நிறைந்த நாடாக இலங்கையைப் பார்க்க நினைக்கும் எந்த ஒரு இலங்கைக் குடிமகனும் இன, மத, மொழி சார்ந்த எந்தவொரு பிரச்சினையயும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் எண்ணத்தைக்கூட நினைத்துப்பார்க்கமாட்டான் என்பதை மாத்திரமே இந்த இடத்தில் சொல்லி வைக்க முடியும்.

அந்த வகையில் ஆலயங்களில் நடத்தப்பட்ட வீணான பிரச்சினைகள் தொடர்பில் விசாரணைகளை நடத்துபவர்கள் பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகளை மேற்கொள்வதுடன் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதே அனைவரதும் வேண்டுகோளாக இருக்கிறது என்ற வகையில் அதற்கான எதிர்பார்ப்



# குருப்பெயர்ச்சி பலன்கள்

## (28.5.2013 முதல் 12.6.2014 வரை)




உழைப்பே ஒய்வுக்கு திறவுகோல், சுறுசுறுப்பே செல்வத்துக்கு திறவுகோல் என்பதை அறிந்த நீங்கள், எப்போதும் பரபரப்பாக இருந்து சாதிக்கும் மகர ராசி அன்பர்களே!

### குருபகவானின் சஞ்சாரம்:

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் சுக, லாபாதிபதியுமான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் செல்வதால் பழைய பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். முக்கியப் பதவி, பொறுப்பில் இருப்பவர்களின் நட்பு கிட்டும். வழக்கில் வெற்றி உண்டு. பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய குறைந்த வட்டிக்கு கடன் கிடைக்கும். வீடு, வாகன வசதி பெருகும். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். எப்போதும் மருந்தும் மாத்திரையுமாக இருந்த தாயார் சற்றே குணமடைவார். அவருடன் இருந்த கசப்புணர்வுகள் நீங்கும். 26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் நட்புவட்டம் விரியும். கடனாக கேட்ட இடத்தில் பணம் வரும். கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். சொந்த பந்தங்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். திருமணம் கூடிவரும்.

சிறுகச்சிறுக சேமித்து வைத்ததில் புறநகர் பகுதியிலாவது வீட்டு மனை வாங்க முயற்சிசெய்வீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை, விரும்பத்தகாத இடமாற்றம் வந்துசெல்லும். 29.8.2013 முதல் 26.1.2014 மற்றும் 13.4.2014 முதல் 12.6.2014 வரை உங்களின் திருதியாதிபதியும் விரையாதி-பதியுமான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் சுப நிகழ்ச்சிகளால் வீடுகளை கட்டும். பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். பிள்ளைகளால் அலைச்சலும், செலவீனங்களும் அதிகரிக்கும். வீடு கட்டுவதற்கு வங்கிக் கடன் தாமதமாக கிடைக்கும். அவ்வப்போது உணர்ச்சிவசப்படுவீர்கள். யாரையும் யாருக்கும் சிபாரிசு செய்யவேண்டாம். பணம், விலை உயர்ந்த நகையை கவனமாகக் கையாளுங்கள். அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம். இளைய சகோதரவகையில் உதவிகள் கிடைக்கும். சொத்து வகையில் வழக்கு வந்து நீங்கும்.

13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.3.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்கிர கதியில் செல்வதால் தடைப்பட்ட வேலைகள் முடியும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பயணங்களால் ஆதாயமடைவீர்கள். இழுபறியாக இருந்த அரசுக் காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். வியாபாரத்தில் சட்டத்திற்குப் புறம்பான வகையில் செல்ல வேண்டாம். அப்படிப்பட்டவர்களின் நட்பையும் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் செய்யாதீர்கள். வேலையாட்களை விரட்டாதீர்கள். தொழில் இரகசியங்களை சொல்ல வேண்டாம். அரசாங்கத்தை எதிர்த்துக் கொள்ளாதீர்கள். பங்குதாரர்களை மாற்ற வேண்டிவரும். மர வகைகள், ஸ்டேஷனரி, பதிப்பகங்கள், கமிஷன் மூலம் இலாபம் பெறுவீர்கள்.

வியாபார விஷயமாக வழக்கு, நீதிமன்றம் என்றுசெல்லாமல் முடிந்தவரை பேசித் தீர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் வீண் பழிகளை சுமக்க வேண்டியது வரும். பொறுப்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்களின் விடுப்பால் மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டிவரும். ஆனால், மூத்த அதிகாரிகளின் பாராட்டுதலால் ஆறுதலடைவீர்கள். எல்லா நேரமும் கறாராகப் பேசாமல் கொஞ்சம் கலகலப்பாகவும் பேசக் கற்றுக் கொள்ளுங்கள். அலுவலகம் சம்பந்தமாக அயல்நாடு செல்ல வேண்டிவரும். எதிர்பார்த்த சலுகைகளையும், சம்பள பாக்கியையும் போராடிப் பெறுவீர்கள். பதவி உயர்வு தாமதமாக வரும்.

கன்னிப் பெண்களே! பெற்றோரை பகைத்துக் கொள்ளாதீர்கள். காதல் கசந்து இனிக்கும்.

நல்லவர்களின் நட்பு கிடைக்கும். நேர்முகத் தேர்வில் போராடி வெற்றி பெற்று புதுவேலையில் அமர்வீர்கள். திருமணம் சிறப்பாக முடியும்.

மாணவ மாணவிகளே! விளையாடும் போது காயம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்திப் படியுங்கள். விடைகளையும் எழுதிப் பாருங்கள். நண்பர்களுடன் மனஸ்தாபங்கள் வெடிக்கும். கலைத்துறையினரே! உங்கள் படைப்பிற்கு சிலர் உரிமை கொண்டாடுவார்கள். உங்களின் புதுமுயற்சிகள் மூத்த கலைஞர்களின் ஆதரவால் வெற்றியடையும்.

அரசியல்வாதிகளே! உங்கள் பெயரை சிலர் தவறாகப் பயன்படுத்துவார்கள். கோஷ்டிப் பூசலாலும் எதிர்க்கட்சியினராலும் அலைகழிக்கப்படுவீர்கள்.

விவசாயிகளே! அகலக்கால் வைத்து கடன் பிரச்சினையில் சிக்கிக் கொள்ளாதீர்கள். காட்டு வெள்ளாமை வீட்டிற்கு வரும் வரை எதுவும் நிலையில்லை என்பதை மறந்துவிடாதீர்கள்.

இந்த குரு மாற்றம் நெருக்கமானவர்களின் மற்றொரு முகத்தை காட்டிக்கொடுப்பதுடன், பணத்தின் அருமையை புரிய வைப்பதாகவும் சகிப்புத்தன்மையால் கொஞ்சம் வளர்ச்சியையும் தரும்.




எளியாரை வலியார் அடித்தால், வலியாரை தெய்வம் அடிக்கும் என்பதை அறிந்த நீங்கள், பதவியும் பணமும் வந்தாலும் யாரையும் பகைத்துக் கொள்ளமாட்டீர்கள்.

### குருபகவானின் சஞ்சாரம்:

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் திருதியாதிபதியும் ஜீவனாதிபதியுமான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் செல்வதால் உங்களின் ஆளுமைத்திறன் அதிகரிக்கும். வீடு, மனை வாங்குவது, விற்பது இலாபகரமாக அமையும். எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பணவரவு அதிகரிக்கும். வாகனம் வாங்குவீர்கள். சின்ன இடமாவது வாங்கவேண்டுமென்று நினைப்பீர்கள். சட்டத்திற்குப் புறம்பான வகையில் யாருக்கும் உதவவேண்டாம். 26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் பழைய கடனை நினைத்து சிலநேரங்களில் அஞ்சுவீர்கள். வேற்றுமொழியினர் உதவிகரமாக இருப்பார்கள். காய்ச்சல், சளித் தொந்தரவு, நெஞ்சு எரிச்சல் வந்துபோகும். வீட்டில் கூடுதல் அறை அல்லது தளம் கட்டும் முயற்சிகள் பலிதமாகும். அவசரத்திற்கு கைமாற்றாகவும் கடனாகவும் வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

29.8.2013 முதல் 12.11.2013 வரை உங்களின் தன லாபாதிபதியான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் பணவரவு அதிகரிக்கும். புதிய முயற்சிகள் வெற்றியடையும். நவீனரக மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். அரசுக் காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். திருமணம், சீமந்தம், கிரகப்பிரவேசம் போன்ற சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். புதுப் பொறுப்புகளும் வாய்ப்புகளும் தேடிவரும். மகளுக்கு வேலை கிடைக்கும். திருமணமும் கூடிவரும். 13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.3.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்கிர கதியில் செல்வதால் இக்காலகட்டத்தில் முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் வந்துசெல்லும். உங்களைப் பற்றிய விமர்சனங்களும் வதந்திகளும் வரக்கூடும். முக்கிய சொத்துப் பத்திரங்களை பாதுகாப்பான இடத்தில் வையுங்கள். சில சமயங்களில் தர்மசங்கடமான சூழ்நிலையை சமாளிக்க வேண்டிவரும்.

ஒருபக்கம் பணவரவு உண்டு என்றாலும் சேமிக்க முடியாதபடி செலவுகளும் இருக்கும். உடல் அசதி, சோர்வு வந்துநீங்கும். வங்கிக் காசோலையில் முன்னரே கையொப்பமிட்டு வைக்கவேண்டாம். அரசு சம்பந்தப்பட்ட விஷயங்களில் அலட்சியமாக இருக்கவேண்டாம். வருமான வரி செலுத்துவதில் தாமதம் வேண்டாம். வியாபாரத்தில் களையிழந்து போயிருந்த கடை இனி அதிக வாடிக்கையாளர்களின் வருகையால் களைகட்டும். பழைய பாக்கிகளை இங்கிதமாகப் பேசி வசூலிப்பீர்கள். புதுமுதலீடுகள் செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். வேலையாட்கள் உங்களிடம் விசுவாசமாக நடந்துகொள்வார்கள். சொந்த இடத்திற்கே கடையை மாற்றுவீர்கள். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் உங்களின் ஆலோசனைகளுக்கு ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் நிலைப்போமா, நிலைக்க மாட்டோமா என்ற பயம் இனி நீங்கும்.

உங்களை அலைகழித்த மேலதிகாரி வேறிடத்திற்கு மாற்றப்படுவார். புது அதிகாரி உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்துகொள்வார்கள். வெகுநாட்களாக எதிர்பார்த்த சம்பள உயர்வும் பதவி உயர்வும் இனி உண்டு. புதிய வாய்ப்புகளும் தேடிவரும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

கன்னிப் பெண்களே! உங்களின் கனவு நனவாகும். அடி வயிற்றிலிருந்த வலி, தூக்கமின்மை விலகும். காதல் கனியும்.

திருமணம் தள்ளிக்கொண்டே போனதே! உங்கள் ஆசைப்படி கல்யாணம் முடியும்.

மாணவ மாணவிகளே! நல்ல கல்வி நிறுவனத்தில் மேற்படிப்பை தொடரும் வாய்ப்பு கிட்டும். ஆசிரியரின் அன்பைப் பெறுவீர்கள். கெட்ட நண்பர்களை ஒதுக்கித் தள்ளுங்கள். போட்டித் தேர்வுகளில் வெற்றி கிட்டும்.

கலைத்துறையினரே! உங்களின் படைப்பிற்கு பரிசும் பாராட்டும் கிட்டும். வெகுநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிறுவனத்திலிருந்து புதுவாய்ப்பு கதவை தட்டும். வீடு வாங்குவீர்கள்.

அரசியல்வாதிகளே! எதிலும் வெற்றி பெறுவீர்கள். ப்தவிகள் தேடிவரும். கட்சியில் பெரிய பதவியில் இருப்பவர்கள் உங்களை மதித்து பேசுவார்கள். முக்கிய விழாக்களுக்கு தலைமை தாங்குவீர்கள். விவசாயிகளே! பூச்சித் தொல்லை, எலித் தொல்லை இனி குறையும். பாசனத்திற்கு போதிய தண்ணீர் கிடைக்கும். மகசூல் பெருகும். கடன் தீரும்.

இந்த குரு மாற்றம் வாடிப்போயிருந்த உங்களை வளம் பெற வைப்பதுடன், மதிப்பு, மரியாதையையும் வசதி வாய்ப்புகளையும் அள்ளித் தருவதாக அமையும்.




செடியாக இருந்த போது வளையாதது மரமான பிறகு வளையாது என்பதை அறிந்த நீங்கள், குழந்தைகளை கட்டுப்பாட்டுடன் வளர்ப்பதில் வல்லவர்களான மீன ராசி அன்பர்களே!

### குருபகவானின் சஞ்சாரம்:

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் தன, பாக்கியாதிபதியான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் செல்வதால் வீடு, மனை வாங்குவது, விற்பது நல்ல விதத்தில் முடியும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரசாங்க அதிகாரிகள், அதிகார பதவியில் இருப்பவர்களின் உதவியால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் ஆதாயமடைவீர்கள். தந்தையாரின் உடல்நிலை சீராகும். அவருடன் இருந்த மோதல்கள் விலகும். தந்தைவழிச் சொத்தை பெறுவதில் இருந்துவந்த தடைகள் நீங்கும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கண்டும் காணாமல் சென்றுகொண்டிருந்தவர்கள் வலிய வந்துபேசுவார்கள். சிறுகச் சிறுக சேமித்து வைத்ததில் புறநகர் பகுதியிலாவது வீட்டு மனை வாங்க முயற்சிசெய்வீர்கள். 26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் திடீர் பயணங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் அவ்வப்போது சச்சரவு வரும். கணவன், மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது.

தவிர்க்க முடியாத செலவுகளால் திணறுவீர்கள். வேற்றுமதத்தவர்கள், மொழியினர்களால் ஆதாயமடைவீர்கள். யாரையும் முழுமையாக நம்பவேண்டாம். யாரையும் யாருக்கும் சிபாரிசு செய்யாதீர்கள். உறவினர், நண்பர்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிடவேண்டாம். நியாயம் பேசப்போய் பெயர் கெடும். கூடாப்பழக்கமுள்ளவர்களிடம் அதிக நெருக்கம்காட்ட வேண்டாம். 29.8.2013 முதல் 26.1.2014 , மற்றும் 13.4.2014 முதல் 12.6.2014 வரை உங்களின் ராசிநாதனும் ஜீவனாதிபதியுமான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் சிறு வாகன விபத்துகள் வந்துநீங்கும். வங்கிக் கடன் கிடைக்கும். பேச்சில் ஒரு முதிர்ச்சி வெளிப்படும். எதிர்பார்த்துக் கொண்டிருந்த தொகை கைக்கு வரும். வீட்டில் தள்ளிப் போன சுபகாரியங்கள் ஏற்பாடாகும். தைரியமாக சில பெரிய முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் நல்ல விதத்தில் முடியும்.

அரைகுறையாக நின்ற கட்டடப் பணியை தொடங்குவீர்கள். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். பண விஷயத்தில் ஏமாந்துவிட வேண்டாம். 13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.3.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்கிர கதியில் செல்வதால் வேலைச்சுமை அதிகரிக்கும். உங்களின் வசதி, வாய்ப்புகள் ஓரளவு பெருகும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. எங்கு சென்றாலும் மதிப்பு, மரியாதை கூடும். மனைவிவழி உறவினர்கள் முக்கியத்துவம் தருவார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. சில நேரங்களில் எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குரியவரை கலந்தாலோசிக்கத் தவறாதீர்கள்.

அவசர முடிவுகளோ, முதலீடுகளோ வேண்டாம். சந்தை நிலவரத்தை அறிந்து கொள்ளும் அறிவாற்றலை பெறுவீர்கள். புது ஏஜென்சி யோசித்து எடுங்கள். வங்கிக் கடன் கிடைக்கும். கடையை விரிவுபடுத்துவீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள் சந்தர்ப்ப, சூழ்நிலை தெரியாமல் பேசுவார்கள். உணவு, பிளாஸ்டிக், ஆட்டோ, மொபைல் வகைகளால் ஓரளவு இலாபம் வரும். உத்தியோகத்தில் உங்கள்மீது தொடரப்பட்ட பொய் வழக்கு தள்ளுபடியாகும். சம்பளம் உயரும். விரும்பத்தகாத இடமாற்றம் உண்டு. உயரதிகாரிகளின் இராஜதந்திரத்தை உடைத்தெறிவீர்கள். ஆனால், சக ஊழியர்களுடன் பிரச்சினைகள் வரும். சிறு அவமானங்கள் வந்து நீங்கும்.

கன்னிப் பெண்களே! தாயாருடன் மோதல் வரும். உங்கள் பலம், பலவீனத்தை உணர்ந்து செயற்படுவது நல்லது. காதல் விவகாரத்தை தள்ளிவைத்து உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள்.

மாணவ மாணவிகளே! இலட்சியப் போக்குடன் கடைசி நேரத்தில் படிக்கும் பழக்கம் இனிவேண்டாம். விளையாட்டில் பதக்கம் பெறுவீர்கள். போலியான நண்பர்களிடமிருந்து விடுபடுங்கள். உண்மையான நண்பர்களை உணர்ந்து கொள்ளுங்கள். சமயோசித புத்தியை பயன்படுத்துங்கள்.

கலைத்துறையினரே! கிசுகிசுத் தொந்தரவுகள் வரக்கூடும். பரபரப்பாக இருப்பீர்கள். ஆனால் பணவரவு சுமார்தான். உதாசீனப்படுத்திய நிறுவனமே உங்களை அழைத்துப் பேசும்.


அரசியல்வாதிகளே! கோஷ்டி பூசலாலும் எதிர்க்கட்சியினரால் அழுக்கப்பட்டாலும் அனைத்தையும் முறியடித்து முன்னேறுவீர்கள். உண்ணா விரதம், ஊர்வலங்களை முன்னின்று நடத்தி புகழடைவீர்கள்.

விவசாயிகளே! மரப்பயிர் இலாபம் தரும். பம்பு செட் அவ்வப் போது பழுதாகும். பக்கத்து நிலத்துக்காரரை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

இந்த குரு மாற்றம் உங்களை நாலா விதத்திலும் சிரமப்பட வைத்தாலும் புதிய பாதையில் பயணித்து எதிர்நீச்சலில் வெற்றி பெறவைக்கும்.

(முற்றும்)

# அவள் என்றும் பசும் பொன்



பாவேதநாயகம்,
பருத்தித்துறை.

**பிரதான** வீதியின் வலது புறத்தே அமைந்திருந்த வைத்திய சாலையின் பாதையின் இரு புறமும் வரிசையில் அமைந்த விதவிதமான பூக்கன்றுகளில் வெயில்விழாது ஆங்காங்கே உள்ள பெரும் மரங்கள் குடைபிடித்த வண்ணம் இருக்க பச்சைப் பட்டுநெசவைப் போல் புற்தரைப் பரப்பு கண்களுக்கு கனவு- களை அறிவிக்கும் கேந்திரமாய் இருந்தது. குளத்து வாய்க்காலால் சிறகு முளைத்து விரைந்த நீர்போல் பார்வை யாளர்கள் வாட்டு களுக்கு விரைந்து சென்று கொண்டிருந்தனர்.

ஒன்பதாம் வாட்டை நோக்கி சுபாசினியின் கால்கள் நடந்தன. ஐந்தாம் கட்டிலில் ஒரு உருவம் லொக் லொக்கென்று இருமியபடி அங்குமிங்குமாக வேதனை தாங்காது உருண்டுபுரண்டது. சந்தேகக் கீறல் நெஞ்சிலெழ சற்று அருகே நெருங்கி... 'தயா...' என்கிறாள் சுபா...

"இவளா தயாளினி".... இல்லை... இல்லை சுபாவால் நம்பமுடியவில்லை. கருணையின் கண்கள் புன்னகை ததும்பும் இதழ்கள், அப்பிள் கன்னங்கள். வகுப்பிலே இவள் கட்டழகி, ஆறடிநீள பின்னிய சடை இவள் நடக்கும்போது அங்குமிங்கும் ஆடியசைந்து நளினமிடும், கண்டவர்கள் மீண்டும் காணத்துடிக்கும் சிற்பிகளாலும் செதுக்க முடியாத பொற்சிலை அவள்.

அவளோ இன்று.... கன்னங்கள் குழிவிழுந்து, உதடுகள் ஒட்டி, தலை வழுக்கையாகி, கைகால்கள் மெலிந்து வைத்திய பயிலுநரின் பரிசோதனைப் பொருளாகிவிட்டாள்.

பிறவிக் குருடனுக்கு கண்களை புதிதாகப் பொருத்த பார்வை பெற்று உலகத்தை முதன்முதல் வியப்புடன் பார்ப்பதுபோல் இருவரும் ஒருவரை ஒருவர் ஏற இறங்க பார்க்கின்றனர். இருவர் இதயங்களும் உள்ஞர அழுது நிறைந்து விழிமடையால் வழிந்து பாய்கின்றது. நினைவில் நீந்திவந்த வார்த்தைகள் நாக்குச் சேற்றுள் புதைந்து விட்டதால் உற்ற நண்பிகளாயிருந்தும் அவர்களால் பேச முடியவில்லை.

நோயாளரைப் பார்க்கும் நேரம் முடிந்ததை அறிவிக்க மணி ஒலிக்கின்றது. தயா அவசர அவசரமாக தலையணைக்குக் கீழ் எதையோ தேடுகிறாள். கையில் பெரிய தபாலுறை சிக்கிக் கொள்கிறது.

"சுபா நீ என்னுடன் இருந்து, கற்ற காலம் முதல் இற்றை வரையான சகல விடயமும் இதிலை காண்பாய், நீ என்னை விட்டு பிரிஞ்சு யுத்தத்துக்கு அஞ்சிப் போனதால உன்னோடை தொடர்பு கொள்ளமுடியல்ல" கதைக்கவே முடியாது மூச்சுத்திணறிய தயாவை சுபா ஆசுவாசப்படுத்தினாள். கட்டிலில் படுக்க வைத்த பின்னர் தபாலுறையை வாங்கவும்... "பார்வை நேரம் முடிஞ்சுது எல்லாரும் தயவுசெய்து வெளியில போங்கோ"

காவல் உத்தியோகத்தரின் கடமைத் தொனி அங்கு காற்றிலே மிதந்து ஒலிக்கிறதும் சரியாய் அமைந்தன. இதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாத சுபா இடத்தைவிட்டு வெளி யேறுகிறாள்.

தயாவும் சுபாவும் இணைபிரியாத பள்ளித் தோழிகள், தமது சக துக்கங்களை பகிர்ந்துகொள்வதில் திருப்திப்படுவர். இடம்பெயர்வு காரணமாக பல காலம் தொடர்பற்று இருந்தார்கள். அண்மையில் எதிர்பாராதவிதமாக சந்தித்த பின்னர் கடிதப் பரிமாற்றம்செய்து கொள்வார்கள்.

தயாளினி குடும்பத்தில் மூத்தவள், பின்னவள் இருவர், குடும்பநிலை இலம்பாடாய் இருக்கினும் அவளின் பெற்றோர் பாசத்தை யும், பண்பையும் பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்த்தனர். கல்வியில் சிறந்துவிளங்கு வதற்காய் நேசறி வயதினிலேயே தயாவின் கல்வியில் பெற்றோர் ஆர்வம்காட்டினர்.

புதுக்குடியிருப்பு 'சிறு மலர்கள்' பள்ளி யிலும் ஆரம்பக் கல்வியைப் பெற்ற பின் உயர்வகுப்புக்கென மகா வித்தியாலயத்தில் இணைத்தனர்.

யுத்தம் உக்கிரம் அடைந்த காலமாயினும் அவளது படிப்பினில் ஊக்கம் சோரவில்லை. அடுத்தடுத்த தேர்வு பரீட்சைகளில் சித்தி பெற்று க.பொ.த உயர்தர பரீட்சையிலும் சித்தியடைந்தாள். ஆனால் பல்கலைக் கழகம் செல்லும் தகுதியை இழந்திருந்தாள். இப் பின்னடைவிற்குக் காரணம் யுத்தமும் மனப் போராட்டமும்.

அப்பள்ளியில் அவள் பேரழகி, கோமள முகம், வசீகரக் கரங்கள், செம்மை இதழ்கள், முத்துப்பற்கள், ரோஜாக்கன்னம், உடுக்கு இடை, சிவந்த உடற்கட்டு அடர்ந்து நீண்ட சுருள் கேசம், சுருங்கக் கூறில் அங்கு அவளது கல்வியைவிட அவளது இனிமையான பேச்சும் அழகும் அப்பள்ளியில் உள்ளோர் அனைவரையுமே ஆட்டிப் படைத்தது. மேல் வகுப்பு மாணவரில் பலர் அவள்மீது ஒரு தலைக்காதல் கொண்டிருந்தனர்.

வகுப்பில் தயாவை கவர்ந்தவன் ராகவன் தான். படிப்பின்மூலம் இருவரிடையே நல்ல நட்பு ஆரம்பித்து, பின்னர் ராகவன் அவள்மீது ஒரு தலைக்காதல் கொண்டான். இவன் வசதி வாய்ப்புள்ள பிரபல தொழிலதிபரின் ஒரே மகன். ராகன் அவள் அழகில் மயங்கினான்.

கடைசி இரண்டு ஆண்டு கல்விக்காலங் களும் அவனுக்கு இரண்டு மணித்தியால நேரமாக ஓடிக் கழிந்தன. ராகவன் பலமுறை தயாவின் மனதை எடை போட பேசிப் பார்த்தான். தயா அக்காதலுக்கு சற்றும் இணங்கவில்லை.

"ராகவா படிப்பை முடித்த பிறகு அதுபற்றி யோசிக்கலாம். எனக்கு வீட்டில நிறைஞ்ச பொறுப்புகள் இருக்கு... முதல்ல மேலை படிக்கவேணும். படிப்புக்கு ஏற்ற வேலை தேடவேணும். வீட்டில இருக்கிற இரண்டு தங்கைகளை கரைசேர்க்க வேணும்..." இப்படியே அடுக்கிக் கொண்டு போனாள்.

"சரி தயா.... இப்ப எதுவும் வேண்டாம். படிப்பு முடிஞ்சதும் கலியாணம் செய்வது பற்றி முடிவெடுப்பதில் உமக்கு ஆட்சேபனை இல்லையே?....." அவன் வினவியதும் பதிலுக்கு சிறிய புன்னகை ஒன்றை இதழோரம் உதிர்த்துவிட்டு அவள் விலகிச் சென்றாள். "தயா நீர் விரும்பினால் எங்கட கம்பனியிலே ஒரு வேலை வாங்கித்தருவன்" அவளின் குடும்பச்சுமை குறைந்துபோனால், சீக்கிரம் அவளைக் கரம்பற்றலாம் என்பதற்காக அக்கம்பனியின் முகவரியை அவளிடம் படிக்கும் காலத்தில் கொடுத்து வைத்திருந்தான். ஏ.எல் பரீட்சை முடிந்த பின் வன்னியை விட்டு பெற்றோருடன் கொழும்புக்குச் சென்றுவிட்டான்.

☆ ☆ ☆ ☆

அன்று பட்டப்பகல் கூட இருண்டு காணப் பட்டது. வானூர்திகளின் பேரிரைச்சல் தொடர்ந்தும் கேட்கிறது. புதுக்குடியிருப்பே அவ் இரைச்சலால் அதிர்ந்தது. கிபிர் விமானங்கள் குண்டுகளை கொட்டித் தொலைத்தன.

ஹெலிகளும் தொடர்குண்டுகளை அள்ளித் தூவின. அச்சத்தால் மக்கள் அங்குமிங்குமாக சிதறி ஓடினர்.

"ஐயோ என்ரை ராசா எங்களைவிட்டுப் போயிட்டீங்களோ...."

எறிகணைத் தாக்குதலால் தயாவின் தந்தை உடல் சிதறி இரத்த வெள்ளத்தில் அங்கங்கள் அகன்ற முண்டமாக கிடந்தார். அங்கு எவரும் இருக்கவில்லை. தாயும் மக்களும் நடுத்தெருவில் நாதியாகினர்.

அன்றிலிருந்து குடும்பப் பொறுப்பு தயாவின் தலைக்கானது. தனது குடும்பத்தை பாதுகாத்து தங்கைமாரை கரை சேர்ப்பதற்கு அவரிவர்களின் கால்களைப் பிடித்து மன உழைச்சலுக்குள்ளானாள். சிலர் அவளுக்கு உதவிசெய்வதாக உபத்திரவத்தைக் கொடுத்தனர். வேலை தருவதாகக் கூறி அவளின் அழகையும் உடலையும் காணிக்கையாகக் கேட்டனர். "பெண்ணாகப் பிறந்துவிட்டால் கதி இதுதானா! அவள் அழுதாள். பைத்தியக்காரிபோல் கதறி அழுதாள். விடை இல்லை. அவளின் அழுகை இன்னும் அடங்கவில்லை.

நீண்ட காலத்தின் பின்னர் தயாவுக்கு கடிதம் வருகிறது. அது ராகவனின் கையெழுத் திடப்பட்ட விலாசம், பரபரப்போடு அதை அவள் திறந்தாள். மனவெளியில் ஈரம் கசிய ராகவன் அன்று உதவிசெய்வதாக கூறிய வார்த்தைகள் அவள் நினைவில் சிக்கின. தன் குடும்பத்தில் கரிசனை உள்ள ஒரு ஜீவனை எண்ணி பெருமிதத்துடன் வரிகளைப் படித்தாள். தாய்சகோதரங்களை யுத்தவேளையில் பிரிந்துசென்று காப்பாற்றிக் கரைசேர்க்க வேண்டிய கடமை உணர்வு கட்டாயப் பிரிவுக்குள் அவளைத் தள்ளியது.

ராகவனே நேரில் வந்து தயாவை அழைத்து செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தான். அரசாங்கத்தில் ஒரு சிற்றூழியர் பதவி கிடைக்கும் வரையாவது அவர்களின் கம்பனியில் வேலை பார்ப்போம் என்ற தீர்மானத்துடன் அயல் கிராம குடும்ப சிநேகிதரான அம்பலத்தாரிடம் தனது குடும்பத்தை ஒப்படைத்து புறப்பட்டாள்.

அந்த அலுவலகத்தில் ராகவனே முழுப் பொறுப்பாளியாக இருந்தான். அதனால் தயாவின் படிப்புக்கு ஏற்ற பதவியை அவன் வழங்கினான். அது தனியார் கம்பனியானதால் அவள் இரவுபகலாக உழைத்து ஒரிரு வருடங் களுக்குள் தனது இரண்டு சகோதரிகளையும் கரை சேர்த்தாள்.

குனிந்த தலை நிமிராது குனிந்திருக்க... அடர்ந்திருந்த கேசச்சுருள் செயற்கைக் காற்றில் நர்த்தனமாடியது. அருகில் அமர்ந்திருந்து அவளின் அழகை உறிஞ்சியபடி தன் புலன் களைக் கூர்மையாக்கிக்கொண்டு வேலையைப் பார்த்த திவாகரன் தயாவின் ரசிகனானான். வாழ்வின் சுகத்தை எல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினான்.

ராகவன் தயாவை அழைத்து வந்ததிலிருந்து அவர்களின் போக்கை திவாகரன் மிக நுண்ணி, அவதானத்தால் எடைபோட்டான். தான் சுவைக்காத கனியை எவருமே சுவைக்கக் கூடாது என்ற மனம் படைத்த அவன் தயாவை யாருமே விரும்பக்கூடாது என்ற தன்னயத் தால் அவள் நீராட உபயோகிக்கும் ஷம்பூ போத்தலில் கார அமில திரவத்தை கலந்து வைத்ததால், அதனை பயன்படுத்திய தயாவின் கூந்தல் உதிர்ந்து தலை அகேசமானது.

இந்த பரிபவத்தை தாங்க முடியாத தயா ராகவனிடம் சென்று தன்னை மணக்குமாறு வேண்டினாள். அவன் நடந்த தவறை விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக கூறி தனக்கு வேறு இடத்தில் வதுவை சாசுவதம் ஆகிவிட்டதாக கூறி கைவிரித்தான்.

வன்னி யுத்தம் முடிவுக்கு வந்து இயல்பு வாழ்வுக்குள் அனைவரும் திரும்பியபோது மனவிரக்தியால் நொந்து உடல் உழைச்சலால் வெந்து சோர்ந்த தயாவும் வீடு திரும்பினாள். தன் சகோதரிகள் தாயாரை கைவிட்டு கணவர் பின் சென்றதால் முதுமையையும் தனிமையையும் சகிக்காது இறந்ததாக கேள்விப்பட்டாள்.

இத்தனை காலமும் தன் குடும்பத்திற்காக தனது சுகங்களை துறந்து உடைமைகளை இழந்து அவர்களை வாழவைத்த அவளிடம் இப்போ அழுவதற்கு ஒரு துளி கண்ணீர்கூட இல்லை.

இன்று தயாவை பெண் பார்க்க வருகிறார் கள். தயா மேலைநாட்டுப் பாணியில் தன்னை அலங்கரித்தாள். வந்தோருக்கு தயாவை நன்கு பிடித்துவிட்டது. மாப்பிள்ளை கருத்தாலும் மிக மனோக்கியமாக இருந்தான். ஒரு விநாடி தயா அவனைப் பார்த்தாள். தனிக்கட்டையாய் வாழ்வதைவிட தனது வாழ்க்கைப் பயணத்திற்கு ஒரு துணை அவசியம் என எண்ணினாளோ என்னவோ.

கலகலப்பாக அயலவர்கூடி திருமண பேச்சில் ஈடுபட்டிருந்தனர். திடீரென மாப்பிள்ளையின் தாயார் "பெண்ணை எங்களுக்கு பிடிச்சிருக்கு. ஆனா.... திருமணத்தின் பின்னர் தயா வேலைக்கு போவதில் எங்களுக்கு இஷ்டமில்லை"

தயாவிற்கு தர்மசங்கடமான நிலை. கணவனா? கடமையா?.... தேடிய பூடு காலில் சிக்கியபோது அவள் எதையும் துறக்கத் துணிந்தாள். வேலையை விட்டு விடுவதாக பகிரங்கமாய் தெரிவித்தாள்.

மணநாளுக்கான அலுவல்கள் வெகு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்க மாலையிடும் நாளை எண்ணி மங்கை அவள் ஏங்கி நின்றாள், அப்போது...

கார் ஒன்று படலையடியில் வந்து நின்றது. மாப்பிள்ளையின் தாய் தந்தை மட்டும் வந்திருந்தார்கள். "ஆமா... பொம் பிள்ளை என்ன தொழில் பாக்கிறா எண்டு புறோக்கர்கூட எங்களுக்கு சொல்லயில்ல. ஆனபடியால் இந்தச் சம்பந்தம் எங்களுக்கு வேண்டாம்." கனல் கக்கும் கண்களுடன் தகப்பனார் கர்ச்சித்தார். தோளில் இருந்த சால்வையை உதறியபடி காரில் ஏறி அகன்று சென்றனர்.

கூடி இருந்தோர் வாயில் அவல் கிடைத் தாற்போல் பல சோடனைகள், கடந்த காலத்தில் புதினப் பத்திரிகையில் வந்த செய்தியை ஒருவர் அங்குள்ளோருக்கு விளக்குகிறார். இந்த வீட்டில் சம்பந்தம் வைக்க அவர்கள் விரும்பவில்லை போலும் என அவர் சொல்லிமுடித்தார்.

அங்குவந்த கல்யாணத் தரகரும் இதனை ஒரு பொருட்டாகத் தான் எண்ணாததால் மாப்பிள்ளை வீட்டாருக்கு அறிவிக்கவில்லை என்பதைக்கூறி முடித்தார். இது என்ன புதுக்குழப்பம்... அவளுக்கு ஏன் இந்தப் போராட்டம்...? தயாவின் தலை சுக்குநூறாய் வெடித்து சிதறியதான ஓர் பிரமை.

திருமணம் என்றால் பெண்களுக்கு சவால்தானா..?. விண் என்று கன்னங்களில் வலி எழும்ப இரு கைகளாலும் அதைப் பொத்தியவாறு தரையினில் விழுந்தாள். விழுந்தவள் விழுந்ததுதான். இதுவரையில் அவள் எழவேயில்லை.

தூய்மை கெடாத அவளை சமூகம் அசிங்கமாக பார்ப்பதை அவள் உணர்ந்தாள். அதனால் வெறுமை அடைந்து துயர்த் தீக்குள் தள்ளப்பட்ட அவளுக்குள் மறைந்திருந்த வியாதிகள் எல்லாம் மழைத்துளி கண்ட விதைபோல முளைத்தெழுந்தன.

அவள் கொழும்பில் வேலை பார்த்த காலங்களில் உணவை மறந்து தூக்கம் துறந்து உழைத்த களைப்பின் விளைவே இது.

"நீ இதை எடுத்துச்சென்று படித்து முடிப்பதற்குள் இங்கு நான் உயிருடன் இருப்பது அரிது என அக்கடிதத்தில் குறிப்பு எழுதப்பட்டிருந்தது.

படித்து முடித்த சுபா ஓடினாள்... ஓடினாள் ... அதே வாட்டுக்கு ஓடினாள், தேடினாள், அந்தக் கட்டிலில் அவள் இல்லை.


(யாவும் கற்பனையே)

ஊரோடி



க்ரைம் CRIME

# சினிமாப் பாணியில் யாழில் நடந்தது கடத்தல்



"என்னதான் சட்டம், ஒழுங்கு அமுல்படுத்துவதில் பொலிசார் தீவிரமாக ஈடுபடுகின்ற போதிலும் இவ்வாறு இஸ்டத்துக்குச் திட்டம்போட்டு குற்றங்களை அரங்கேற்றுகின்ற தற்துணிவு எவ்வாறு எமது சமூகத்திற்குக் கிடைத்தது என்று பார்த்தால், பலரது கரங்களும் நீள்வது ஒரே திசையில்தான். நாகரிகத்தின் வளர்ச்சியால், தொழில்நுட்பத்தின் ஆதிக்கத்தால் வீடுகளை ஆக்கிரமித்திருக்கின்ற தொலைக்காட்சிகளினூடாகத் தினமும் காட்சிப்படுத்தப்படுகின்ற திரைப்படங்களும், தொடர் நாடகங்களிலும் காண்பிக்கப்படுகின்ற குற்றங்களும், பழிவாங்கும் வழிமுறைகளும், எமதுசமூகத்திலும் அவ்வாறான மனோபாவத்தை உருவாக்கி விட்டிருக்கின்றது."

**யாழ்ப்பாணம்** நல்லூர் பண்டாரிக்குளம் பகுதியில் வசித்து வருபவர் பஞ்சலிங்கம் சிவகௌரி. யாழ்.நகரப் பாடசாலை ஒன்றில் க.பொ.த. சாதாரண தரம் பயின்று வருகின்றார். இவர் கடந்த 09 ஆம் திகதி தனது வீட்டிற்கு அருகில் உள்ள கடையில் கற்பூரம் வாங்குவதற்காகச் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது திடீரென தோன்றிய, சுற்றிவர மறைப்புத் திரையிடப்பட்ட முச்சக்கர வண்டியில் வந்த மூவர் சிவகௌரியின் தலைமுடியைப் பிடித்து இழுத்து ஆட்டோவில் வலுக்கட்டாயமாக ஏற்றினர்.

பின்னர் சிவகௌரி அணிந்திருந்த பஞ்சாபியின் சால்வையாலேயே அவரின் கைகளைக் கட்டினர். கூக்குரலிட்டு சத்தம் எழுப்பாமல் இருப்பதற்காக வாயை இறுக்கக் கட்டிக்கொண்டனர். மிக வேகமாக ஆட்டோ ஓடியது. கண்கள் கட்டப்படாதபடியால் ஆட்டோ செல்கின்ற திசையை அவதானித்துக் கொண்டிருந்தார் சிவகௌரி. ஆட்டோ வல்வைச் சந்தியூடாகச் சென்று கொண்டிருந்தபோது போக்குவரத்துப் பொலிசார் அவ்விடத்தில் வாகன சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

பொலிஸாரைக் கண்டவுடன் கடத்தல்காரர்கள் சிவகௌரியின் கழுத்தில் கத்தியை வைத்து "சத்தமிட்டால் குத்தி கொலை செய்துவிடுவோம்" என்று மிரட்டினர். பயமிகுதியால் மிரண்டு போயிருந்த சிவகௌரியால் சத்தம் எழுப்ப முடியவில்லை. கடத்தல்காரர்களின் அதிர்ஷ்டம் போக்குவரத்துப் பொலிசாரும் ஓட்டோவை மறிக்காது செல்ல அனுமதித்துவிட்டனர்.

அவர்கள் வல்லை வெளியூடாக நெடுந்தூரம் சிவகௌரியை கொண்டு திரிந்த கடத்தல்காரர்கள் அவர் அணிந்திருந்த சங்கிலி, மோதிரம், தோடு என சுமார் மூன்று பவுணுக்கு மேற்பட்ட நகைகளையும் அபகரித்துக் கொண்டனர். தலைமுடியின் ஒரு பகுதியையும் வெட்டி எடுத்துக் கொண்டனர்.

பின்னர் சனநடமாட்டம் இல்லாத பகுதியில் ஆட்டோ சென்று கொண்டிருந்தபோது, சிவகௌரியைத் தூக்கி வீதியில் எறிந்துவிட்டு கடத்தல்காரர்கள் தப்பியோடிவிட்டனர்.

சிறிதுநேரத்தில் தன்னை சுதாகரித்துக் கொண்ட சிவகௌரி வல்லைவெளியின் வெட்டவெளியில் நெடுந்தூரம் நடந்துசென்று ஒரு குடியிருப்பை அடைந்தார்.

அங்குள்ள வீடொன்றில் இருந்தவர்கள் ஏற்கெனவே சிவகௌரிக்கு அறிமுகமானவர்களாக இருந்தமை சிவகௌரிக்கு ஆறுதலாக இருந்தது.

அவர்கள் சிவகௌரியின் வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு செல்கின்றமையால் சிவ கௌரிக்கு அவர்களுடன் அறிமுகம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் சிவகௌரியின் பெற்றோருக்கு சம்பவத்தை அறிவித்ததைத் தொடர்ந்து சிவகௌரி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், பொலிசிலும் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தக் கடத்தலின் சூத்திரதாரிகளாக அச்சுவேலிப் பகுதியில் வசிக்கின்ற பெண்ணொருவரும் இரண்டு ஆண்களுமே சம்பந்தப்பட்டிருப்பதாக சிவகௌரி பொலிசாருக்குத் தெரிவித்திருந்தார். இதையடுத்து அச்சுவேலியில் வசிக்கும் 65 வயது நிரம்பிய குறித்த பெண்ணை யாழ். பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஏனைய இருவரைக் கைது செய்வதற்கான முயற்சிகளில் பொலிசார் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

அத்துடன் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி குறித்த கடத்தலானது தனிப்பட்ட பகையினால் நடாத்தப்பட்டதாகத் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் பொலிசார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் நாம் எங்குசென்று கொண்டிருக்கின்றோம் என்ற அச்ச உணர்வையும் எம்மை நாமே கேள்வி கேட்கவேண்டிய நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்துகின்றது. பருவப்பெண்களை மிகவும் பாதுகாப்பாக கட்டிக்காத்து வளர்த்த சமூகம், சொந்தப் பகைக்காகவும் குறுகிய நோக்கங்களுக்காகவும் அவரைப் பகடைக் காய்களாகப் பார்க்கின்ற கீழ்த்தரமான நிலைக்கு சென்றுகொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

என்னதான் சட்டம், ஒழுங்கு அமுல் படுத்துவதில் பொலிசார் தீவிரமாக ஈடுபடுகின்ற போதிலும் இவ்வாறு இஷ்டத்துக்குச் திட்டம் போட்டு குற்றங்களை அரங்கேற்றுகின்ற தற்துணிவு எவ்வாறு எமது சமூகத்திற்குக் கிடைத்தது என்று பார்த்தால்,

பலரது கரங்களும் நீள்வது ஒரே திசையில்தான். நாகரிகத்தின் வளர்ச்சியால் தொழில்நுட்பத்தின் ஆதிக்கத்தால் வீடுகளை ஆக்கிரமித்திருக்கின்ற தொலைக்காட்சிகளினூடாகத் தினமும் காட்சிப்படுத்தப்படுகின்ற திரைப்படங்களும், தொடர் நாடகங்களிலும் காண்பிக்கப்படுகின்ற குற்றங்களும், பழிவாங்கும் வழிமுறைகளும் எமது சமூகத்திலும் அவ்வாறான மனோபாவத்தை உருவாக்கி விட்டிருக்கின்றது. இந்த நிலை தொடர்ந்து சென்று எமது சமூகத்தைச் சீரழிப்பதில் இருந்து தடுப்பதற்கு, நீதித்துறையும் நீதியின் காவலர்களான பொலிசாரும் குற்றத்துக்குக் காரணமானவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை உறுதிப்படுத்துவதோடு அதுபற்றிய செய்திகளை மக்களுக்கு அறியச்செய்து தண்டனை பற்றிய அச்சத்தையும் குற்றச்செயல்கள் பற்றிய விழிப்பையும் ஏற்படுத்துவது அவசியமாகும்.

# இலங்கையில் கறுப்பும் வெள்ளையுமாகக் காட்சியளிக்கும் சமூக சகவாழ்வு!

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

"நாட்டில் அரசியலுக்குள் ஊறிப்போயிருந்த சாக்கடைக் குணங்கள்தான் நமது பொன்னான வளம் மிக்க தேசத்தை சுடு காடாக மாற்றிவிட்டிருந்தது. ஒப்பற்ற உயிர்களும் தேடிய தேட்டங்களும் அழித்தொழிக்கப்பட்டிருந்தன. அகதிகள், அநாதைகள், அங்கவீனர்கள், ஆதரவற்றோர், விதவைகள் என்ற சோக வார்த்தைகளுக்கு நாம் சொந்தமாக்கப்பட்டோம். துயரம் நம்மைத் தொடர்ந்தது. இப்பொழுதும் தொடர்கின்றது. இந்த இழிநிலைக்கு என்ன காரணம் என்பதை நாம் இனிமேலாவது ஒரு கணப்பொழுது நின்று நிதானித்து ஆற அமரச் சிந்தித்தால் என்ன ?"

**இலங்கையில்** சமூக இணக்கப்பாடு என்பது சாண் ஏற முழம் சறுக்கும் கதையாகவே அமைந்து விட்டது. ஒருபுறத்தில் இயல்பாகவே சமூகங்களுக்கிடையிலான இன சௌஜன்யமும் சகவாழ்வும் நடந்து கொண்டிருந்தாலும் அது இன்னொருபுறத்தில் விஷம சக்திகளால் திட்டமிட்டு சீர் குலைக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றது.

இது அரசியலில் தொடங்கி நிர்வாகம் வரையிலும் நடக்கின்றது. கறுப்பும் வெள்ளையுமாகத் தோன்றும் இந்த தெளிவற்ற நிலைப்பாடு காரணமாக நாம் அனுபவிக்கவேண்டிய அமைதியும் ஆனந்தமும் எங்கோ ஓடி மறைந்து துயரமும் சோகமுமே நம்மீது ஒட்டிக் கொண்டுள்ளது.

நாட்டில் அரசியலுக்குள் ஊறிப்போயிருந்த சாக்கடைக் குணங்கள்தான் நமது பொன்னான வளம்மிக்க தேசத்தை சுடுகாடாக மாற்றிவிட்டிருந்தது.

ஒப்பற்ற உயிரகளும் தேடிய தேட்டங்களும் அழித்தொழிக்கப்பட்டிருந்தன. அகதிகள், அநாதைகள், அங்கவீனர்கள், ஆதரவற்றோர், விதவைகள் என்ற சோக வார்த்தைகளுக்கு நாம் சொந்தமாக்கப்பட்டோம். துயரம் நம்மைத் தொடர்ந்தது. இப்பொழுதும் தொடர்கின்றது.

இந்த இழிநிலைக்கு என்ன காரணம் என்பதை நாம் இனிமேலாவது ஒரு கணப்பொழுது நின்று நிதானித்து ஆறஅமரச் சிந்தித்தால் என்ன?

மனித வாழ்க்கை ஆகக் கூடிப்போனால் நூறு வருடங்கள்தான். புறநடையாக ஒரு சிலர் தள்ளாத காலத்தில் ஊசலாடிக் கொண்டு உயிர் பிழைத்திருக்கக் கூடும். இதற்கு மேல் யாரும் இங்கே உயிர் வாழ்வோம் என்று இந்த உலகத்தில் உரிமை கோர முடியாது.

இன்று பிறக்கப்போகும் பச்சிளம் பாலகன் உட்பட இப்பொழுது உலகில் இருக்கும் எழுநூறு கோடிப் பேரும் இன்றிலிருந்து நூறு வருடத்தில் இந்த உலகைவிட்டே மண் மறைந்திருப்பார்கள்.

இப்பொழுதிருப்பவர்களுக்குப் பதிலாக இன்னொரு புதிய சமூகத்தார் இந்த உலகத்தை ஆளத்தான் போகின்றார்கள். இது நாம் விரும்பியோ, விரும்பாமலோ இயல்பாகவே நடந்து விடும். இதுதான் உலக நியதி.

இத்தனைக்கும் மத்தியில்தான் இங்கே எத்தனை போராட்டங்கள். ஒருவருக்கு இன்னொருவர் சதிசெய்து கொண்டும் தீங்கிழைத்துக் கொண்டும் வாழப் பழகிக் கொண்டுள்ளோம்.

மனநிலையில் நாங்கள் மாறுபட்டு நிற்கின்றோம். மனிதாபிமானக் கடமையை மறந்து அதிகார மமதையால் ஆணவம் பிடித்தலைகின்றோம்.

சிறுபான்மை, பெரும்பான்மை, அரசன், ஆண்டி என்ற பாகுபாடுகள் நம்மை அழிவுக்குத்தான் இட்டுச் செல்கின்றன. எதிர்கால சந்ததிக்கு பாதுகாத்துப் பக்குவமாய்க் கொடுக்கவேண்டிய தேசத்தின் சொத்துக்களை நாம் துவம்சம் செய்கின்றோம்.

மனித மனங்களில் குடிகொண்டுள்ள மனிதாபிமானமற்ற இழி குணங்களால்தான் நாம் அகதிகளாகவும், விதவைகளாகவும், அநாதைகளாகவும், அங்கவீனர்களாகவும் அலையநேர்ந்தது. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. சுக வாழ்வு பறிபோனது.

நடந்ததை எல்லாம் ஒரு தீய கனவாக மறந்து, மீண்டும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பவும் நாம் ஆனந்தமும் அமைதியும் நிறைந்த வாழ்வு வாழவும் நமக்கு இப்பொழுது ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

நாட்டில் இடம்பெற்ற இனத்துவமான வன்முறைகள் நம்மையெல்லாம் சீரழித்திருந்தது. அதன் எச்சசொச்சங்கள் இன்னமும் அழியாக் கறைகளாய்ப் படிந்திருக்கின்றன.

இப்பொழுது நம் எல்லோர் முன்னிலையிலும் இருக்கின்ற பணி இந்தக் கறைகளைத் துடைத்தெறிவதாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த முயற்சிகளும் கடந்த காலத்தைப் போன்று கறுப்பும் வெள்ளையுமாகத் தோன்றுவதுதான் கவலையளிப்பதாக உள்ளது.

அரசியல் மட்டத்திலும் நிர்வாக மட்டத்திலும் ஆன்மீக மட்டத்திலும் இந்தப் பணிகள் சமாந்தரமாக ஏக காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆயினும் அரசியல் மட்டத்தில்தான் இனப்பாகுபாட்டிற்கான அடித்தளமிடப்பட்டது என்ற வரலாறுகள் நமக்குப் புகட்டப்பட்டிருந்தாலும் இப்பொழுது ஆன்மீக மட்டத்திலும் எழுந்துள்ள அசிங்கமான சிந்தனைகள் உற்றுக் கவனித்தால் அது நாட்டை மீண்டுமொரு அழிவுக்கு இட்டுச் செல்லுமா என்ற அங்கலாய்ப்பு உள்ளது.

எனவே இத்தகைய குரோதவிரோத செயற்பாடுகளை நாட்டிலுள்ள சட்டம் ஒழுங்குகளைக் கடைப்பிடித்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அரசியல் அதிகாரத் தரப்பினர் முயலவேண்டும். கடைசி வரையும் நாட்டு மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய ஒரே ஒரு இடம் நாட்டிலுள்ள சட்டமும் ஒழுங்கும்தான்.

அந்த சட்டம்,ஒழுங்கு நிர்வாகத்திலும் சறுக்கல்கள் ஏற்படுமாக இருந்தால் நாட்டு மக்களிடையே அச்சமும் பயமும் மேலோங்கும். அதைவிடப் பயங்கரம் வேறொன்றும் இருக்க முடியாது. எனவே இந்த விடயத்தில் எல்லோரும் இணைந்து செயற்படவேண்டும்.



"பேரழகி பத்மினி
என்னிடம் வரவேண்டும்
தன்னையே தரவேண்டும்!"

டில்லிக் கோட்டையை
முற்றுகையிட்ட அலாவுதீன்
ஆணையிட்டான்!
டில்லி மன்னரின் இளம்
மனைவி பத்மினி
டில்லி மன்னர்
அலாவுதீன் படைகளால்
கைது செய்யப்பட்டார்!

"சித்தூர் கோட்டை சிதறாமல்
இருக்க வேண்டுமானால்
சித்தூர் ராணி பத்மினி
வெளியே வரவேண்டும்!"
அலாவுதீன் வெற்றிப்
போதையில் விங்கிக் கத்தினான்!

பத்மினி பார் புகழும் பேரழகி!
படைத்தவன் வஞ்சகம்
செய்யாமல் வடித்தெடுத்த
தந்தச் சிலை! நேரில்
சந்தித்ததில்லை சித்திரத்தில்
கண்டிருக்கிறான்!

"சித்திரமே – இப்படி சொக்க
வைக்கிறதே!" என்று
வியந்திருக்கிறான்!

சித்திரத்தில் கூட இதழ்களில்
– எப்படி தேனூறுகிறது?"
என்று மயங்கியிருக்கிறான்!

"பூரித்த கனியிரண்டை
காணக் கண்ணிரண்டு
போதவில்லையே என்று
வருந்தியிருக்கின்றான்!"

"சுவை தரும் கனியிரண்டை
கொய்வது எந்நாளோ?" என்று
ஏங்கியிருக்கிறான்!
மாதுளம் பூ நிற மேனியில்
மன்மத ராகம் மீட்டுவது
எந்நாளோ?" காமம்
தலைக்கேற ஜாமம் முழுக்க
விழித்திருக்கிறான்!

" கோட்டையை பிடித்து
கோமளவல்லியை – பஞ்சு
மூட்டையாகக் கொண்டு
வருகிறேன்!" என்றுவிட்டு
புறப்பட்டான்! பறந்த
குதிரைகளின் குளம்படி
எழும்பிய புழுதியிலும் மறைந்து
போகவில்லை அவள் முகம்!

குமுத மலர் வாயில் குடிக்க
வேண்டும் அமுதம்! கமுகு
மரத் தோளில் வழுக்கிவிழ
வேண்டும்! சங்கு நிகர் கழுத்தில்
கொஞ்சி மகிழ வேண்டும்!

பொங்கு கடல் போல குமுறியது
காமம்! தங்குதடையின்றி
தாவியது மனம்! டில்லி
மன்னரின் கோட்டை
வீழ்ந்ததும் மகிழ்ச்சியில்லை!

டில்லி மன்னர் கைதானதும்
களிப்பில்லை! பத்மினி
எங்கே? பதுமை எங்கே?
அலாவுதீன் விழிகள்
அவளைத்தான் தேடின!

"வெற்றிக் கனி சுவைத்து
அலுத்துவிட்டது! அவளே கனி
சுவைக்க ஆசையாக
இருக்கிறது!" மடல் ஒன்று
அவன் கரம் சேர்ந்தது!




"சுல்தானுக்கு வணக்கம்!
பத்மினி எழுதுவது, உம்மை
மணக்க எனக்கு சம்மதம்!
உமது ராணியாக
மாறப்போவதால் ஒரு
விண்ணப்பம்!

என் தோழிகளுடன்
எம் உடமைகளை
ஏற்றிக்கொண்டு பல்லக்கில்
வருகிறோம்!
வழியில் யாரும்
குறுக்கிடாதிருக்க
வேண்டும்!"

மடல் படித்தவன்
வானத்தில் பறந்தான்!
கைக்குள் வருகிறது
கட்டழகுப் பெட்டகம்!

ஆராய்ந்தும் பார்க்கலாம்
உராய்ந்தும் பார்க்கலாம்!
அணைத்தும் கொள்ளலாம்
நனைத்தும் கொள்ளலாம்!

சுவை பல அறியாமல் சுளை
என அள்ளலாம்! கனவு
முகடுகளை
அலாவுதீன்
உரசினான்!
பல்லக்குகள்
வந்தன.
இன்னொரு
விண்ணப்பமும்
வந்தது!

"என் கணவர்
பீம்சிங்கை
ஒரு தடவை
காண வேண்டும்!"
அலாவுதீன் மறுக்கவில்லை
அனுமதி கொடுத்தான்!

"பிரியாவிடை போலிருக்கிறது
பெற்றுக் கொள்ளட்டும்!" என்று
நினைத்தான்! தன் காதருகே
வளைகரம் சிணுங்கும்
ஓசைக்காக காத்திருந்தான்!

கேட்டது சத்தம் வளைகரச்
சத்தமல்ல வாட்கள் உராயும்
சத்தம்! பல்லக்கில் வந்தது
பேரழகியல்ல பேராபத்து!

"சூழ்ச்சியால் என்னை
கருக்கி விட்டாளே!"
கொதித்தான் அலாவுதீன்"

கைதான மன்னன்
பீம்சிங்கும் தப்பினான்!
அடங்காத கோபத்தோடு
ஆணையிட்டான் சுல்தான்!

"சித்தூர் கோட்டை சிதறுண்டு
போகட்டும் எதிரிகள்
தலை எதுவும் கழுத்தில்
இருக்கக்கூடாது!" கடும்
போர்! கொடும் போர்!
கோட்டைக்குள் புகுந்தான்
அலாவுதீன்!

அவன் அங்கு கண்டது
தித்திக்கும் அழகியை யல்ல!
எத்திக்கும் பரவும் தீயை!
அந்தப்புரத்தில் தீமூட்டிக்
கொண்டு சுந்தர அழகி
நீறாகிப் போனாள்!

எந்த மேனியை சுல்தான்
தீண்ட வந்தானோ அந்த
மேனியை தீ தின்று
முடித்தது "ஐயோ!
பத்மினி!" அலாவுதீன் தன்.
வாழ்க்கையில் முதல்
முறையாக உடைந்தழுதான்!

"போரிலே வென்றேன்
பெண்ணே உன்னிடத்தில்
தோற்றுப் போனேன்!"
மார்பில் அடித்துப்
புலம்பினான்.
நான் என்ன வீரன்
நான் என்ன விவேகன்?

கண்ட இடமெங்கும் மனதை
மேயவிட்டு கட்டறுத்த
மாடாய் அலையவிட்டு
தொட்டழிக்க நினைத்தேன்
கட்டாய காதல் கொண்டு!
மந்திரத்தால் மாங்காய்
விழாது! கட்டாயத்தால்
காதல் வராது!

அலாவுதீன் கைப்பற்றிய
கோட்டையை கைவிட்டு
சென்றான்! அவள்
நினைவாக இதனை
விட்டுச் செல்கிறேன்!
கண்ணீரோடு விலகினான்.

"சென்ற இடத்தில் செலவிடா
–தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு!"

அதிகாரம்:43 – குறள்:422




@ சிந்தியா! 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான சர்ச்சைகளுக்கு முடிவே இருக்காது போல் தெரிகிறதே?

மு.சர்வேஸ்வரன்.
அரியாலை.

13ஆவது திருத்தச் சட்டத்தை வலிமையற்றதாக்கும் திருத்தத்தை என்ன விலை கொடுத்தேனும் அமுல்படுத்த இனவாதிகள் தயாராகிவிட்டார்கள். அதைத்தடுத்து 13ஆவது திருத்தத்தைப் பாதுகாக்க எவரும் எத்தகைய விலையையும் கொடுக்கத் தயாராக இருப்பதுபோல் தெரியவில்லை. அதிகாரத்திலிருப்பவர்கள் என்ன நினைக்கின்றார்களோ அதுதானே எந்த நாட்டிலும் சட்டமாகிறது.

@ சிந்தியா! வெளிநாடு செல்வதற்காக பணத்தை வெளிநாட்டு முகவர்களிடம் கொடுத்து ஏமாறுபவர்களை என்ன செய்யலாம்?

கு.சிந்துஜன்.
திருகோணமலை.

அது ஒரு கலாசாரமாகியுள்ளது. அதைத் தடுத்து நிறுத்த முடியாது. "திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பது போல் வெளிநாட்டு மோகமும், ஏமாந்து போவதற்கான தலையெழுத்தும் இருக்கின்றவர்கள் இருக்கின்றவரை, தெருநாய்கள்கூட முகவர்களாகும்.

@சிந்தியா! முன்கோபம் வருபவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம். அதற்கு ஒரு வழிசொல்லுங்கள்?

ஆ.சாகித்தியன்.
மட்டக்குளிய.

முன்கோபம் இருப்பவர்களிடம் நல்ல அன்பு கொண்ட உள்ளமும் இருக்கும். வஞ்சகர்கள் கோபப்படமாட்டார்கள். முன்கோபிகள் வஞ்சம் தீர்க்கமாட்டார்கள். தண்டனை கொடுப்பதற்கு முன்னர் மற்றவர்களை எந்தளவுக்கு புரிந்து கொண்டீர்கள் என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

@சிந்தியா! யாழ். வலி. வடக்கில் இடம் பெயர்ந்த மக்கள் நடுத்தெருவில் நிற்கும் சூழ்நிலைக்கு தள்ளப் பட்டுள்ளார்களே..?

மா.ஆதவன்.
பூவரசங்குளம்.

அந்த நிலையை தடுத்து நிறுத்துவதற்கு தேவையான அரசியல் பலம் தமிழ் மக்களிடம் உண்டு. ஆனால் அது செயற்திறன் அற்றவர்களிடமல்லவா உள்ளது. தமிழ் மக்கள் போராட்ட காலத்தில் மௌனமாக இருந்து எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வதுபோல் இருந்த தவறுக்கான அறுவடையை அனுபவித்தோம். இப்போது அரசியல் சூழலில் உணர்ச்சியின் பெயரால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் எடுக்கின்ற தவறான தீர்மானத்திற்கான அறுவடையை அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்களோ என்றுகூட சிலர் கூறுகின்றார்கள். நம்மை தெருவில் நிறுத்தியதும் தமிழ் தேசிய உணர்வுதானே அதற்காக நாம் கவலைப்படக்கூடாது. தெருவில் நிற்பதால்தான் நம்மை மறத் தமிழன் என்று கூறுவார்களோ?

@சிந்தியா! இலங்கை இராணுவ அதிகாரிகள் இந்தியாவில் பயிற்சி பெறுவதை ஜெயலலிதா தடுப்பது ஏன்?

எம்.சபீனா.
தர்ஹாநகர்.

அதுவும் ஒருவகையான ஈழத் தமிழ் உணர்வுதான் என்கின்றனர். அங்கே பகையும், இங்கே உறவுமாக ஈழத் தமிழர்களின் உணர்வுகள் படாத பாடுபடுகின்றது.

@சிந்தியா! பேஸ்புக் இணையத்தளத்தால் இளசுகள் தீயவழிக்கு செல்லும் போக்கு அதிகரித்துக்கொண்டு வருகிறதே...

து.மாலி.
கண்டி.

ஏதோ பேஸ்புக் வந்ததால்தான் இவர்கள் தீயவழிக்குச் செல்வதுபோல் நீங்கள் கூறுவது கொஞ்சம் வேடிக்கையாகவுள்ளது. வேறு என்னென்ன காரணங்கள் இளசுகளை தீயவழியில் இட்டுச் செல்கின்றன என்பதையும் கொஞ்சம் தேடிப்பாருங்கள்.

@சிந்தியா! காதலுக்காக பெற்றோரை இழக்கும் பிள்ளைகளை என்ன செய்ய முடியும்?

அ.கார்முகிலன்.
பூநகரி.

காதல் என்றாலே பெற்றோர் எதிர்ப்பதும், பிள்ளைகள் அதையும் தாண்டி காதல் மோகத்தில் எல்லைகளைத் தாண்டி முயற்சிப்பதும் இயல்புதான். அதற்காக பெற்றோரை கொலை செய்யுமளவுக்கு பிள்ளைகள் போவது காதலாகாது. காதல் யாரையும் கொலை செய்யச் சொல்லவில்லை. காதலின் பெயரால் பெற்றோரை வெறுப்பதும், கொலைகள் செய்யத்துணிவதும், அழியாத களங்கத்தை ஏற்படுத்தி பெரும் அசிங்கத்தையும், அவமானத்தையும் தந்துவிடும். மட்டக்களப்பில் நடந்தது நல்ல உதாரணம்.

@சிந்தியா! 'பொம்பிள என்றால் அடங்கி நடக்கவேணும்' என்கிறது ஆண்வர்க்கம். அப்படியெனின் ஆண்களின் அடக்கம் என்ன?

அ.யசோதினி.
வவுனியா.

அடங்கி நடக்கும் பெண்மை பாதுகாத்துக் கொண்டு அதை மதித்து நடக்கவேண்டும். அதுதான் நல்ல ஆண்மையின் அடக்கமும், அடையாளமுமாகும்.

@சிந்தியா! பிரெஞ் ஓப்பன் டெனிஸில் 8 முறை சம்பியன் பெற்று ஸ்பெயின் வீரர் நடால் சாதனை படைத்துள்ளாரே..?

சி.யசிந்தன்.
காலி.



நடால் திறமையான வீரர். அதில் சூதாட்டத்துக்கு இடமில்லை. டெனிஸ் விளையாட்டில் உலக அரங்குக்கு பல வீரர்கள் வரவேண்டும். அது எளிதான காரியமல்ல. அதுவரை நடால் ஒரு சிலரே தொடர்ந்து பிரகாசிப்பார்கள். அதில் ஆச்சரியமில்லை.


ஸ்ரீ ராம ஜெயம்

# மலையாள மாந்திரிக சக்தி



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவரெலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

# காதிலை பூ கந்தசாமி




**வணக்கமுங்கோ. பதின் மூன்றாவது திருத்தத்திற்கு கடுமையாக உடம்புக்கு சரியில்லையுங்கோ. ஹாட்டில ஒரு ஒப்ரேசன் செய்யவேணுமாமுங்கோ, பிறகு கிட்னியிலயும் சின்னதா ஒரு கட்டிங் செய்யவேணுமாமுங்கோ.**

பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையான உடல் பரிசோதனை செய்த டாக்குத்தரிடமே கேட்டேனுங்கோ அவர் என்ன சொன்னவர் எண்டதை நீங்களும் படியுங்கோவன்.

**நான்:** டாக்குத்தர் பதின்மூன்றாவது திருத்தத்தின்ர நிலைமை எப்புடி இருக்குது?

**டாக்:** அதுக்கு 13 எண்ட எண் செட்டானதே அவ்வளவாக பொருந்திப் போகவில்லையுங்கோ. அதுதான் அதுக்கு தொடர்ச்சியாக காச்சலும், தடிமனுமாக இருக்குதுங்கோ. அது மட்டுமில்லையுங்கோ, அதுக்கு மூளையிலையும் சின்னதாக ஒரு டியுமர் இருக்குமெண்டு ஒரு டவுட்டாக இருக்குதுங்கோ.

**நான்:** வடக்கு, கிழக்கு தவிர்ந்த மாவட்டங்களிலை அது சுகமாகத்தானே இருக்குதுங்கோ?

**டாக்:** ஏன் கிழக்கிலையும் லேசான காச்சலோடை இருக்குதுதான். வடக்குப் பக்கம்தானுங்கோ அதுக்கு ஒத்துவருகுதில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில பெரிசாக நினைக்கவில்லையுங்கோ. லேசா இருமல், தலைவலிதானுங்கோ வந்தது. அதை சமாளிச்சுக் கொண்டாங்கள்.

**நான்:** டாக்கு.. நீங்க அப்புடிச் சொன்னாலும் ஆரம்பத்தில பதிமூனு ஆரோக்கியமாகத்தானே இருந்திச்சுது?

**டாக்:** அது உண்மைதானுங்கோ. ஆரோக்கியமா இருந்ததை ஈ.பி.ஆர்.எல்.எப். சரியாக பராமரிக்கவில்லை, உங்கட தம்பி பிரபாகரன் கேன்சர் வாறளவுக்கு நோயை கொடுத்துப் போட்டார். அது என்ன வடிவேலுவா நீங்கள் எவ்வளவு தாக்கினாலும் வலிக்காத மாதிரியே நடிக்கிறதுக்கு.

**நான்:** அப்புடினா... டாக்குத்தரே பதின்மூன்றாவது திருத்தத்தை சுகப்படுத்த வைத்தியமே இல்லையாங்கோ?

**டாக்:** ஏன் இல்லை... அதுதான் பொலிரிக்ஸ்ஸில டாக்குத்தர் பட்டம் வாங்கிக் கொண்டவர்கள், பதின்மூன்றுக்கு ஒப்ரேசன் செய்யப்போகினமே. பாராளுமன்றந்தானுங்களே பதின்மூன்றுக்கு ஒப்ரேசன் தியேட்டர். அங்கு வைத்துத் தானுங்கோ ஒப்ரேசன் நடக்கப்போகுது.

அந்த ஒப்ரேசனில பதின்மூன்றுக்கு மூளை, ஹாட் மற்றும் கிட்னி ஒப்ரேசன் செய்து பதின்மூன்றை நிரந்தர சீக்காளியாக்கிப் போடுவாங்களுங்கோ. பிறகு பதின்மூன்று கொஞ்சம் கொஞ்சமாக அழுந்தி செத்துப் போயிடுமுங்கோ.

**நான்:** நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால் பாராளுமன்றத்தில பதின்மூன்றுக்கு நடக்கவிருக்கிற திருத்த ஒப்ரேசனுக்குப் பிறகு பதின்மூன்று கோமாநிலைக்குப் போகும் இல்லாட்டில் அங்கங்கள் செயல் இழந்து தள்ளுவண்டியில வைச்சுத் தள்ளிற நிலைமையை அடையும் எண்டு சொல்லுறியளோ?

**டாக்:** மனுசனுக்கு நடக்கிறது நோய் குணமாகிற ஒப்ரேசன், பதின்மூன்றுக்கு நடக்கிறதோ அதை அவுட் ஆக்கிற ஒப்ரேசனுங்கோ. ஏன் இப்புடிச் சொல்லுறன் எண்டாலுங்கோ, ஒப்ரேசன் செய்யப்போற டாக்குத்தர்கள் யார் எண்டு தெரியுமோ, தாடி வச்ச வீரமான டாக்குத்தர், பட்டம் பெற்ற சம்பியன் டாக்குத்தர், கோட்டயில ராஜாவான டாக்குத்தர், இவர்களுக்கு கை உதவியாக முடியை மொட்டை போட்டுக் கொண்டு புதுசா பலப்பரீட்சைக்கு இறங்கியிருக்கிறவர்களுங்கோ. இப்படி ஒரு கூட்டமே கத்தியும், கம்புமாக கிளம்பியிருக்குதுங்கோ.

**நான்:** பதின்மூனுக்கு இப்படி ஒரு ஒப்ரேசன் நடக்கப்போகுதே இதில் சிறுபான்மையின பெரியோர்கள் என்ன செய்யப்போகினம் எண்டதைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் தெரியுமோ?


**டாக்:** எனக்குத் தெரிந்தவரை உங்களுடைய சிறுபான்மை தலைவர்கள் அப்படி ஒண்டும் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. சில பேரின்ர தந்திரோபாயங்களைப் பார்த்தால் அவர்களும் ஒப்ரேசன் தியேட்டருக்குள்ள தங்களுடைய முகத்தை மூடிக்கட்டிக் கொண்டு கத்தி எடுத்துக் கொடுப்பினம்போலை இருக்குதுங்கோ. பதின்மூன்றுக்கு என்ன நடந்தாலும், தங்களுடைய பதவிகளுக்கு ஒப்ரேசன் நடந்திடக்கூடாது எண்டதில ரொம்பக் கவனமாக இருக்கினமுங்கோ.

அட டாக்கு... டாக்கு... உங்களுக்கும் எங்கட பொலிரிக்ஸ் புரிஞ்சு போயிட்டுதே. பொலிரிக்ஸில இதெல்லாம் சகசந்தானுங்கோவ் ஹி... ஹி... ஹி...

**யாவும் கலப்படமற்ற பொய்**

# உலகை வியக்க வைத்தவர்கள்

## சூரிய ஒளியில் ஒரு ரகசிய ஆயுதம்



"நம் படையெடுப்பு வெற்றி பெற்று, சைகியூஸின் மக்களைக் கொல்ல நேர்ந்தால், ஆர்கிமிடீஸுக்கு எவ்வித அபாயமும் நேரக்கூடாது. வீட்டையும் சேதப்படுத்தக்கூடாது" என்று ஆணை பிறப்பித்திருந்தார் ரோமானியத் தளபதி.

ரோமானிய கடற்படை வில்லெறி தூரத்துக்கு கிரேக்கக் கோட்டையை நெருங்கிற்று. மீண்டும் அந்த ஒளிப்பந்து கோட்டையிலிருந்து தகதகத்தது. ஆனால் இப்போது அதன் ஒளிவெள்ளம் பயங்கரமாக இருந்தது. வெறும் சூரியஒளிப் பிரதிபலிப்பல்ல அது. ஒரே சீராகக் கப்பல்களை நோக்கி தகதகக்கும் ஒளிக்கற்றைகள் பாய்ந்துகொண்டிருந்தன. சில விநாடிகளில் "ஐயோ, நெருப்பு... நெருப்பு" கூக்குரல், கப்பல் தளங்களிலிருந்து எழுந்தது. ரோமானியக் கப்பல்கள் தீப்பற்றி எரியலாயின. ஒருசில விநாடிகளில் ரோமானியப் போர்க்கப்பல்கள் பல, தீபிடித்து எரிந்து நாசமாயின. தாக்குதல் ஏதுமின்றி தங்கள் கப்பல் படையை நாசமாக்கிய கிரேக்கர்களுடைய சாகசத்தின் பின்னால், ஆர்கிமிடீஸின் அறிவு செயற்பட்டிருக்கிறது என்பதை ரோமானியர்கள் அறிந்தார்கள்.

பிரம்மாண்டமான கண்ணாடிகளின் மீது சூரியஒளியைத் தேக்கி, அதைக்குவித்து, கிரேக்கக் கப்பல்கள் மீது திருப்பிவிட்டு தீப்பிடிக்கச் செய்த சாதனையை நிகழ்த்தியவர், கணித மேதை ஆர்கிமிடீஸ்.

ஒரு குறிப்பிட்ட தூரத்தில், வில் எறி எல்லையில்தான் இதை நிகழ்த்த முடியுமானாலும் எதிரிகளைப் பீதி கொள்ளச் செய்தார்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(13.06.2013 தொடக்கம் 19.06.2013 வரை)

### மேடம்

சகோதர சகோதரர்களின் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கக் கூடிய காலமாகும். வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது. கணவன், மனைவிக்கிடையில் அந்நியோந்நியம் அதிகரிக்கும். விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் ஏற்படும். பெண்களுக்கு தூர தேசத்திலிருந்து நல்ல செய்தி வந்துசேரும்.

### இடபம்

உறவினர்களின் திடீர் வரவுகளால் மனத்தைரியமும் பொருள் வரவும் உண்டாகலாம். சகோதர சகோதரிகளுடன் வீண் மனச் சஞ்சலங்களும் பிரச்சினைகளும் உருவாகும். தாய்வழி மாமன் மூலம் சில பிரச்சினைகள் வந்துசேரும். வெளிநாட்டு விசயங்களில் எதிர்பார்த்த நபர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளுடன் மனக்கசப்புகளும் அவர்களால் பணி இடமாற்றமும் ஏற்படலாம். செய்தொழிலில் பங்காளிகளுடன் இருந்த மனச் சஞ்சலங்கள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். பெண்கள் விசயத்தில் அவப்பெயர்கள் ஏற்பட இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லது.

### மிதுனம்

அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். வீட்டைத் திருத்திக் கட்டி அலங்காரம் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துவீர்கள். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன் வாங்குவீர்கள். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் பிரச்சினைகளும் மனக் குழப்பங்களும் வர இருப்பதால் கவனமுடன் இருக்கவும். மற்றவர்களை நம்பி பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். உற்றார் உறவினர்களின் திடீர் வரவால் மனம் மகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். நண்பர்களிடம் இருந்து இருந்த பண உதவிகள் கிடைக்கும்.

### கடகம்

கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தந்தை - மகன் உறவுகளில் வெகுகாலமாக இருந்து வந்த பிரச்சினைகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்கும். நீண்டகாலமாகத் தடைப்பட்டு வந்த குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். வங்கிகளின்மூலம் எதிர்பார்த்து இருந்த பணம் கைவந்து சேரும். காதல் விசயங்களில் நல்ல செய்திகள் வந்து சேரும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### சிங்கம்

குடும்பத்தில் மன அமைதியுடன் சந்தோசம் நிலவும் காலமாகும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படுவதுடன் பொருட்செலவுகளும் ஏற்படலாம். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பொதுத்தொண்டுகளில் ஈடுபடுவோர்கள் மீது வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக இருப்பதால் கவனமுடன் செயற்படவும். உடல்நிலையில் கண், காதுகளில் கவனமுடன் இருந்துவரவும். நீண்டதூரப் பயணங்களைத் தள்ளிப்போடுதல் நல்லது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கன்னி

வெளிநாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும் காலமாகும். கணவன், மனைவி உறவுகளுக்குள் சிறிய பிரச்சினைகளுக்காக வீண் மனக்கசப்புகள் வந்துசேரும். மாமன் வழியின் மூலமாக எதிர்பாராத சில ஆதாயங்கள் அடைவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களுடன் நல்ல மதிப்பெண்களையும் பெறுவார்கள். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் வெகுவாகக் குறைவதன்மூலம் மருத்துவச்செலவுகள் குறைய வாய்ப்புகள் உள்ளது. வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் மற்றவர்களிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த உதவிகள் கிடைக்கும்.

### துலாம்

பெண்களால் வடதிசையில் இருந்து பொருள்வரவுகள் உண்டாகும். நாட்பட்ட அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சம்பந்தம் இல்லாத நபர்களின் உதவியால் வெற்றி பெறுவீர்கள். பொருளாதாரத்தில் இதுநாள் வரை இருந்துவந்த நெருக்கடிகள் மாறி பணப்புழக்கம் நன்றாக இருக்கும். வெகுகாலமாக விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடரும் காலமாகும். உறவினர்களின் வரவுகளால் எதிர்பாராத பணச் செலவுகள் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் கல்வி பயிலும் இடங்களில் சிற்றில சச்சரவுகள்வர இருப்பதால் மிகுந்த கவனமுடன் கல்வி பயிலுதல் சிறந்ததாகும்.

### விருச்சிகம்

நீண்டகாலமாக வராமல் இருந்த கடன் கொடுத்த பணம் பொருட்கள் திரும்பக் கைக்கு வந்துசேரும். வீட்டை திருத்தி கட்டுவதில் கவனம் செலுத்துவீர்கள். குழந்தைகளின் மன மகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்களை மேற்கோண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். காணாமற்போன பொருட்கள் காவல்துறையினரின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். தந்தையின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் சற்று குறையும். கணவன் - மனைவி உறவுகள் நன்றாக இருக்கும். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச்செலவுகள் ஏற்படலாம்.

### தனுசு

கணவன், மனைவி உறவுகளில் இன்னும் சற்று பிரச்சினைகள் வந்து போகலாம். உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கக் கூடிய காலமாகும். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. தங்கம் வெள்ளி போன்ற உலோகப்பொருள் வியாபாரிகள், பூமி சம்பந்தமான நிலபுலன்களை வாங்குவோர் விற்போர்கள், ஹோட்டல் தொழில் செய்வோர்கள் ஆகியோர்கள் நற்பலன்களை அடைவார்கள். வெளிநாடுகள் சென்றுவருதல் போன்ற விசயங்களில் கவனம் தேவை.

### மகரம்

கணவன், மனைவி உறவுகளில் காரணமற்ற வீண் பிரச்சினைகள் உருவாகி மனக்கசப்புகள் ஏற்படலாம். விவசாயம் செய்வோர்கள் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது நீண்டதூரப் பயணங்களின் மூலம் எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்றுவருவார்கள். நண்பர்கள் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். காதல் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நன்றாகும். தந்தை வழிப் பூர்வீகச்சொத்துக்கள் கைக்கு வந்துசேரும்.

### கும்பம்

வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த வங்கி உதவித்தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. புதிய வீடு வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் இன்னும் சிறிது காலதாமதம் ஏற்படலாம். உத்தியோகத்துறையினருக்கு நினைத்த இடங்களில் பணி இடமாற்றமும் பதவிஉயர்வுகளும் உண்டாகும். குடும்பச் சொத்துக்கில் இருந்து வந்த பிரச்சினைகள் இன்னும் சிறிது காலம் நீடிக்கும். விடுபட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரும் காலமாகும். புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பி பணம் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம்.

### மீனம்

உடம்பில் கண், காதுகளில் சிற்சில உபாதைகள் வந்துபோகும். விட்டுப்போன பழைய பிரச்சினைகளால் மீண்டும் தொல்லைகள் வந்துநீங்கும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கல்களில் மாட்டிக்கொண்டு மனநிம்மதியை இழக்காதீர்கள். மாணவர்களுக்கு கல்விபயிலும் இடங்களில் அவப்பெயர்கள் வர இருப்பதால் எச்சரிக்கையுடன் கல்வி பயிலுதல் நல்லது. வீடு மற்றும் தொழிற்சாலைகளைப் புதிய இடங்களுக்கு மாற்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எடுத்துக்கொண்ட முயற்சிகள் நிறைவேறும். நண்பர்களால் பொருள் நஷ்டமும் மனச்சஞ்சலமும் ஏற்படலாம்.



## முயன்றால் முடியும்!

ஜேர்மனியின் வொக்ஸ்வொகன் கார் வடிவம் உலகப் பிரசித்திப் பெற்றது. ஆனால், அந்த காரையோ பாரிய உருண்டையாக மாற்றியுள்ளார் இந்தோனேஷியாவைச் சேர்ந்த கலைஞர் ஒருவர்.

இச்வான் நூர் எனும் இக்கலைஞர் 1953ஆம் ஆண்டின் வொக்ஸ்வொகன் பீட்டில் காரொன்றை இவ்வாறு பாரிய உருண்டை வடிவத்தில் மாற்றியமைத்துள்ளார். அண்மையில் ஹொங்கொங்கில் நடைபெற்ற கண்காட்சியொன்றில் இந்த கார் உருண்டையை இச்வான் நூர் காட்சிப்படுத்தினார். இது முன்னர் வீதியில் ஓடிய கார் என்று நம்புவதற்கு கடினமான வகையில் முழு உருண்டை வடிவில் இக்கார் உருமாற்றப்பட்டுள்ளது. இக்காரின் சமிக்ஞை விளக்குகள் போன்ற சிறிய பாகங்கள் கூட அகற்றப்படவோ, நீக்கப்படவோ இல்லை.

அனைத்துப் பாகங்களையும் உள்தள்ளி அல்லது சற்று வெளித்தள்ளி இந்த உருண்டை வடிவமைக்கப்பட்டுள்ளது. 50 வயதான இச்வான் நூர், ஏற்கெனவே மற்றொரு வொக்ஸ்வொகன் காரை செவ்வகமாக உருமாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## தாய்ப்பாலில் தேநீர் அருந்தும் பாடகி!

இங்கிலாந்தில் தேநீரில் தாய்ப்பால் இட்டு குடிக்கிறார்களாம் தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளரும் பாடகியுமான மைலீன் கலாஸ் குடும்பத்தினர்.

இங்கிலாந்தின் தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளராக, பாடகியாக வலம்வரும் மைலீன் கலாஸ் ஒரு அதிர்ச்சியான ஒரு விடயத்தை பகிர்ந்துகொண்டிருக்கிறார். பாரம்பரியம் என்ற பெயரில் தமது தாய்ப்பாலில் தான் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் தேநீர் போட்டுக்கொடுக்கிறாராம். அப்படியென்ன பாரம்பரியம் என்றால் அவருடைய தந்தை இப்படித்தான் செய்துள்ளாராம். மைலீன் கலாஸின் தந்தை ஒரு இராணுவ அதிகாரி.

அவர் தமது மனைவியின் தாய்ப்பாலில்தான் தேநீர் குடித்தாராம் அதைப் பார்த்து தாமும் அதையே பின்பற்றத் தொடங்கிவிட்டாராம். இதில் எவ்வளவு சந்தோசம் இருக்கிறது தெரியுமா? இந்த பாரம்பரியம் என் பிள்ளைகளுக்கும் தொடரும் என்கிறார் மைலீன். அத்தோடு நிற்கவில்லை மற்றவர்களும்கூட இதை பின்பற்றுங்களேன் என்றும் தெரிவித்துள்ளார்.





## வியக்க வைக்கும் மணல் சிற்பங்கள்





## மாளிகையில் ஓர் பிச்சைக்காரன்!

லண்டனில் தினசரி யாசகம் எடுத்து வாழும் ஒரு பிச்சைக்காரருக்கு சொந்தமாக மாளிகை போன்ற வீடு ஒன்று இருப்பதை அறிந்த நீதிமன்றம், யாசகம் எடுக்க தடை போட்டது.

லண்டனில் Natwest bank வங்கியின் முன் தினசரி 37 வயதான Simon Wright என்ற பிச்சைக்காரர் வங்கிக்கு வருவோரிடம் பிச்சையெடுத்து கொண்டிருந்தார். இதன்மூலம் அவருக்கு தினசரி 300 ஸ்ரேலிங் பவுண்ஸ் வரை வருமானம் கிடைத்தது. மாலை 6 மணியானவுடன் அந்த இடத்தை காலி செய்துவிட்டு விட்டு, Fulham High Street என்ற இடத்தில் உள்ள தனது மாளிகை போன்ற வீட்டிற்கு சென்றுவிடுகிறார். அவருடைய வீட்டின் மதிப்பு சுமார் 300,000 ஸ்ரேலிங் பவுண்ஸ் ஆகும்.கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிச்சையெடுத்துக்கொண்டிருக்கும் இவருக்கு மாளிகை வீடு இருப்பதை அறிந்த ஒருவர் லண்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். மிகவும் வசதியாக இருந்துகொண்டு பொதுமக்களிடம் பொய்கூறி பிச்சையெடுக்கும் இவரை உடனே அகற்றவேண்டும் என்று வழக்கு தொடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த பிச்சைக்காரர் யாசகம் பெறுவதற்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.





## பெருமைக்குச் சொந்தக்காரன்



அம்மாடியோ...! இந்த குரங்கு எடுக்கும் போட்டோ விற்கு எம்புட்டு போட்டி... லண்டனை சேர்ந்த சோதேபை என்ற ஏல நிறுவனத்தில் அரிய வகை பொருட்கள் ஏலம் விடப்பட்டன. இதில் மனிதக் குரங்கு எடுத்த புகைப்படங்கள் 50 ஆயிரம் பவுண்டுக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவைச் சேர்ந்த விடாலி கோமர், அலெக்சாண்டர் மேலமிட் ஆகிய இருவரும் இணைந்து 1990ம் ஆண்டு மிக்கி என்ற மனித குரங்குக்கு புகைப்படம் எடுக்க பயிற்சி அளித்தனர். இந்த குரங்கு ஷ்யா நாட்டின் சேர்க்கஸ் குழு ஒன்றில் சாகசம் நடத்திவந்தது. இந்த குரங்கு எடுத்த தெளிவில்லாமல் தெரியும் மாஸ்கோவின் செஞ்சதுக்கம், சேர்ச் புகைப் படங்கள் மட்டுமல்லாமல், குரங்கின் புகைப்படமும் ஏலம் விடப்பட்டது.

இந்தப் பெருமைக்கு சொந்தமான மனிதக் குரங்கு கடந்த 2007ஆம் ஆண்டு இறந்துபோனது குறிப்பிடத்தக்கது.

## யார் பெத்த பிள்ளையோ...?!

